80—பக்கங்கள்.

ஓம் பரப்பிரம்மணே நம :

அமிர்தகுணபோதினி

பாடசாலை ஆசிரியர்கட்கும் மாணவர்கட்கும் மிகவும் ஏற்றதாய், அறிவை விளக்கி உற்சாகத்தைப் பெருக்கவல்லதான விகடமும், ஆநந்தகரமான அநுபவ விநோத ஞானகலா விலாஸங்களும் நிறைந்திலங்கும் அமிர்தச் சுவையுள்ள உயரிய மாதப் பத்திரிகை.

பத்திராசிரியர்:—திரிசிரபுரம் எஸ். ஜி. இராமாநுஜலுநாயுடு

“எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்
புதுச் சுவை.] திண்ணிய ராகப் பெறின்.” (திருக்குறள்.) [மிகு அநுபவம்

கமலம்-9.	சென்னை பவ ௵ ஐப்பசி ௴ 1 ௳	இதழ்-103.
Vol. 9.	1934-ம் ௵ அக்டோபர் ௴ 17 ௳	No. 103.

ஆநந்த தர்சனம்

“பரமாத்மாவே பந்து” பரமாத்மாவைத் தியானித்தால் ஸம்ஸாரமாகிய துன்பத்தினின்றும் விடுபடலாம். உலகத்தில் அனுபவிக்கும் துன்பங்களுக்கெல்லாம் ஸம்ஸாரமே காரணம். ஸந்யாஸிகளுக்கு அத்தனை துன்பமில்லை. பிள்ளையும் பெண்ணும் தாய்க்கு ஸந்தோஷத்தைக் கொடுத்தாலும் ஒருவிதத்தில் துக்கத்தையும் விளைக்கின்றது. தாயின் யௌவனம் கெட்டுப்போகின்றது. அவளுக்கு முன்னில்லாத கவலை இப்போதுண்டாகிறது. ஒரு புதிய இன்பமுண்டானால், ஒரு புதிய துன்பமும் தோன்றிக்கொண்டேயிருக்கும். இவை ஸம்ஸாரத்தில் நிகழும் ஸம்பவங்களாதலின், விவேகிகள் அதைத் துறந்து ஸந்யாஸிகளாகின்றனர். அப்போதும் மனதைப் பரமாத்மாவிடம் ஈடுபடுத்தினாலன்றித் துக்கம் நீங்காது. ஆகவே, பகவானது பாதாரவிந்தங்களை ஸதா தியானிக்கக் கடவோம்.

ஃ

“வைராக்கியம்” என்பது நிராசையைக் குறிக்கும். எந்தப் பொருளில் நம்முடைய மனம் செல்லுகிறதோ அதில் அபிமானமுண்டாவது வழக்கம். அதாவது, அப்பொருளில் ஆசை, அபிமானம் பிறக்கும். அதனால் அநந்தமான துன்பங்கள் விளையும். இத்துன்பங்களை நிவர்த்திக்க வேறு வழி

மனித விர்த்திக்கு ஒரு முடிவு கிடையாது. ஆனால், வாழ்க்கையின் முடிவு மோசம்போய் ஏமாறுவதாக உளது.

யில்லை. அப்பொருளில் ஆசையற்றிருப்பதற்கு உபாயம் ஒன்றுண்டு அதாவது, அப்பொருள்களில் ஒருவித வெறுப்பை யடைவதேயாம். உதாரணமாக, பாலைக் கண்டதும் அதைப் பருகவேண்டுமென்ற ஆவல் உதிக்கின்றது. விலை கொடுத்து வாங்கினால், பணம் குறைந்துபோயிற்றென்று எண்ணமிடுகிறோம். களவாடிப் பாலைப் பருகினோ கள்வவனாவோமோவென்ற கவலையும் நமது மனதை வாட்டும். இதைவிடப் பாலில் வெறுப்புகொண்டு ஒதுக்கினால் கவலையும் வியஸனமும் அணுகா. "ஓகோ! இந்தப் பாலில் பூனை வாயை வைத்தது; ஏதோ விஷ ஜந்துவின் பல் பட்டது; இதில் எறும்புகள் விழுந்திருக்கின்றன; இது வாய்வு ரோகத்தை யுண்டாக்கும்; சுத்த ஜலத்துக்கு ஸமானம் எதுவுமில்லை"—என்று நிச்சயித்து அதை அலக்ஷியமா யெண்ணினால், கவலை யுண்டாகாது; மனமும் ஸங்கடமடையாது. இதனால் பால் குணமல்லவென்பது நம்முடைய அபிப்பிராயமல்ல. பாலையே இப்படி வெறுத்துத்தள்ள மனவுறுதியுண்டாகுமானால், இவ்விதமே, இவ்வுலக போகங்களனைத்தையும் சிறிது சிறிதாக விலக்கி வைராக்கியமடைந்து பகவத் பக்தியில் ஈடுபடுவதற்குக் கூடுமென்பதே இங்கு நாம் எடுத்துக் காட்டப் புகுந்தது. மனமாகிய மாட்டை அறிவாகிய கயிற்றினால் வைராக்கியமான மூளையிற் கட்டவேண்டும்.

ஃ

"எது சுலபம், எது கஷ்டம்?" இதரர்கட்கு "உன்னை நீ அறிந்துகொள்" என்று உபதேசிப்பது சுலபம்; தன்னைத்தான் அறிந்துகொள்வது கஷ்டம். உண்மையான ஈசுவர பக்தியுடையவர்கள் அந்த ஈசுவரனால் சிருஷ்டிக்கப்பட்ட எதையும் விரோதியார். தமக்குத் துன்பம் இழைப்பதாய்க் காணப்படும் ஜீவராசிகளை விட்டு விலகுவர். அவைகள் வீட்டில் வந்தடைந்தால் வெளியே விரட்டித் தள்ளுவர். இதுதான் ஸாத்வீகர்கள் செய்யும் காரியம். இது சுலபமும் பாவமற்றதுமாகும். எழுதும்போதும், பேசும்போதும் கோபத்தைக் கொள்வது அயுக்தம். அந்நியரை நிந்திப்பது தம்முடைய மௌட்டியத்தை வெளிப்படுத்துமென்பதையும், அது இறுதியில் கஷ்டத்தையே தருமென்பதையும் உணரவேண்டும்.

ஃ

"நன்மையை விலை கொடுத்தேனும் பெறுக" பழைய சோறும், அழுகிய பழமும், துர்நாற்றமடிக்கும் பண்டமும் சாப்பிட யோக்கியமற்றவை. இப்படியே கெட்ட மனத்தினரும், பழகிய திருடனும், துராசாரனும் ஸ்நேகம் செய்ய யோக்கியர்களல்லர். கழுதை சும்மா சுமந்தாலும், அதன் பேரில் ஏறுவரோ? அதை வாகனமாகக் கொள்ளார். அஸ்வத்தையே விலை கொடுத்து வாங்குவர். இப்படியே, நல்லவர்களுடைய நட்பையும் ஆஸ்திகர்களின் கூட்டுறவையும் சிரமப்பட்டேனும் விவேகிகள் அடைவர். துஷ்டர்கள் தம் வீட்டுக்கு வலுவில் வந்து பேசினாலும் அவர்களை வரவேண்டாமென்பர். நன்மை தீமை ஆகிய இரண்டில் விலை கொடுத்தாவது நன்மையைப் பெற

பிறரது குணங்களையும் தோஷங்களையும் கிரகிப்பதில் பொது ஜனங்களுக்கு இயற்கையாகவே திறமையும் சக்தியும் இருக்கின்றன. ஆயினும், வெளிப்பகட்டு ஒன்றையே நோக்கி அதில் மயங்கிப் போகிறார்களென்று சொல்லவேண்டியும் இருக்கிறது.

வேண்டும். சும்மா வந்தாலும், இனமாகக் கிடைத்தாலும் தீமையை விலக்கித் தள்ளவேண்டும்.

ஃ

"மரணம் துன்பகரமோ?" மரணமடைந்தவருக்குத் துன்பமில்லை. அந்த மரணத்தால் பிரிவாற்ருது தவிக்கும் மக்களுக்கு மட்டுமே அதிக துக்கத்தைத் தருகிறது. துன்பம் அனுபவிக்கும்வரை மரணம் இல்லை. ஒருவனுக்கு மரணம் உண்டானல் அவன் அதுவரையில் பட்ட துன்பம் நீங்குகிறது. மரணமானது எவ்வித உணர்ச்சியும் இல்லாத நிலைமை. இத்தனை துன்பங்களை அனுபவிப்பதைவிட மரணமடைவது மேலென்று சிலர் நினைக்கிற காலமும் நேருகிறது. ஆதலின், இயற்கையாகவே, மரணத்தில் ஒருவித ஆறுதல் உண்டென்று தோன்றுகிறது. ஆனல், மரணமானது உலக ஆசைகளுக்கு எதிரிடையாதலின் எவரும் அதை விரும்புவதில்லை.

ஃ

"ஆசைக்கோரளவில்லை" ஆசையை யடக்கிப் பெருக்கி ஒரே வஸ்துவினிடத்தில் செலுத்தத் தைரியமில்லாதவன் ஸதா துக்கத்தை யனுபவிப்பான். எவனிடம் உதார குணமுண்டோ அவனிடம் தோஷங்கள் அணுகா. மதிஹீனர்களின் சிரிப்பும் விளையாட்டும் விவேகிகளுக்குக் கடூரமாயிருக்கும். அனுசித பரிகாசத்தால் ஸ்நேகத்தைப் போக்கடித்துக்கொள்வோன் துர்த்தசையை யடைவான். ஏகாந்தத்தில் ஆத்ம விசாரணையால் அடையவேண்டிய சுகம் வேறு வழியில் லபிக்காது. மனிதன் தான் செய்யவேண்டிய காரியத்தை இன்ன விதமாய்த் தொடங்க வேண்டுமென்று முதலில் தெரிந்துகொள்வது அவசியம். எந்தக் காலத்தில் தர்மம் நசிந்து அதர்மம் தலையெடுக்குமோ அப்போது நான் அவதாரம் செய்வேன் என்று பகவான் கூறுகிருர். ஆசையைப்போல் மனிதனைத் துன்பப்படுத்தும் வியாதி வேறில்லை. ஆசையைப் பகவானிடத்துக் கொண்டு உலக விஷயங்களில் குறைத்துச் செல்வதே விவேகம்.

ஃ

பண்டித மாளவியா கூறுகிறர்:—ஸ்ரீ கிருஷ்ணபகவான் ஹிந்து மதத்திற்கு உத்வேக முண்டாக்குபவ ராவார். அவர், கொடுமையையும் அதிக்கிரமங்களையும் ஒழிப்பதற்காகவே இம்மண்ணுலகில் அவதரித்தார். அநீதம், மதவிரோதமான செயல்கள் இவற்றைத் தைரியமாக எதிர்த்து நின்று போராடும்படியே அவர் உபதேசித்திருக்கிருர். எல்லோரும் கீதையைப் படித்து, வாழ்க்கையின் அனுபவத்தைக் கூறுகிற அப்புஸ்தகத்திலிருந்து ஆக்கம் கொள்ள வேண்டும்.

ஃ

"மனுஷ்யர்களுடைய மனம்" ஒரு ராஜ ஹம்ஸத்தைப்போலிருக்கிறது. அந்த அழகிய பக்ஷியை பகவானுடைய பாதபத்ம மென்னும் கூண்

யூகமானது—ஓர் மனிதன் என்ன பேசுகிருனென்றும், எவனேடு பேசுகிருனென்றும், எம்மாதிரியாய்ப் பேசுகிருனென்றும், எவ்வளவு பேசுகிருனென்றும் சிந்திக்கச் செய்யும்.

டில் வைத்து, அவருடைய நாம ஸங்கீர்த்தனமாகிய ஆகாரத்தைக் கொடா விட்டால், மஹா பாபிகளாகிய அவித்தை, அவிவேகம் முதலிய துஷ்டர்கள் அதைத் திருடிக்கொண்டு போவர். இரத்தின ஸிம்ஹாஸனமாகிய நம்முடைய மனதில் பகவானை எழுந்தருளச்செய்யாமல், பொய், சூது, வஞ்சனை, வீண் வியவகாரம், களவு முதலிய பாபிகளை ஏற்றிவைக்கிறோமே! இதென்ன மதியீனம்? நமது சித்தமாகிய ஸிம்ஹாஸனத்தில் ஜகத்ரக்ஷகனை ஏற்றி வைத்தால் ஸகல செல்வங்களையும் பெறலாம்; மோக்ஷபாக்கியத்தையும் அடையலாம். அப்படிச் செய்யாமல் தரித்திரம் பிடித்த உலக வியாபாரங்களை மனதிற் குடிவைத்து அசுத்தமாக்குகிறோம். வீட்டில் குப்பை செத்தை சேர்ந்தால் எத்தனை அஸங்கியமாய்த் தோன்றுகிறது? ஏன்? அதை உன் கண்ணாற் பார்ப்பதாலன்றோ? இப்படியே அறிவாகிய கண்ணால் சித்தத்தைப் பார்ப்போமானால், அதில் நிறைந்திருக்கும் பொய், வஞ்சனை, சூது, குதர்க்கம் முதலிய குப்பைகள் புலப்படும். தக்ஷணமே பகவத் தியானம் செய்து அவற்றைக் களையவேண்டும். ஸத் கருமங்களைச் செய்து அவற்றை யொழிக்க வேண்டும். இவ்வாறு உடனுக்குடன் சித்தத்தைச் சுத்தப்படுத்தாதவன் குப்பையிற் கிடந்து புரளும் மிருகத்தை யொப்பாவான். சில நிமிஷநேரம் வரை மனதைப் பகவானது திருவடிக் கமலங்களில் நிறுத்தினால் மகத்தான பாக்கியங்களை யடையலாம்.

ஃ

"துக்கத்தின் பிறப்பிடம் பாபம்." துக்கம் என்பது எப்போதும் பாபத்தினின்றே யுண்டாகிறது. இதற்கு ஸாதாரணமான உதாரணமொன்றைச் சொல்லுகிறோம். ஒரு பிச்சைக்காரனுக்குப் பிடியன்னம் போடுகிறோம்; அவன் அதைப் புசித்துப் பசியாறுகிறான். இந்தப் புண்ணிய காரியத்தால் நமக்கு ஒருவித ஸந்தோஷம் உண்டாகிறது. ஒரு ஏழை நமது வீட்டுக்கு வந்து சோறு போடும்படி கெஞ்சுகிறான்; அவனை நெஞ்சைப் பிடித்து நெட்டித் தள்ளுகிறோம்; இது பாப கர்மம். இதனால் துக்கமுண்டாகிறது. நாம் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்து முடிப்பதால், ஒருவித ஸந்தோஷமும், கூடாத காரியங்களைச் செய்வதால் ஒருவித துக்கமும் உண்டாவது ஸகஜமாதலின், பாபமே துக்கத்துக்குப் பிறப்பிடமென்கிறோம். மனது எப்போது உத்ஸாகமான நிலைமையை அடையத் தொடங்குகிறதோ அப்போதுதான் அதற்குப் புதிய சக்தி உண்டாகும். உத்ஸாகமில்லாதவன் ஒருபோதும் சுகமடையான்.

ஃ

"தூஷிப்பதில் மனம் கெடும்" தூஷணையைக் கேட்பதாலுங்கூட மனம் பேதப்படும். பெரியோர்களையும், மத அநுஷ்டானங்களையும் தூஷிப்பவர்கள் பலருளர். இவர்களின் வாயை எப்படி யடக்குவது? ஏதேனும் பழய கட்டிடத்தில் பேசினால் எதிரொலி உண்டாகும். அவ்வெதிரொலி

அவன் இவளிடத்து ஒருதரமேனும் இன்பாநுபவம் கண்டிடவேண்டுமென்று கருத்தாயிருக்கிறான். அவளோ சரசிபோல் நடித்து, இவனால் தனக்கு ஆகவேண்டியதையும் பெற்றுக்கொண்டு தன் கற்பைக் காப்பாற்றுவதில் கண்ணாய் நிற்கிறாள். இதில் ஆடவன் ஏமாறுவதுபோல் பெண் ஏமாறுவதில்லை.

கேட்காமலிருப்பதற்கு உபாயமென்ன? நாம் மௌனமாயிருந்துவிடுவதே. இதைப்போலவே, தூஷிப்போருக்குப் பதில் சொல்லாவிட்டால் அவர்கள் தங்களின் வாயைத் தாங்களே மூடிக்கொள்வர்.

ஃ

"ஸத்வசனம்" பேசும் வார்த்தைகளை யாராவது கணக்கெடுத்திருக்கிறீர்களா? பேசத் தெரிந்ததுமுதல் மரணம் வரை ஒவ்வொரு நிமிஷத்திலும் அநேக வார்த்தைகளை வெளியிடுகிறோம். காலையில் எழுந்திருக்கும்போது நாம் இன்று முற்றிலும் இன்னின்ன வார்த்தைகளைப் பேசவேண்டுமென்று ஸங்கல்பித்துக் கொள்வதில்லை. நமக்கு முன் எதிர்ப்பட்டுக் கேட்பவர்களும், நமக்கு விடை யளிப்பவர்களும் இவ்விதமான ஸம்பாஷணை நேருமென்று அதற்கு முன்னரே எதிர்பார்த்தவர்களல்லர். அநேக வார்த்தைகள் பிறந்தவுடனே மரிக்கின்றன. அற்ப ஆயுளைப் பெற்ற வசனங்களுக்கு அளவில்லை. வெகு காலம் வரையில் உயிர்கொண்டு ஜீவிக்கும் வார்த்தைகள் மிகச் சொற்பமே. பிரதி தினத்திலும் பகவானைக் குறித்தும், அவரது மகிமைகளைப் பற்றியும் எவ்வளவு வரையிற் பேசினோ மென்பதை ஒவ்வொருவரும் கணக்கிட்டுப் பார்த்துக்கொள்ள வேண்டும். பகவத் ஸம்பந்தமான வார்த்தைகளுக்குத்தான் உண்மையான ஜீவனுண்டு.

ஃ

"எது உத்தம ஹிருதயம்?" உன்னுடைய எதிரிக்குக் கேடு உண்டாக வேண்டுமென்று நீ நினையாது இருக்கலாம். அதனால், நீ வெகு நல்லவனென்று உன்னை நினைத்துக்கொள்ள முடியாது. உன் எதிரிக்கு உண்மையாகவே கஷ்டம் நேர்ந்த காலத்தில் உன் மனம் ஸந்தோஷப் படாதிருந்தால், நீ யோக்கியன்தான். அப்போதுதான் உன்னுடைய ஹிருதயம் நல்ல ஹிருதயமென்று சொல்லலாம். காலம் தனக்கு முந்தி விவேகியையும் தன்னோடு அவசியமாகக் காரியங்களைச் செய்யக் கடமைப்பட்டவனையும், தன் பின்னால் மூடனையும் அழைத்துப் போகிறது. மூடன் காலம் போனதற்குப் பிறகு ஏங்கித் துக்கிப்பான். விவேகியோ காலம் வருமுன்பே சித்தமாயிருந்து காலத்தை உபயோகித்துக்கொள்வான். எவன் காலத்தை நேசிக்கிறானோ அவன் எதிரிக்கும் எமனுக்கும் பயப்படான். தனது காலத்தை ஈசுவர தியானத்துடன் அவரை நம்பிச் செலவிடுவோன் இகபரங்களிலும் உத்கிருஷ்டமான நிலையை எய்துவான். கடவுளை நம்பினோர் கைவிடப்படார்.

ஒருவர் ஒன்றைக் கேட்டுப் பெற்றுத் தான் எடுத்துக்கொண்டு சென்றிருந்துங்கூட, அதை மறைத்துவிட்டு, தனக்குத் தந்தவன் பக்கத்திலேயே அவன் வேலை செய்துகொண்டிருக்கும்போது வைத்துவிட்டு மறதியாகச் சென்றுவிட்டதாய்க் கூறிச் சமாளித்துவிடும்போது, அதைக் கொடுத்தவன் கொஞ்சம் கோபித்தோ திட்டியோ பிறகு அடங்கிப்போவதைத் தவிர, கொடுத்ததைத் திரும்பப் பெற முடியாது. இப்படி ஏமாற்றிவிடக் கூடுமென்றெண்ணி ஒரு பொருளைப் பிறரிடம் தருவோர் அதன் முன்னரே ஜாக்கிரதையும் விழிப்புமா யிருக்கக்கடவர்.

அமிர்தகுணபோதினி

பவ௵ ஐப்பசி௴ 1௳

பெண்மணிகளது கண்களின் ஒளி.

உத்தமனான கணவனின் கடமைகள் யாவை?

ஆனந்த மூட்டும் பூக்கள் சூடிய கூந்தலையுடைய பெண்மணிகளின் அழகிய முகவிலாஸத் தாமரையிலே கண்கள் பொருந்தியிருக்கும் தத்துவந்தான் என்னே! மனிதனுக்கே கண்களின் அமைப்புதான் பிரதானம். அவனது உள்ளத்திலுள்ள சிந்தனைகளை அந்தக் கண்கள் நன்கு எடுத்துக்காட்டும். அவனது ஹிருதய மத்தியிலிருப்பதைக் கண்களின் வழியாய் வழியச் செய்வதை அவனால் எள்ளளவும் தடுக்கமுடியாது. திருட்டுக்குற்றம் முதலியவைகள் செய்தவனுடைய கண்கள் அவற்றைத் தெரிவித்துவிடும். அநேக யுத்தங்களில் வீரத்தோடும் போர்புரிந்தவனின் கண்களிலே வெற்றிமாலை சூடிய புகழ் திகழ்ந்து நிற்கும். வஞ்சகன், கோபி, இவர்களையும் நேத்திரங்களின் மூலமாக அறியக்கூடும். கண்களுக்குள் ஒரு பெரும் பொக்கிஷம் நிறைந்து நிற்கிறது. அதற்கு ஒரே நொடிதான் அவகாசம் வேண்டும்; அந்த நொடிக்குள் லக்ஷக் கணக்கான விஷயங்களைக் கொட்டி அளந்துவிடும். எல்லா பாஷைகளையும்விட,—மனிதனால் ஆக்கப்பட்ட பலவித பாஷைகளைவிட,—கண்கள், மனதிலிருப்பதை அப்படியப்படியே எடுத்துரைக்க வல்லதாகும். மனதின் எண்ணங்களை வெளியிட சரியான வார்த்தைகள் அகப்படா. அப்படித்தான் சொல்லப்புகினும், ஒரு வரம்பிற்கும், ஒரு கட்டுப்பாட்டிற்கும், இலக்கண இலக்கிய விதிகளுக்கும் பொருந்தியதாக இருக்கவேண்டுமென்ற கஷ்டங்கள் வேறே இருக்கின்றன. கண்கள் பேசிக்கொள்ளும் பாஷைக்கோ அவ்வித கட்டுப்பாடுகள் எதுவும் கிடையா. மனதின் எண்ணங்களைத் தெரிவிக்கப் பொருத்தமான வார்த்தைகள் அகப்படவில்லையேயெனத் தயங்கி நிற்க

கடவுளின் கோபம் நிச்சயமில்லாதது, நீடித்திராதது. ஆனால், அவரது கருணையோ நிச்சயமானது, நீடித்திருப்பது.

மாட்டா. இத்தகைய அபரிமிதமான சாமர்த்தியமுடைய கண்களின் தத்துவத்தை ஒவ்வொருவரும் நன்றாகத் தெரிந்து வைத்திருக்க வேண்டும்.

ஃ

ஒருவன் எப்பொழுதேனும் "காதல்" என்னும் கடலில் விழுந்திருந்தால், கண்களின் ஒளியைப்பற்றிப் பிறர் சொல்லாமலே அவனுக்கு சகலமும் விளங்கிவிடும். காதலனைவிட, காதலியின் கண்கள் பலகோடி மடங்கு உயர்ந்தவையாகும். அக்கண்களுக்கு ஆடவரின் கண்கள் நிகராகா. ஒருவன் சாதுரியத்திலும் புத்திகூர்மையிலும் எத்துணைதான் உயர்ந்திருந்தபோதினும், பெண்மணிகளது கண்ணொளியின் முன்பு அடிமைப்பட்டு, அக்கண்களின் கட்டளைகளுக்கும் கடாக்ஷத்திற்கும் தன்னை ஒப்புக்கொடுத்து, அஞ்சலி செய்து மன்றாடி நிற்கவேண்டியே வரும். இது உண்மை; கண்டறிந்தவை; அனுபவம் வாய்ந்தவை. அருளோடும் அன்போடும் பார்க்கும் பெண்மணியின் கண்கள் ஒவ்வொருவர் மனத்திலும் நன்கு பதிந்துவிடுகின்றன; எத்தகைய ஆடவனையும் உட்படுத்திவிடுகின்றன. ஒவ்வொரு ஆடவனின் ஹிருதய கமலத்திலும் பெண்மணிகளின் கண்கள் வீற்றிருந்து அரசு செலுத்துகின்றன. அரசனோ, பண்டிதனோ, பாமரனோ—எல்லோருமே அரிவையரின் கண்ணொளி மயக்கத்திலே சிக்கி, அவற்றின் கருணையை வேண்டி, அதன் நிமித்தம் இன்றும் என்றும் தொண்டு புரிந்த வண்ணமாயுள்ளார். அங்கனுமணிகளது கண்ணொளியான மாந்தரீக சக்தியினின்றும் புமான்கள் விலகி வேறாக முடியாது. முற்றுந் துறந்த முனிவராயினும் அக்கண்ணொளிக்குக் கீழ்ப்படிந்து நிற்கவே வரும்; அப்படித்தான் விதிவசமும் வந்து அமையும்.

ஃ

தனது உத்தம மனைவியினது கண்ணொளிகடாக்ஷம் பெற்ற ஆடவன் ஆநந்தக் கடலில் அமிழ்ந்து நர்த்தனம் புரிவான். புருஷத்துவ வீரமும் ஆண்மையும் அங்கு தவழ்ந்து விளையாடிக் குதிக்கும். அத்தகைய காதல் வலைவீசும் கட்டழகி, அக்காதலின் பயனாக மற்றொரு கண்மணியான குழந்தையை ஈன்று விடில், அப்போது உண்டாகும் பரவசம் சொல்லவுங்கூடுமோ? அக்குழந்தையின் கண்ணொளி, ஆடவனையும், அவனை அடிமைப்படுத்தியவளையும் ஆக இருவரையுமே தனக்கு உட்பட்டுத் தொண்டுபுரிய வைத்துவிடும். அந்த மகவின் கண்ணொளி பர்த்தாவும் பத்தினியும் நெடுநாளாகக் கோரிக்

ஒரு பாத்திரம் உடைந்திருப்பதை அதன் சத்தத்தைக் கொண்டு நாம் எவ்வாறு அறிகிறோமோ, அவ்வாறே, ஒருவன் பேசும் பேச்சுகளினாலும் வார்த்தைகளினாலும் அவன் பேதையென்றும், ஞானியென்றும், கபடனென்றும் எளிதில் நாம் அறியலாம்.

கொண்டிருந்த மனோபீஷ்டத்தை நிறைவேற்றி வைக்கின்றது. ஆ! அந்தக் குழந்தையின் கண்ணொளி இன்பமானதாயும், பெருமையுடையதாயும், தயை நிறைந்ததாயும், வீரம், சாந்தம், கண்ணியம், சாதுர்யம், பாண்டித்யம் மிகுந்ததாயும் விளங்குகின்றது; அதன் சிரிப்பிலும் கண்ணொளியிலும் உலகமே அடங்கி நிற்கும். அத்தகைய மக்கட்பேற்றினை அருளிய மாது சிரோன்மணியின் கண்கள் எத்துணை நேர்த்தியானவை என்பதை யாரால் எடுத்துச் சொல்ல முடியும்!

ஃ

ஒருவன் தன் மனைவியை நேசிக்கிறான்; அவளும் தன் பிரேம பதியை ஹிருதய பூர்வமாக ஆசைகொண்டு பார்க்கிறாள். அந்த இருவரின் கண்களுக்கும் இடையே நிற்கிற ஹிருதய உலகத்திலே எத்தனையோ இனிய எண்ணங்கள், காதலின் பெருக்குகள், அன்பின் ஊற்றுகள் பொங்கிக்கொண்டிருக்கும். பெண்மணி தனது கமலமலர்க்கரங்களைப் பர்த்தாவிடம் நீட்டுகின்றாள். அவளது கைகள் பர்த்தாவின்மீது பட்ட மாத்திரத்தில் அவனது உடல் சிலிர்த்து நவீனமான அற்புத இன்பமொன்றைக் காண்பதாகின்றது. அத்தருணம் அம்மாதுநல்லாள் புன்னகை பூத்த வதனமாய் விளங்கித் தன் கணவனை முற்றிலும் தனது ஆளாக மாறும்படியும், இரு பாதிகளும் ஒன்றுபட்டதாக ஆகும்படியும் செய்து கொள்கிறாள். அத்தகைய பெண்மணி ஏதோ மார்புநோய் கண்டு கண்களை மூடி மூர்ச்சையாகிடில், அவளது கண்ணொளியைக் காணாத நற்கணவனின் மனம் எவ்வளவு பதறுகின்றது, தத்தளித்துப் போகின்றது! சிறிது நேரத்திற்குப் பின் மூர்ச்சை தெளிந்து கண்விழித்துப் பார்க்கையில், அக் கண்களின் ஒளியைக்கண்ட நாயகன் எவ்வளவு பரவசப்பட்டு விடுகின்றான்! பெண்மணியின் சரீரம் அருகிலிருந்தும் பயனில்லை; அப்பெண்ணிடத்திலுள்ள கண்களின் ஒளிதான் அவளது நாயகனின்மீது அரசாட்சி செலுத்துகின்றது. நாடகமேடையில் எத்தனையோ கணிகையர் தோன்றி நடிக்கின்றனர்; நர்த்தனம் புரிகின்றனர்; அவர்களுடைய கண்களுக்கும், ஒரு உத்தம பத்தினியின் கண்களுக்கும் எவ்வளவு வித்தியாஸ மிருக்கின்றது! இந்த பேதத்தை உணராத ஆடவன் மனிதத்தன்மை யுடையவனாகான்; அவன் தன்னை ஒரு மனிதன் என்று சொல்லிக்கொள்ள அருகதையுமில்லை. அவ்வளவு பெரிய வசிய சக்தியுள்ள தனது மனைவியின் கண்ணொளியை முதலில் விரும்பி அனுபவித்துவிட்டுப் பிறகு வெறுக்கும் கணவன் பெருந்துரோகியன்றோ? மிருகத்திலும் கேடு

மற்றவை யெல்லாம் அதிர்ஷ்ட வசத்தால் கிடைக்கும். மனையாள் மட்டும் ஆண்டவன் அருளாலேயே பெறவேண்டும். மனைவி என்பது தலைவிதியைப் பொருத்தது.

கெட்ட மிருகமன்றோ? தனக்குக் கிடைக்குமோவென்று ஏங்கிய கண்ணொளி தூரமாயிருந்தபோது மிகமிக விரும்பி நின்று, விவாகத்தின் மூலமாக அந்தப் பெண்மணியின் கண்ணொளி சமீபமானதும் அதன் பெருமையை அலக்ஷியமாய் நினைத்து விடுகிற ஆடவனின் அற்பத்தன்மை என்னே! என்னே!! தன் அதிர்ஷ்டத்திற்கும், தன் வாழ்வின் உயர்வுக்கும் துணையாக நிற்கும் தர்ம பத்தினியின் கண்ணொளியை வெறுக்க எப்படித்தான் மனம் வருகின்றதோ? ஒருவன் தனது மனைவியை வெறுத்துவிடினும், அப்பெண்மணி தன் பிராண நாதன் திரும்பவும் தன்னிடம் வந்தடைந்து முன்போல் கூடி வாழ்வானென்றே கண்ணீருடனும் காதலாய் எதிர்நோக்கி நிற்கின்றாள்.

II

பல்லோரறியப் பறை முழங்க மாலையிட்ட மனையாளைத் தான் மணந்துகொண்ட காலத்தில், மண்ணும் விண்ணுமறிய அவளுக்குப் பலவாறாகச் செய்து கொடுத்த பிரமாணங்களுள் ஒன்றையேனும் மறவாமல், கண்களை இமை காப்பதுபோல் காத்து, அவள் விஷயத்தில் கறந்த பால் கறந்தபடி உள்ளன்பு பாராட்டி யிருந்து, பூமி ஒரு முழம் பூரித்து, எல்லோரும் கண்டு நன்று நன்றெனக் கொண்டாடும்படி மனையாளுந் தானுமாய் இணைபிரியாது ஒத்து, ஊசியும் சரடும் போல ஒருவழிப்பட்டு வாழ்ந்திருத்தலே இல்வாழ்வான் பெற்ற பேறாகும். "நான் கொண்ட மனையாளுக்கு வேண்டிய ஆடையாபரணங்களை அளித்திருக்கிறேன்; அன்றியும், விடிந்தெழுந்தால் அறுசுவை உண்டி உண்கிறாள்; அவள் என்னை மணந்ததினால் எத்தனையோ ஏற்றம் பெற்றிருக்கிறாள்" என்று தற்புகழ்ச்சி செய்து கொள்பவனிலும், திரிகரண சுத்தியாய்த் தன் மனைவியிடத்தில் அன்பு பாராட்டி அவளைப் பாதுகாத்து வருபவனே சிறந்தவனாகும். தொட்டுத் தாலி கட்டிய மனையாளோடு பாலுந்தேனும் போலக் கலந்து ஒன்றுபட்டுக் காதலுற்று வாழ்ந்திருந்தால்தான் கிரகஸ்தனுக்குப் பெருமையாகும். தன் மனைவியானவள் ஏழை வீட்டிற் பிறந்து, தான் குபேர ஸம்பத்துடையவனாயிருந்தாலும், தனக்குள்ள செல்வச் செருக்கால் அவளை அவமதிக்காமல், தன்னைப் போலவே தன்னுடைய சுகதுக்கங்களுக்கெல்லாம் அவளும் உடன்பட்டவள் என்று அவளை எப்போதும் கௌரவித்து ஆதரித்து வருவது ஒரு நற்கணவனின் கடமை. "கொண்டானின் துன்னிய கேளிர் பிறரில்லை" என்பதைத் திண்ணமாகக் கொண்டு, தன் கணவனுக்கு உண்டி முதலியனவற்றை அன்போடு அமர்ந்தளித்து, எப்பொழுதும் அவனுடைய க்ஷேமத்திலேயே நாட்டமுடையவளாயிருப்பதில் மனைவியின் மிக்கவருண்டோ? தாய்க்குப் பின் தாரம் என்பது

முடியாத காரியம் முக்கரணம் போட்டாலும் ஆகுமா? நொந்து வெந்த நெஞ்சு பின்பு மாறுமா? முந்தியதை மறந்து குலாவ முடியுமா?

பொய்யோ? வழிபாடுடையவளும், வாழ்க்கைத்துணையா யிருப்பவ ளும், பூமியைப் போலப் பொறை யுடையவளும், கணவன் எள் என்றால் எண்ணெயாக நிற்பவளும், கல்வி கேள்விகளால் நிறைந்த குணவதியும், ரூபவதியும், பாக்கியவதியுமான நன்மனையாட்டி ஒரு வனுக்கு அபூர்வ பொக்கிஷமன்றோ? "என்னால் விரும்பப்பட்டவ ளுடைய முகமாகிய தாமரைமலர் சந்திரனால் வாடாது; ஆழமாகிய குளத்திலிராது; முள்ளுள்ள தண்டின்மேல் பூவாது; காலை மாலை இரு பொழுதும் ஒரு படித்தாய் மலர்ந்திருக்கும். தாமரை முக மும், முத்துப் பற்களும், விற் புருவமும், கயற் கண்களுமுள்ள இப் பெண்மயில் வீடு நிறைந்த விளக்காவாள். இப்புனிதவதியை நான் பத்தினியா யடையப்பெற்றது எனது பெரும் பாக்கியமேயாம்" என்று ஒருவர் தன் மனையாளைக் குறித்துக் கூறுகின்றார்.

ஃ

மனைவியினிடத்தில் புருஷர்களுக்கு அன்பாயிருக்கத் தெரியா மையினாலேயே குடும்பங்களில் கலகமுண்டாகி அல்லற்பட்டுக் கதறும்படி நேரிடுகிறது. ஒருவன் தன் மனைவியை எவ்வளவுக் கெவ்வளவு அன்பும் மரியாதையுமாய்க் கள்ளங்கபடமில்லாமல் ஆதரவாக நடத்திவருகிறானோ, அவ்வளவுக்கவ்வளவு அவன் மனையா ளும் தன் காதற்கொழுநனே கதியென்று அவனோடு இன்புற்று வாழ்ந்து, குடும்ப ரக்ஷணத்தைத் தானே நின்று நிர்வகிக்கத் தலைப் பட்டு, தன் காதலனுக்கு உற்ற வாழ்க்கைத் துணையாகி விளங்குவாள். இவ்வுலகில் குற்றமற்றவரில்லையாதலாலும், யார்க்கும் தன் குற்றந் தெரிவது அரிதாகையாலும், குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லையாத லாலும், ஒருவர் பிழையை மற்றவர் திருத்தி, அணுவளவேனும் வேற்றுமைப்படாமல் ஒற்றுமையாயிருந்து இல்லறநெறி சிறிதும் பிறழாது வாழ்ந்திருத்தல் நன்றாகும்.

ஃ

கற்புடைப் பெண்டிர் தமது காதற் கொழுநன் கண்டு உவக்க வேண்டுமென்ற முழு நோக்கத்தோடு அவனுக்கு உவப்பான தொன்றை இனிது முடிக்குமாறு இரவுல் பகலுமாய் ஓடியுழன்று வருந்தி யுழைக்குங்கால், கணவன் அதைக் கண்டு களியாவிடினும் அவளைக் கடிந்துகொள்வானேயாயின், அவள் எவ்வாறு வெந்துய ருற்றுச் சிந்தை சோரவேண்டாம்? கொண்டவன் சீறுமாறென்றிருந் தால் அப்பேதை என்ன செய்வாள்? மனையாளுக்குக் கோபம் வந்த

பெண்ணின் அந்தரங்கக் குறிப்பை யுணராமல் அந்த சமயத்தில் அவர் களைத் திருப்தி செய்யாமல் தர்ம நியாயமாய் நடக்க முயல்வோர் பிற்காலத்தில் ஏமாறிப்போனவர்களாக முடிகிறார்களாம்.

காலத்தில் அவள் வாயில் அகப்பட்டுக்கொண்டு, ஆயுள்காலமெல்லாம் ஒருவர்க்கொருவர் விஷமாய்க் கசந்துபோம்படி ஊர் சிரிக்கச் சண்டையிடாமல் சமயம் பார்த்து ஒதுங்கிவிடுவதே உத்தமமாகும். அறியாமையினால் மனைவி கோப வேளையில் யாதேனும் பிதற்றக் கேட்பினும், அதைச் செவியிற் போட்டுக்கொள்ளாமல் விட்டுவிடுவதே நலம். ஏனெனில், பிறகும் அவளோடுதானே வாழவேண்டி வருகின்றது. இப்படி மனைவிக்கு உட்பட்டுப்போவது கேவலமென்று கருதுவோர், தேவ குணத்துடன் அவளை மன்னிப்பதில் எவ்வளவு பெருமை யிருக்கிறதென்பதை நினைத்துப் பார்க்கக்கடவர். ஆண் கோபம், பெண் கோபம் ஆகிய இவ்விரண்டு கோபமுந் தீதேயாம். எரிகிற கொள்ளியில் எந்தக்கொள்ளியானாலென்ன? கோவம் பாவமன்றோ? பெரும்பான்மைாய் இவ்வுலகத்தில் புருஷன் கெடுவதற்குப் பெண்ணும், பெண் கெடுவதற்குப் புருஷனுமே காரணமாம். தம்பதிகள் அநுகூலர்களாய் இராதிருப்பார்களே யாயின், சாங்காலமளவும் அவ்விருவரும் நீங்காத துன்பத்தினால் வருந்தவேண்டுமாதலால், இதுவிஷயத்தில் நன்றாய் ஆராய்ந்து பார்த்து, இருவரும் சமாதானமாய் ஒற்றுமை நயத்தால் இல்வாழ்க்கையில் அமர்ந்து நடப்பதே உசிதமாகும்.

ஃ

கணவன் தன் மனைவியினிடத்தில் எத்தனைக்கெத்தனை அன்பும் ஆதரவுமா யிருக்கிறானோ, அத்தனைக்கத்தனை அவளும் அவன் விஷயத்தில் திரிகரண சுத்தியாய் நிர்த்தோஷமா யிருப்பாள். பெண்களுக்கு மனக்காவல் பெரிதோ, மனைக்காவல் பெரிதோ என்பதைப் புருஷர் நன்றாய் நிதானித்துப் பார்க்கவேண்டும். மனைவியானவள் வீட்டுக்கு என்னென்ன வேண்டுமென்று சொன்னாலும், கணவன் தன் முகம் சுளியாது அவற்றை வாங்கிக் கொடுப்பதனால் குற்றமில்லை. ஸம்ஸாரமானது கடலாதலால், வீடென்றிருந்தால் அதற்கு நாலு செலவுகளும் நடக்கும்படியாகி எல்லாந்தான் வேண்டியிருக்கும். கணவன் ஒவ்வொரு அற்ப காரியத்திலும் தலையிட்டு அடிக்கடி செலவு விவரங் கேட்பது அத்தனை சிறந்ததன்று. நன்மனையாட்டிகளால் குடும்பத்திற்கு உண்டாகும் பெருமைகளையெல்லாம் விரித்து உரைப்பின் பெருகும். இவ்வுலகில் நன்மனையாட்டிகளை யிழந்து வெந்துயருற்றவர்கள் அனந்தங் கோடி. மனைவி எக்கேடு கெட்டாலென்னவென்று கருதித் தமது சௌக்கியத்திலேயே நாட்டமுள்ளவர்களா யிருப்பதைப்போல இழிவானது வேறொன்றுமில்லை. கணவ

மனிதர் மதத்துக்குச் சண்டையிடவும் உயிர்விடவும் முரட்டுத்தனத்தோடு துணிவரேயன்றி, தங்களின் மத தத்துவங்களின்படி பெரும்பாலும் நடக்கமாட்டார்கள். ஆனால், பேச்சு விஸ்தாரங்கட்கும் பெருமை பெறுவதற்கும் சலிக்கமாட்டார்கள்.

னே கதியென்றிருக்கின்ற கற்புடைய மனையாள் விஷயத்தில் துரோகம்செய்பவனிலும் மிக்க பாவியில்லை. பெண்மணிகள் தங்கள் ஆருயிர்க் கணவர் நிமித்தம் உயிரையும் விடத் துணிவரென்றால், அவர்கள் தங்கள் கணவரிடத்தில் பக்ஷமாயிருப்பார்களென்பதற்கு இதைவிட வேறென்ன நிதரிசனம் வேண்டும்?

ஃ

விடிந்தபின் போஜனம் செய்துவிட்டு, வேலைநிமித்தம் வெளியே சென்ற கணவன் அந்திப்பொழுதாய் வீடுவந்து சேருவதற்குள்ளே, "கொழுநன் இல்லா வீடு என்ன வீடு, எனது கணவனுக்கு ஊரெல்லாம் உற்ற தோழர்களாதலால், யாரோடு பேசிக்கொண்டிருக்கிறாரோ, எப்போது வருவாரோ அறியேனே; என் பிராணன் முழுதும் அவரிடத்திற் குடிகொண்டிருக்கின்றதே; அவருக்கும் என் விஷயத்தில் இப்படித்தானிருக்கும். பேதையேன் அவர் திருமுகத்தைக் காணாது வருந்துவதை அறிகிறவர் யார்? பொழுதோ படுகின்றது; அவர் இன்னும் வீட்டிற்கு வரக்காணேனே! மழைமுகங்காணாத பயிர்போலக் குழந்தைகள் எனது பிராணநாதனைக் காணாமல் தவிக்கின்றனவே" என்று தன்னை அறியாது நெஞ்சங் கரைகின்ற கற்பின்மகளிரை யுடையவர்களெல்லோரும் அவர்கள்மீது பிராணபதமா யிருப்பார்களென்பதற்குச் சந்தேகமுண்டோ? "நாடெங்கும் வாழக் கேடொன்றுமில்லை" என்றபடி எல்லோரும் தமது மனைவிமாரிடம் அன்பாயிருந்தால் எத்தனை அழகாயிருக்கும்?

ஃ

யார்க்கும் தங்கள் வீட்டிலிருப்பதுபோலச் சுகம் மற்றெங்கும் கிடைக்காது. பெரிதான ராஜ்யத்தை ஆளுவதிலுள்ள வருத்தம் ஒரு சிறு குடும்பத்தை நிர்வகிப்பதிலும் உண்டு. இல்வாழ்க்கையிலுள்ள கஷ்டங்களை ஆராய்ந்து பார்க்குங்கால், குடும்ப ரக்ஷணத்திற்காகக் கொழுநன் வெளியே போய்ப் பொருள்தேடி வருவதொன்றேயன்றி, இரவும் பகலும் இடைவிடாது ஓடியுழன்று அரும்பாடு படுகிறவள் மனைவியேயாம். அன்றியும், புருஷன் மக்கட்பேற்றை அடையவேண்டுமானால், பிரஸவ வேதனை முதலிய பிராணாபத்துகளெல்லாம் ஸ்திரீகளுக்கே யாதலாலும், அவர்கள் அநாதிகாலமாகப் பர்த்தாவின் க்ஷேமத்திற்கென்றே பாடுபடுகின்றவர்களாதலாலும், அவர்களை அன்போடும் ஆதரித்து வருதலானது புருஷ சிரேஷ்டர்களின் இன்றியமையாக் கடமையாகும். பெண்மணிகளது கண்களின் ஒளியிலேயே ஆடவர்களின் வாழ்க்கை உள்ளதென்பதைப் புமான்கள் நன்குணர்ந்து, அன்னோரிடத்துத் தேவதா விசுவாஸமா யிருக்கக்கடவர். "சேர்ந்து வாழ்வதே சிறந்த வலிமை" எனும் பொன்மொழி வீட்டுக்கும் நாட்டுக்கும் காட்டுக்குங்கூடப் பொருந்தும்.

நளினன்

அல்லது நவ கங்கணங்கள்.

ஹரிலால் பெரும் புகழ் பெற்ற உயர்குடிப் பிறப்பினராயினும், அநுகூலமற்ற சமய சந்தர்ப்பங்களால் குமஸ்தா வேலையில் அமர்ந்தார். அவரது குணத்திற்கு குமஸ்தாவேலை கொஞ்சமும் பிடிக்கவில்லை. கௌரவ மனமும் சுதந்திர ஆர்வமுமுடைய ஒரு மனிதனுக்கு அடிமை வாழ்வு எங்ஙனம் இன்பமளிக்கக்கூடும்? ஆகவே, ஹரிலாலுக்கு வாழ்க்கை பெருஞ் சுமைபோல் தோன்றியது. ஆனால், அவர் தமது ஏகபுத்திரனான நளினனை உயர்ந்த பதவிக்கு உயர்த்த வேண்டுமென்ற ஆசை கொண்டிருந்ததால் மனதை ஒருவாறு சமாதானப் படுத்திக்கொண்டு தமது கடமையை நிறைவேற்றுவதில் பெருங் கவனம் கொண்டார். இந்த எண்ணத்தோடு அவர் நளினனை ஐ. ஸி. எஸ். பரீட்சைக்குப் படிப்பதற்காக இங்கிலாந்துக்கு அனுப்பினார். அதில் அவருக்கு அதிக பணம் விரயமாயிற்று. படாத பாடுபட்டுத் தேடியபொருள் யாவும் செலவு செய்தும், அவன் படிப்பு முடிவடைவதற்கு இன்னும் ஆயிரம் ரூபாய் தேவையாக இருந்தது. அவரது வருங்கால இன்ப துன்பங்கள் நளினனைப் பொறுத்திருந்ததால், அவர் அவன் செலவுக்குப் பணம் அனுப்ப அளவிறந்த முயற்சி எடுத்துக்கொண்டார்.

ஃ

பலமுறை நண்பர்களுடைய வீடுகள்தோறும் சென்றுவந்ததன் பயனாக அவருக்கு ஐந்நூறு ரூபாய் கிடைத்தது. ஆனால், பாக்கிப் பணத்திற்கு வழி என்னவென்று யோசிக்கலானார். ஏனெனில், அவரது வீடு நிலம்யாவும் வேறொருவருக்கு எழுதிக் கொடுக்கப்பட்டிருந்தது. மனைவியின் ஆபரணங்களோ பாங்கியில் அடகு வைக்கப்பட்டிருந்தன. இந்நிலையில் அவர் பின்னும் ஐந்நூறு ரூபாய்க்கு எங்கே போவார்? அவர் உள்ளம் துடித்துத் தவித்தது.

ஃ

ஹரிலால் அங்குமிங்கும் அலைந்துத் திரிந்துவிட்டு நிராசையோடு வீடு வந்து சேர்ந்தார். ஆங்கு ஆசை நிறைந்த இதயத்துடனும் வாடிய வதனத்துடனும் காத்துக்கொண்டிருந்த அவர் மனைவி கூறலானாள்:-

“ஹேமாவின் நோய் இத்தனை நாளாகியும் குணப்படவில்லையே. இனியேனும் ஒரு வைத்தியரை அழைத்து வாருங்களேன்.”

ஹரிலால் “அதற்குப்பணம்வேண்டுமே?” என்று சிந்தனையில் மூழ்கினார். நீண்ட நேரம் மௌனமாக இருந்துவிட்டு அவர் பின் வருமாறு பதிலளித்தார்:—

“புதியன கண்டபோழ்து விவேரோ புதுமை பார்ப்பார்” என்றார் கம்பர்.

"கொஞ்சம் 'கைமருந்து' கொடு. இந்த நோய் அற்பமானதுதான். இப்போது வைத்தியர் உதவி வேண்டியதில்லை. இந்த மருந்தை உபயோகித்து இரண்டு தினமானபின் பார்த்துக் கொள்வோம்."

ஃ

காமினி தன் கணவனின் மனக்கவலைக்குரிய காரணத்தை இனிதறிந்துகொண்டவளாய் ஒரு நீண்ட பெருமூச்சு விட்டாள். அவள் வாயிலிருந்து எவ்வித வார்த்தையும் வெளிப்படவில்லை. எனினும், அவர் மனதிற்கு மகிழ்ச்சி யூட்டத்தக்க செய்தி யொன்று அவளிடம் இருந்தது. அவள் அவரை நோக்கி, "இன்று மாணிக்கத்தினிடமிருந்து ஒரு கடிதம் வந்திருக்கிறது. அவன் அதோடு ஐந்நூறு ரூபாயும் அனுப்பியிருக்கிறான்," எனக் கூறியவாறு கடிதமும் ரூபாயும் எடுத்துவந்து அவரிடம் கொடுத்தாள்.

ஃ

ஹரிலால் அக்கடிதத்தைப் பிரித்துப் பின்வருமாறு வாசித்தார்:—

"அக்கா! உபய க்ஷேமம். இந்த முதிர்ந்த வயதில் உங்களுக்குப் பைத்தியம்தான் பிடித்திருக்க வேண்டும். உண்ண உணவிற்கும் உடுக்க உடைக்கும் பிறர் உதவியை நாடி நிற்கும் நீங்கள் நளினனை இங்கிலாந்துக்கு அனுப்பியதன் கருத்து எனக்கு சற்றேனும் புலப்படவில்லை. எனது மனைவிமக்களைக் காப்பாற்றக்கடமைப் பட்டிருக்கும் நான் உங்களுடைய குடும்ப விஷயங்களில் தலையிட இயலாதென்று வெளிப்படையாய்க் கூறுவதற்காக மிகவும் வருந்துகிறேன். என்றாலும், நான் கல்வி கற்பதற்கு அளவற்ற பொருள் செலவு செய்ததோடு எண்ணற்ற துன்பங்களுக்கும் ஆளான ஹரிலாலுக்கு உதவிபுரிந்து நான் கொண்ட கடனைத் தீர்க்க வேண்டியது என் கடமை யென்பதை நானறிவேன். ஆதலால், நான் இன்று ஐந்நூறு ரூபாய் அனுப்பி இருக்கிறேன். இதைவிடப் பெரிய உதவி செய்ய என்னால் இயலாது; அப்படிச் செய்ய நான் நினைக்கவுமில்லை. இனிமேல் பணம் வேண்டுமென்று என்னைத் தொந்தரை செய்யவேண்டாம்.

இப்படிக்கு
தங்கள் அன்புள்ள,
மாணிக்கலால்.

ஃ

மாணிக்கலால் காமினியின் இளைய சோதரன். ஹரிலால் அவனைதுசிறுபிராயத்திலிருந்தே அவனைத் தமது சொந்த புத்திரனைப்போல் பாவித்துப் பாராட்டி வந்தார். அவர் அவன்பேரில் கொண்ட புத்திரவாஞ்சையால் அவனுக்குக் கல்வி கற்பித்ததோடு கலியாணமும் செய்துவைத்தார். மாணிக்கலால் சுதந்தர வாழ்க்கை நடத்தத் தொடங்கிப் பல வருடங்கள் ஆயின. இதுகாறும் மாணிக்கலால் ஹரிலாலுக்கு உதவி செய்ய முயலவோ, ஹரிலால் அவன் உதவியை நாடிச் செல்லவோ இல்லை. எதிர்பாராத விதமாய்த் திடீரெனப் பணக்கஷ்டம் நேர்ந்ததாலேயே காமினி ஆயிரம் ரூபாய் அனுப்பும்படி அவனுக்குக் கடிதம் வரைந்தாள்.

ஃ

பொன்னை எத்தனை உரைக் கல்லில் தேய்த்துப் பரிசோதித்தாலும் அது மேன்மேலும் பிரகாசிக்கவே செய்யும். அவ்விதமே, யோக்கியனான ஒருவனை நன்கு ஆராய்ந்து பரிசோதிக்க முயலும்போது, அதற்காகச் செல்லுகிற இடங்களிலெல்லாம் நற்செய்திகளே எதிர்வந்து நிற்கும்.

இந்தக் கடிதத்தைப் படித்ததும் ஹரிலாலுக்கு அடங்காத ஆத்திர முண்டாயிற்று. அவர் கோபத்துடன் "என்ன மமதை! என்ன நிந்தனை!" என்று பல்லைக் கடித்துக்கொண்டு உறுமினார். உலக வாழ்வினிடையே தோன்றும் இயம்பவொண்ணாத சோதனைகளையும், கஷ்ட நஷ்டங்களையும் எளிதில் சகித்துக்கொள்ளலாம். ஆனால், நம் ஆதரவில் இருந்து வந்த உறவினரின் ஏளனத்தை—அம்பனைய-சொற்களை யாரே சகிக்கக் கூடும்!

ஃ

ஹரிலால் மிகுந்த சினத்தோடு கர்ஜித்தார்:—"பணத்தைத் திருப்பி விடு. இது எனக்கு வேண்டியதில்லை"

ஆனால், காமினி "ஏன்?" என்று பொறுமையோடு வினவிவிட்டு "இந்த அற்ப காரியத்திற்காக நளினனின் முன்னேற்றத்தைத் தடை செய்வதா? நாம் இவ்வளவுதூரம் அவனுக்குக் கை கொடுத் துதவினோம். இந்தக் கடைசி காலத்தில் நாம் அவனை நட்டாற்றில் விட்டு விட்டால் அவன் கதி என்னாகும்? இந்தத் தபாலில் அவனுக்குப் பணமும் அனுப்பவேண்டுமே?" என்றாள்.

ஃ

இவ்வார்த்தைகளைக் கேட்டு ஹரிலால் தமது மனதை ஒருவாறு அடக்கிக் சமாதானநிலைக்கு கொண்டு வந்தார். உடனே காமினி கூறலுற்றாள்:—

"நளினன் பரீட்சையில் தேறினால், ஈசன் கருணையைப் புகழ்ந்து கொண்டாடலாம். என் மனதை வீணாகப் புண்ணாக்கவேண்டும்? சற்று பொறுத்துக் கொள்ளுங்கள்."

ஃ

நிராசை யடைந்த ஹரிலால் மனம் சற்று ஆறுதல் அடைந்தது. திருப்தியென்னும் சந்திரனின் இளங் கதிரொளியால் அவர் உள்ளம் பரவச மடைந்து துள்ளியது. எனினும், இன்பவாழ்க்கை வெகு தொலைவில் இருள்மயமாய் அவர் கண்களுக்குப் புலப்பட்டது. அந்த ஐந்நூறையும் சேர்த்து ஆயிரமாக்கிக் குமாரனுக்கு அன்றே அனுப்பினார்.

ஃ

நாட்கள் பல சென்றன. நளினன் பரீட்சையில் தேறிய செய்தி அவர்களுக்கு எட்டியது. சில காலமாக அவர்கள் வீட்டில் குடிகொண்டிருந்த புன்மை யிருட்கணம் யாவும் இவ்வானந்தப் பொற்சுடரொளியால் அறவே அகன்றன. ஹரிலாலின் இதயம் என்றுமில்லாத விதமாய்ப் பொங்கிப் பூரித்துப் புளகாங்கிதமுற்றது. அவர் அன்று மகிழ்ச்சிப் பெருக்கால் மெய்ம்மறந்து ஆவேச முற்றவராய் காற்றினும் கடுகி ஆபீஸுக்குச் சென்றார். காமினியோ ஆனந்த பரவச மடைந்தவளாய் ஒரே பாய்ச்சலில் படுத்த படுக்கையாயிருந்த தனது மகளை அணுகி "ஹேமா! ஹேமா!" எனக் கூவியழைத்து, "உன் அண்ணா பரீட்சையில் தேறினான்" என்றாள். அந்தோ! பாவம்! ஹேமப் பிரபா, பதிமூன்று வயதே நிறையப்பெற்ற இரதியன்ன நங்கை; ஜுரநோய் வாய்ப்பட்டுத் தன்னுணர்வைப் பெரும்பாலும் இழந்தவளாய்க் கிடந்தனள். தாயார் அவளைக்

ஒவ்வொரு வியாபாரியும் தமது வர்த்தக ரகசியத்தை மறைக்கின்றனர். மறைக்கிற ரகசியத்தை மற்றவர்களும் அறிந்துகொள்ளாமலில்லை, புதுக் கடைகள் தோன்றாமலுமில்லை.

கைகளால் வாரியெடுத்து மார்பின் மீது சாய்த்துக்கொண்டு "உன் அண்ணு பாஸ் பண்ணிவிட்டான்," "உன் அண்ணு பாஸ் பண்ணிவிட்டான்" என்ருள்.

அச் சிறுமியின் மாந்தளிர்மேனி பதறியது. அவள் கண்களைத் திறந்து தன் தாயாரை நோக்கி, "அண்ணு எப்போது வீட்டுக்கு வருவான்?" என்று சிரமம் தேங்கிய தீனக்குரலில் வினவினுள்.

"கூடிய சீக்கிரம் வந்துவிடுவான், கண்ணே!" எனப் பதிலளித்தாள் காமினி. உடனே அந் நங்கை "எனக்கு அண்ணுவைப் பார்க்க முடியுமா?" என்று ஈனக்குரலில் மூச்சுத் திணற வினவினுள்.

ஃ

இதுகாறும் அன்னை மகிழ்ச்சிப் பெருக்கால் மகளின் நோயை சட்டை பண்ணவில்லை. ஆனுல், இப்போது மெலிவுற்ற மகளின் நலிவுற்ற குரலைக் கேட்டதும் அவள் அச்சமும் திகிலும் அடைந்தாள். அவள் சஞ்சலத்தோடு மகளை நோக்கி, "குழந்தாய்! எண்ணுத எண்ணமெல்லாம் எண்ணிஎண்ணிவீணுகக் கலங்காதே! கடவுள் கிருபையால் நீ உன் அண்ணுவைக் காண்பாய்" எனக் கூறி அவள்து நெற்றியைக் கைகளால்மெல்லத் தடவினுள். அப்பொழுது பாவினியும் அவள் தாயாரும் அங்கு வந்தனர். பாவினியும் ஹேமாவும் உற்ற தோழியரா யிருந்தனர். இருவரும் ஒரே இடத்தில் பிறந்து ஒரே இடத்தில் வளர்ந்தவர்கள். ஹேமா தனக்குத் துணையாகத் தன்னிடமே இருக்கும்படி பாவினியைக் கேட்டுக் கொண்டாள். பாவினியின் தாயும் அதற்குச் சம்மதித்தனள்.

காமினி பாவினியை மார்போடணைத்து மகிழ்ந்தாள். நான் உன்னை நளினனுக்கு விவாகம் செய்து வைக்கிறேன் என்ருள்.

ஃ

பழைய தோழியரான காமினியும், பாவினியின் அன்னையும் ஒருவரை யொருவர் "அக்காள்" என அழைத்துக் கூடிக்குலாவினர். தங்கள் நட்பும் அன்பும் என்றும் மாருதவாறு பாவினிக்கும், நளினனுக்கும் நிறைவேறும் கலியாணத்தினுல் பின்னும் உறுதியடையப் போவதை நினைத்து நினைத்து அவர்கள் பூரித்தனர். சில வருடங்களுக்கு முன்பே பாவினியின் பெற்ருேர் அவளுக்கேற்ற ஒரு கணவனைத் தேடி ஊரெங்கும் அலைந்தனராயினும், அவளுக்கு இணையானவன் எவனும் அகப்படவில்லை. மகளின் நிகரற்ற பேரழகில் மயங்கிய அவர்கள் வந்த வரன்களை யெல்லாம் குறைகூறிப் பாவினியின் விவாகத்தைத் தள்ளிப் போட்டு விட்டனர். இந்நிலையில் நளினன் தாயாராகிய காமினி பாவினியை ஒரு பொருட்படுத்தித் தன் மகனுக்கென்று நிச்சயித்ததைக் கேட்டதும் அவர்கள் அடைந்த ஆனந்தத்திற்கு அளவே யில்லை மேலும், உயர்தரக் கல்வி கற்ற ஒருவனை மருமகனுகப் பெறுவது கிடைப்பதற்கரிய பாக்கியமென்று அவர்கள் நினைத்தனர்.

ஃ

"நான் உன்னை அன்றும் இன்றும் என்றும் மறக்கவில்லை. உன்னை மறக்க எனக்கு என்ன அவ்வளவு கொரே நெஞ்சமா? அதெல்லாம் ஒன்றுமில்லை. பழய அன்பு காட்டுங்கள் என்கிருய். நான் மறந்தாலல்லவா பழய அன்பை ஞாபகப்படுத்தவேணும்?"

ஆனால், ஹரிலாலுக்கு மட்டும் இவ்விஷயம் அவ்வளவாகப் பிடிக்க வில்லை. நளினன் ஊர் வந்து சேர்ந்த பின் அவனிடம் மண விஷயமாய்க் கலந்து பேசி முடிவு செய்ய வேண்டு மென்று அவர் விரும்பினார். ஆதலால், அவர் மனைவியை நோக்கி, "நளினன் மனம் எப்படியிருக்குமோ? அவன் வந்தபின் அவன் சம்மதத்தைக் கேட்டு முடிவு செய்யலாம். விவாகத்தால் திருப்திபட வேண்டியவன் முக்கியமாக அவனல்லவா?" என்றார்.

(மற்றவை மற்றதில்)

T. S. சங்கரலிங்கம்.

வீட்டுக்குள் உட்கார்ந்திருக்கையில் ஒருவர் அனுவசியமாய் வெளியே எட்டிப் பார்ப்பின், அருகிலிருப்பவரும் என்னவோ எவரோ வருகிறார்களென்று தாமும் எட்டிப் பார்க்கிறார். கடைசியில் எந்த சம்பவமுமில்லை எவரும் வரவுமில்லை. அடிக்கடி வீதியை எட்டிப் பார்ப்பது சிலரது வழக்கம். வேறு சிலர் புசிக்கும்போது பலமுறை பிறரது இலையை எட்டிப் பார்ப்பர்.

ஆபரணம்.

1. பிராமணனுக்கு வித்தையும், க்ஷத்திரியனுக்குப் போர்த்திறனும், தனவானுக்குத் தானமும், குலஸ்திரீக்கு நாணமும் ஆபரணமாம்.

2. கைகளுக்குக் கொடையும், கண்டத்திற்குச் சத்தியமும், செவிகளுக்கு சாஸ்திரம் கேட்டலும் ஆபரணமாம்.

3. நக்ஷத்திரங்களுக்கு சந்திரனும், ஸ்திரீகளுக்குக் கணவனும், பூமிக்கு அரசனும் ஆபரணமாம். கலவியோ அனைவருக்கும் ஆபரணமாம்.

4. குதிரைக்கு வேகமும், பெண்கட்கு பயந்தபான்மையும், துறவிகளுக்கு தவமும், அரசனுக்குப் பொறுமையும், வீரனுக்குப் பராக்கிரமமும் ஆபரணமாகும்.

5. ஆகாசத்திற்குப் பரிசுத்தமும், தாமரை வனத்திற்கு வண்டும், வாக்கிற்கு சத்தியமும், செல்வத்திற்குக் கொடையும், மனதிற்கு சாந்தமும், சத்ருருக்களுக்கு இன்சொல்லும் ஆபரணமாம். எல்லோருக்கும் விநயம் மேலான பூஷணமாம்.

பழமொழி குறிப்புகள்

4. மக்கள்.

(371-ம் பக்கத் தொடர்ச்சி.)

372. "தாய் வார்த்தை கேளாத பிள்ளை நாய் வாயிற் சீலை."

"தாய் சொற்றுறந்தால் வாசகமில்லை." 'நான் இந்த உன்னத நிலைமையை யடைந்ததற்கு என் தாயே காரணம்' என்று பிரஸித்தி பெற்ற நெப்போலியன் கூறியிருக்கிறார். தாயின் ஹிருதயமே குழந்தையின் பள்ளிக்கூடம். பிற்காலத்தில் குழந்தையின் தலை விதியை எழுதுகிறவள் தாயேயன்றி வேறல்ல. தாயின் வார்த்தைக்கு உட்பட்டு நடவாத பிள்ளை எதற்கும் உதவமாட்டான். நாயின் வாயில் சீலை சிக்கினால் அதைக்கிழித்துச் சின்னா பின்னப்படுத்திவிடும். அப்படியே தனது உலக வாழ்க்கையில் தாய் சொற் கேளாத பிள்ளை துன்பப்படும்படி வரும். தாயைக் காட்டிலும் இந்த உலகத்தில் நன்மை செய்யக்கூடியவர்கள் எவருமில்லை. ஆண் குழந்தையைவிட ஒரு பெண் குழந்தைக்குக் குடித்தன முறைகளைக் கற்றுங் கொடுக்கத் தாயே சிறந்த உபாத்தியாயர். தாயின் வேலைக்கு உதவியாக இருப்பதில் ஒவ்வொன்றையும் தெரிந்து கொள்ளும்படியாகிறது. சிறுகச் சிறுகக் கஷ்டமில்லாமல் தாய் தனக்குத் தெரிந்த யாவற்றையும் தன் குமார்த்திக்குக் கற்பித்துக் கொடுக்கிறாள். தன் தம்பி தங்கைகளைத் தூக்கி வைத்துக்கொள்வதின் மூலமாக ஒரு குழந்தையை வளர்க்கும் விதத்தைப் படித்துக்கொள்ளக் கூடுமானதாகிறது. இன்றைக்குத் தன் தாயை எதிர்க்கிற பெண் நாளைக்குத் தான் வாழப்போகிற இடத்திலும் எதிர்த்துப் பேசுகிறவளாகிக் குடித்தனத்தைக் கெடுப்பாள். தாய்க்கு அடங்கி அவள் சொற்கேளாத பெண் பிறகு கணவனின் வீட்டில் தனது துர்க்குணங்களால் அவஸ்தைப் படும்படியும் வரும்.

373. "தாய்தனக்கு ஆகாதமகள் ஆர்தனக்கு நல்லவள் ஆவாள்?"

தாயின் மனதை வருந்தச் செய்கிற பெண் பிற்காலத்தில் கணவனின் வீட்டில் எவரையுமே வருந்தச் செய்கிறவளாகவே கெட்ட பெயரெடுப்பாள். தன் வாழ்வையும் அழித்துக் கொள்வாள்.

374. "தாய் தூற்றினால் ஊர் தூற்றும், கொண்டவன் தூற்றினால் கண்டவன் தூற்றுவான்."

தாய் தனக்கு அடங்கி நடவாத பெண்ணைக் கண்டிக்கையில், ஊராரும் அந்தப் பெண்ணை இளப்பமாயும், கேவலமாயும் எண்ணுவார்கள். இத்தகைய

"என் அன்பை நீர் சற்றும் நினையாதொழிந்ததென்னோ? உமது நெஞ்சம் கல்லினும் கடிது, தீயினும் கொடிது, வைரத்தினும் வலிது."

பெண் கணவன் வீட்டிலும் தூற்றப்படுவாள். அவ்விதம் தூற்றப்பட்டு மதிப்பு இழந்துபோகிற பெண்ணை, வீட்டிலிருப்பவர்கள் மட்டுமல்ல, தெருவில் போகிறவர்களுங்கூட அலக்ஷியமாய்ப் பேசத் தொடங்கிக் கொள்வார்கள். இது ஒரு பெண்ணுக்கு அழகாகுமா? இப்படிப்பட்ட ஒரு பெண் பிறப்பதை விடப் பிறவாதிருப்பது மேல்.

375 "தாய் பொறுக்காததை ஊர் பொறுக்குமா?"

தன் குழந்தை எவ்வளவு குற்றங்கள் செய்தாலும் ஒரு நல்ல தாய்க்கு அது ஒரு குற்றமாகவே படாது. இந்த உலகத்தில் தன் சேஷ்டை, அடம், துடுக்குத்தனம், பிடிவாதம் காட்டுவதெல்லாம் யாருமே தன் தாயாரிடத்தில் தான். தாயாரிடமேதான் கோபித்துக் கொள்வது, முறண்டிக் கொள்வது. என்ன செய்தாலும் தாய்க்குக் கோபமே யுண்டாகாது. ஒரு சமயம் கோபம் கொண்டாலும் அடுத்த நிமிஷம் அமிர்தத்துக்கு ஒப்பான முத்தம் கொடுத்து அணைத்துக்கொள்வாள். அப்படிப்பட்ட அன்பின் களஞ்சியமாகிய தாயே மனம் பொறுக்காத விதமாய்த் தனது நடத்தைகள் தகாததா யிருக்குமானால், ஊரார் அதை எப்படிப் பொறுப்பார்கள்?

376. "தாய் வசவு பிள்ளைக்குப் பலிக்குமா?"

தாய் கோபித்துக்கொண்டு தன் பிள்ளைகளை வைதாலும், அது அவர்கள் திருந்தி க்ஷேமப் படவேண்டுமே என்ற கவலைக்கு மேற்பட்டதல்ல. உள்ளே யன்பும், வெளியே கோபமுமாகையால், தாயின் வசவு அவளுடைய குழந்தைக்குக் கெடுதி செய்யாது. ஆனால், தாய் உண்மையாகவே வயிறு எரிந்து பேசுவதாகில் அது வீண் போகாது. இதனை,

377. "மாதா மனம் எரிய வாழான் ஒரு நாளும்."

என்ற பழமொழி தெளிவாய் விளங்கச் சொல்லுகிறது. தன்னை ஈன்ற தாயார் மனம் எரியும்படி நடக்கப்பட்டவன் ஒருநாளும் நல்ல வழியில் நடக்கமாட்டான்; வெகு கஷ்டப் படுவான் என்றபடி. இது அவ்வளவும் உண்மை. இவ்விதமாகப் பிள்ளைகள் செய்கிற அநியாயங்களையும் பின் வரும் பழமொழிகள் நன்கு விளக்குகின்றன.

378. "தாய்ச் சீலைக்குச் சாண் துணியில்லை, தலைக்குமேலே சரிகை மேற்கட்டி."

தாய்க்கு ஒரு நல்ல சீலை இல்லாத—தராத—நிலையில், தான் சரிகை வேஷ்டி யுடுத்தினால் பெருமை யுண்டாய்விடுமோ?

379. "தன்னைப் பெற்ற தாய் கிண்ணிப் பிச்சை வாங்கச்சே, தங்கத்தாலே சரப்பளி தோங்க ஆடுதோம்."

இந்த வீண் கௌரவத்தால் பயனுண்டா?

ஆச்சரியம் என்பது அஞ்ஞானத்தால் உண்டாவது; அஞ்ஞானம், காரணம்; ஆச்சரியம், காரியம்.

380. "பெற்ற தாய் பசித்திருக்கப் பிராமண போஜனம் செய்வித்தது போல."

என்ன பிரயோஜனம்? பிராமண் போஜனம் செய்விப்பதைவிட, பெற்ற தாயைக் கவனித்துக் காப்பதே பெரும் புண்ணியம். அது தன் கடமையுமாம் என்றபடி.

381. "பெற்றதாய் பிச்சைக்கழ, மகன் கும்பகோணத்திலே கோதானம் பண்ணுகிருனும்."

இது முறைகெட்டு ஒழுங்கு தப்பி நடக்கிற கோணலை விளக்குவதாகும். இப்படிக் கேவலமாக நடப்பவர்களைப்பற்றிப் பின்வரும் பழமொழி நன்ருக எடுத்துச் சொல்லுகிறது.

382. "தன்னைப் பெற்றவள் கோடும்பாவி, தன் பெண்ணைப் பெற்றவள் மகராசி."

தன் தாயைக் கேவலப்படுத்திவிட்டு, தன் குமார்த்தியைப் பெற்ற தன் மனைவியைச் சிறப்பாகக்கொண்டு துள்ளுகிறவர்களை இந்தப் பழமொழி குறிக்கிறது. இத்தகையோர்,

383. "பெற்றவள் வயிற்றைப் பார்ப்பாள், பெண்சாதி மடியைப் பார்ப்பாள்."

என்பதை அறியாத மூடர்களாவர். பெற்றவளுக்குத் தன் குமாரன் பசித்திருக்கிருனு, புசித்திருக்கிருனு என்று அவன் வயிற்றைக் கவனிப்பதே நினைவாயிருக்கும். தான் பசியுடன் இருந்து கொண்டாகிலும் பிள்ளைக்கு ஊட்டுவது தாயின் ஜென்மகுணம். மனைவியின் தன்மையோ அவ்விதமல்ல. அவள் பணமிருக்கிறதா என்று தன் கணவனின் மடியைப் பார்ப்பதிலேயே கண்ணுவாள். கையில் பணமில்லை யென்ருல் மனைவி சிடுசிடுப்பாள். அன்று ஒரு பெரிய கலகம் வந்து விடும். தாய் வீட்டுச்செலவுக்குக் கேட்கையில் பணமில்லை யென்ருலோ அதற்கு அவள் சிடுசிடுக்காமல், கடன் வாங்கியோ, அல்லது வீட்டிலுள்ளதைச் சமைத்தோ மகனுக்கு அன்பாய் இட்டு ஆதரவு சொல்வாள். இதிலிருந்து தாயின் குணத்தையும், மனைவியின் போக்கையும் நன்கறியலாம். இவ்விதம் குணம் கெட்டு நடக்கும் பிள்ளைகளுக்கெல்லாம் என்ன பெயரென்ருல், அதைப் பின்வரும் பழமொழியில் காண்க.

384. "பெற்ருரை நினையாத தறுதலை."

தறுதலையன், தறுதும்பன், தறுதும்பு, தறுதலை, தறுகுரும்பன் என்ருல் எவருக்கும் அடங்காமல் ஒரு ஒழுங்குபாடு இல்லாமல் அவிழ்த்து விட்ட கழுதையாகப் புத்தி கெட்டுத் திரிகிறவர்கள் என்று பொருள். பெற்ருேரை ஆதரியாதவர்களும், அவர்களை எதிர்த்து மீறிக்கெட்டுத் திரிவோர்களும் தறுதலை யென்றே பெயர் பெறுவர். இவர்களின் ஆணுவக் கொழுப்பைப் பிறகு காலமோ, தெய்வமோ அடக்கி விடும்.

கோலகொண்டை மணி.

ஏறக்குறைய இரண்டாயிரம்வருஷங்களுக்கு முன் கோலகொண்டையில் பிரதிஷ்டை செய்யப்பட்ட மணியொன்று உண்டு. அந்த மணி இருக்கும் இடத்தில் நின்று பார்த்தால், அங்கே அக்காலத்தில் மிகப் பிரசித்தி பெற்றிருந்த புத்த தேவாலயமொன்று காணப்படும். அந்த மணி அந்தக் கோயிலுக்குப் போகும் வழியில் ஒரு தடாகத்தின் கரையில் ஒரு பெரிய பாறையின்மேல் புராதனமான பலகையினால் கட்டப்பட்ட மண்டபத்தில் ஒரு கட்டையிலே கட்டித் தொங்கவிடப்பட்டிருந்தது. மிகச் சிறந்த வெண்கலத்தால் செய்யப்பட்டதாதலாலும், வெகு சமர்த்தனான சிற்பியினால் நிருமிக்கப்பட்டதாதலாலும், அம்மணி மேற்புறமெல்லாம் சுற்றிக் கீற்றுக்கட்டப்பட்டுக் கண்ணாடியைப் பார்க்கிலும் அதிகமான பளபளப்புள்ளதாயிருந்தது. வெகு தூர தேசத்திலிருக்கும் பவுத்தர்களெல்லோரும் அது மிகவும் சிறந்த மணியென்று பலதரம் வந்து அதைப் பார்த்துப் போய்க்கொண்டிருந்தனர்.

ஃ

தாராபுரத்து ஸ்திரீயொருத்தி இம்மணியினது செய்திகளைக் கேள்விப்பட்டு ரகசியமாய் அங்கு வந்து, கண்ணாடிபோலப் பளபளவென்று மின்னுகிற அம்மணியில் பிரதிபலித்த சுந்தரமான தன் வடிவழகைப் பார்த்துத் தலைவாரிக் கொள்வது முதலான அலங்காரங்கள் செய்துகொண்டு, அதனாலுண்டாகிய ஆனந்தத்தால் உடம்பு தெரியாதவளாகி, இரண்டு கைகளினாலும், அம்மணியைப் பிடித்துக்கொண்டு, "ஓ! சர்வேசுவரா! எனக்கு இப்படிப்பட்ட கண்ணாடி ஒன்று கிடைக்கும்படி அனுக்கிரகிக்க வேண்டுமென்று தன் இஷ்டதேவதையைப் பிரார்த்திக்கலானாள். இவ்வண்ணம் அவள் அந்தப் பரிசுத்தமணியைத் தொட்டுச் செய்த ஸாஹஸகாரியத்தைச் சகியாமல் அது வெறுப்படைந்ததோ என்று நினைக்கும்படி உடனே அம்மணியின்மேலே இருந்த மெருகெல்லாம் மாறிப்போய்ச் சாதாரணமான மற்ற மணிகளைப்போல் ஆகிவிட்டது என்கிறார்கள்.

ஃ

இந்த மணியைப் புனாதேசத்துச் சந்நியாசியொருவன் வெகு நாளாகத் திருடிக்கொண்டுபோக நினைத்து, சமயம் பார்த்திருந்து கொண்டுபோய்த் தன் பட்டணத்தில் ஒரு கோயிலில் அம்மணியைக் கட்டினான். பின்பு அம்மணியில் கட்டியிருந்த கயிற்றைப் பிடித்து இழுத்து அடித்தார்கள். ஆனால், அந்த மணி மிக்க பயங்கரமாயும் விசனகரமாயும்

ரப்பர் குழாயை மார்பில் வைத்து ஹிருதயத் துடிப்பின்மூலம் பிணியை நிதானிப்பதென்பது ஆங்கில வைத்தியமுறை. சில சுதேச வைத்தியர்கள் தங்களுக்கு இந்த முறை தெரியாவிடினும், ரப்பர் குழாயை வாங்கி வைத்துக்கொண்டு அதனால் வியாதியஸ்தர்களைச் சோதிப்பதுபோல் நடித்து மயக்குகிறார்கள்.

ஒலிக்க ஆரம்பித்தது. அப்பொழுது அது ஒலித்த நாதத்தை நிதானித்துக் கேட்கையில், நா அ அ அ அ ன் கோ ஓஓஓஓஓ ல கோண்டை இ இ இ இ இக்குப்போ ஓஓஓஓஓ கவே எஎஎஎஎ ண்டும்—என்று கூவினது போலிருந்தது. இதென்ன இம்மணி இப்படிக் கூச்சல் போடுகிறதே யென்று வேறு பலரும் அடித்துப் பார்த்தனர். அதைக் கொண்டுவந்த சந்நியாசியே அடித்துப் பார்த்தான். அப்பொழுதும் கோல கொண்டைக் குப் போகவேண்டுமென்ற கூச்சல் மாத்திரம் மாறவில்லை. பிறகு எவ்வளவோ முயன்றும் அந்த சப்தம் மாறாததால் கோலகொண்டைக்கு அம்மணியைக் கொண்டுவந்து சேர்ப்பித்து விட்டனர். அங்கு பழய முன்னிருந்த மண்டபத்தில் அதைக் கட்டிய பிறகு முன்போல சப்தியாமல், எப்போதும் போலவே சாதாரண மான மற்ற மணிகளைப்போலவே சப்தித்துக்கொண்டிருந்தது என்று சொல்லுகிறார்கள்.

தங்களுக்கு வேண்டாதவர்களை வீட்டாரின் நிர்ப்பந்தத்தினால் வெறுப்புடன் அழைக்கும்படி நேர்வதுண்டு. அவ்விதம் அழைக்கும்போது அந்த வேண்டாதவர்களோ பழய மனஸ்தாபங்களைக் கிளப்பி "அப்படிப்பட்டவன் வீட்டுக்கு நான் போவேனு?" என்று "ராங்கி" யாய்ப் போகாமலே இருந்து விடுகின்றனர். இவர்களை அழைத்தவனே இவர்கள் வராததைக் கண்டு,—அவர்கள் வராமலிருக்க வேண்டுமென்பதே என் எண்ணம்; அதற்குத் தக்கபடியே அவர்களும் நடப்பது எனக்கு சந்தோஷமே,—என்கிறான். இதனால் அவர்கள் வராமல் காட்டிய அலக்ஷியத்துக்கு மதிப்பு ஏற்படாமலே போய் விடுகிறது.

பல்லாங்குழி விளையாட்டு

பல்லாங்குழி விளையாட்டில் 4—காய்கள் சேர்ந்தால் அதை 'முத்து' என்று சொல்லி எடுத்துக்கொள்வது வழக்கம். சிலர் அவ்விதம் நான்கும் சேராதவாறு பிரித்துவிடும்படி ஆடுவதுண்டு. நன்மனத்தினர்கள் நான்காகச் சேரக்கூடியதைக் கெடுக்காமல் அவ்விதம் நான்கே யாகும்படி வளரவிடுவர். விளையாட்டில்கூட கெட்ட எண்ணம் தகாது. ஆத்திரம் கோபம் ஆகாது. விளையாட வந்தோமேயன்றி கோபதாபங்கள் காட்டுவதற்காக விளையாட வரவில்லை. இவ்விதமே ஆணும் பெண்ணும் விவாகத்தால் ஒன்று சேர்ந்தது சந்தான விருத்திக்கும், சந்தோஷத்துக்குமே யன்றிச், சச்சரவு படுவதற்கல்லவென்று அடிக்கடி நினைத்துப் பார்த்துக்கொண்டு, இல்வாழ்க்கை யென்னும் பல்லாங்குழியில் ஆநந்தமாக விளையாடிக்கொண்டு போகும்படித் தங்களைப் பக்குவப்படுத்திக்கொள்ள வேண்டும். பிறரைக் கெடுத்துத் தான் லாபமடைகிற கெட்ட எண்ணம் விளையாட்டிலும் கூடாது; இல்வாழ்க்கையிலும் கூடாது. அதற்குப் பதிலாகப் பிறருக்கு வரும் கெடுதிகளையும் ஆபத்துகளையும் தவிர்க்கவும் நீக்கவும் முன்வர வேண்டும். இவ்விதமிருப்பதற்குச் சாதாரண பல்லாங்குழி விளையாட்டோ, வேறெந்த விளையாட்டோ அதில் கோபதாப சிடுசிடுப்பின்றி சாந்தமாயிருக்கக் கற்றுக்கொண்டால், அது வாழ்க்கையிலும் வழக்கமாக வந்து நம்மைத் திருத்துவிக்கலாம்.

கடன் வலைக்குள் சிக்குதல்.

கடன்பட்டுக் காப்பிக் கொட்டை வாங்குவதைவிட, கடன் இல்லாதிருப்பதே சிறந்த காபி பானமாகும். கடன் இன்றி, கையிலுள்ள பொருளுக்குத் தக்கபடி வாழ்க்கையை நடத்துவதே சுகம். கடன்பட்டவன் யதார்த்தவாதியாவது கடினம். கடனானது தன் முதுகில் பொய்யைத் தூக்கிக்கொண்டு வருகிறது. வாங்கின கடனைத் திருப்பித் தருவதற்குள் எத்தனையோ சாக்குப் போக்குகளைச் சிருஷ்டிக்கும்படி நேருகிறது. ஒருமுறை கேட்டுக் கடன் கிடைத்துவிடின், பின் அடுத்தடுத்து அவ்விடத்திலேயே சென்று கேட்கத்தூண்டும். கடன்வாங்கப் பழகின கை சும்மா இராது. கடனால் சிறுமையே யன்றிப் பெருமையில்லை. "கடன் வாங்கினவன் மடியில் கல நெருப்பு" "கடன் வாங்கித் திரிவோன் மனம் கலங்கித் திரிவான்." கடன்படாமல் முடியாதாயின், நீ எவ்வகை இன்பத்தையும் விலை கொடுத்து வாங்காதே. இன்பத்தை விட்டுவிடுவது கடன் படாதிருக்க வழி.

ஃ

ஒருவன் உலகத்தில் தலையெடுக்கத் துவக்கும்போதே கடன் வாங்க ஆரம்பிப்பானாயின், அவன் அவ்வளவோடு அழிந்துபோனவனே. கடன்படல் பெரிய துக்க சங்கதி; தரித்திரத்திற்கு வழி; மனோபலம் தேகபலம் யாவும் மண்ணாகிவிடும். பிறன் கையைப்பார்த்துக் கெஞ்சும்படி செய்யும் அப்படிப் பிறர் கையைப் பார்த்துக்கொண்டிருப்பவன் எவனும் தான் பிறருக்கு உதவிசெய்ய ஒருபோதும் வல்லவனாகமாட்டான். தன் காரியங்களைத் தானே நேருக்கு நேராகப் பார்த்துக்கொள்வதும், ரொக்க வரவு செலவு கணக்குகளை எழுதி, வரவுக்கு ஒருபடி குறைவாகவே செலவு செய்ய முயல்வதும் கடன் உண்டாகாதிருக்க மார்க்கமாகும். வேலைக்காரர்களை ஒருபோதும் நம்பியிருக்கலாகாது.

ஃ

கடனால் நேசனையும் பகைவனாக்கிக்கொள்ள வேண்டிவரும். பணத்தைச் சேர்ந்த காரியங்களை அற்பமென்று எண்ணிவிடலாகாது. ஒருவனுக்குப் பெருமை யுண்டாக்குவதும் பணமே; சிறுமை யுண்டாக்குவதும் பணமே. "நூறு வரையில் நீ என்னைக் காப்பாற்று; அப்புறம் நான் உன்னைக் காப்பாற்றுவேன்" என்று ஒரு ரூபாய் சொல்லிற்றாம். வருந்தாதார்க்கு வருமானமில்லை யாதலின் அவர்களைக் கடன்பேய் பிடித்துக்கொள்ளலாம். அதிர்ஷ்டத்துக்குத் தாய் உழைப்பேயாகும். உழைப்புள்ளவன் கடன்படாமலே தப்பித்துக்கொள்ளலாம். வந்த பணத்தையெல்லாம் முன்பு பட்ட கடனுக்கு அழுது தொலைத்தேன் என்றான் ஒருவன். ஒரு அணா கடன் வாங்கினும், அதைத் திருப்பித் தரும்போது மனதுக்கு வெகு கஷ்டமாகவே படும். எவ்விதத்திலும் கடன்படாமல் உள்ளதைக்கொண்டு இயன்றமட்டும் சமாளித்துச் செல்லப் பார்க்கவேண்டும். "கடன் உண்டு வாழாமை காண்ட லினிதே"

அச்சிடுவதின் மகிமை.

எதுவும் அச்சில் இருந்தால் அதற்கு ஒரு தனி மதிப்பு கொடுக்கப்படுகிறது. அந்த விஷயம் உண்மையாகவோ அல்லது பொய்யாகவோ இருந்தாலும் அச்சில் தோன்றிவிட்டால் அதற்கு உண்மையான ஒரு போர்வை போர்த்தப்படுகிறது. அச்சடித்த புஸ்தகங்களிலிருந்து எவ்வளவோ பொய் பித்தலாட்டங்கள் தோன்றினாலும் அதற்கே முதலில் மதிப்பேற்படுகிறது. பின் அவைகள் உண்மையல்ல, அல்லது ஆதாரமற்றவை என்று பிறகு அறிந்து ஏமாற வைக்கிறது. உதாரணமாக, பக்கத்து வீட்டு குப்பம்மாள் ஒரு சீட்டு சேர்க்கிறாள் என்று வைத்துக்கொள்வோம். அவளுக்கும் படிப்பிற்கும் வெகு தூரம். ஆனாலும், சீட்டு நடத்துவதில் அவளுக்கு மிகவும் அனுபவமுண்டு. யார் யார் எந்தெந்த மாதத்தில் எவ்வளவெவ்வளவு பாக்கி வைத்திருக்கிறார்கள்; இந்த மாதத்தில் ஒருவருக்குச் சீட்டு விழுந்தது, வேண்டாமென்று மற்றொருவருக்கு அதைத் திருப்பிக் கொடுத்ததினால் ஆன மாறுதல் முதலிய பல விஷயங்களையும் தன் மனதிற்குள் ஒரு பிசகும் நேர்ந்திடாதவாறு நடத்துவாள். அவளிடம் சீட்டு சேர்ப்பதற்குப் படித்தவர்கள் அவ்வளவாக முன்வரமாட்டார்கள். ஏனென்றால், அவளிடத்தில் அவள் நடத்தும் சீட்டைப்பற்றிய விவரங்களைக் குறிக்கும் விதிகளாவது விஷயங்களாவது அச்சில் இல்லாததினாலேயே. என், பென்சிலினாலும் ஒரு குறிப்பும் அவளிடத்தில் காணாததினாலேயே. ஆனாலும், அவள் பிறரை ஏமாற்றவோ அல்லது ஏதோ தப்பிதங்களுக்கு இடங்கொடுக்கவோ அவளுடைய அனுபவத்திலிருந்து இத்தனை காலம் இடம் கொடுக்கவில்லை. அவள் விஷயம் அப்படி இருக்க, பிறரை ஏமாற்றும் ஒரே நோக்கத்துடன் கிளம்பும் எத்தனையோ லாட்டரி, சீட்டு, நிதி, முதலியவைகளில் அவர்களுடைய அச்சிடப்பெற்ற விதிகள், நிபர்தனைகள் முதலிய படாடோபத்தால் ஏமாற்றமுற்றவர் எத்தனை பேர்? இவைகள் எதனால் விளைகின்றன? வஞ்சக எண்ணங்களைப் போர்த்துக்கொண்டு நல்லதாகத் தோற்றிய அச்சடித்த விஷயங்களை வைத்திருந்ததினாலன்றோ! அச்சடித்ததற்கு ஒரு தனி மதிப்பு வைத்ததினாலன்றோ!

ஃ

தாண்டவராயசெட்டி பழைய காலத்து மனிதர். அவர் ப ளிகையில் சின்ன பிள்ளை போய் கேட்டாலும் அதே விலை. பெரிய மனிதர் போய் கேட்டாலும் ஒரே விலை. பித்தலாட்ட பேரம் கிடையாது. அவர் கடையில் சாமான் வாங்கினால் அவரே தன்னிடத்திலிருக்கும் சிலேட்டில் பட்டி தயாரித்து நம்மிடம் கொடுத்து சரி பார்த்து அந்தப் பணத்தை வாங்கிக் கொள்வார். அங்கே ஒருவித தப்பிதமும் அநியாய விலையும் நாம்

இன்னும் சிலகால மிருந்தால் பெண்ணுக்கு விவாகத்தை நடத்திவிட்டு, குடும்பத்துக்கும் ஒரு தக்க பாதுகாப்பைத் தேடிவிட்டு, தனக்குப் பின்னரும் யாவரும் க்ஷேமமாயிருக்கும்படி ஏற்பாடுகள் செய்திருக்கலாம். அதற்குள் எமன் வந்து விடுகிறானே! என் செய்ய?

கொடுக்கவேண்டி வராது. ஆனல், எதிர் கடை சனிசாமி செட்டி கடையில் என்ன? கடைக்கு வருவோர் போவோருக்கு உட்கார நாற்காலிகள், பெஞ்சுகள், சோடா உடைத்துக் கொடுப்பதென்ன, பட்டியல் அச்சடித்த பில் புஸ்தகத்திலிருந்து கொடுப்பதென்ன. ஆனல் சனிசாமி செட்டி கடையில் வாங்கினல் எடை சரியா யிருக்காது. எடையும் ஆளுக்குத் தகுந்தவாறு பித்தலாட்டமாய்க் கொடுக்கவேண்டியதாக வரும். நல்ல சரக்கும் கிடையாது. ஆனலும் அங்கே கும்பல் அதிகந்தான். என்? அவனுடைய ஏமாற்றல்களும் பித்தலாட்டங்களும் அவனுடைய அச்சடித்த பில் புஸ்தகங்களிலும் மறைந்திருக்கிறது.

ஃ

எத்தனையோ பத்திரிகைகளுக்கு எத்தனையோ வியாசங்கள் எழுதி அனுப்பியாயிற்று எந்தப் பத்திரிகையும் அவனுடைய வியாசத்தைத் தப்பித் தவறியாவது பிரசுரித்தாகவில்லே. ஆனலும், அவன் அவனுடைய அரும் முயற்சியை கைவிட்டானில்லே. இன்னமும் அனுப்பிக்கொண்டிருக்கிறன். கடைசியில் ஏதோ ஒன்று அவன் அதிர்ஷ்ட வசமாகவோ அல்லது இத்தனை காலம் எழுதி எழுதி அனுபவம் மிகுந்ததினலேயோ நன்றய் அமைந்துவிடுகிறது. அதுவும் கூடிய சீக்கிரம் அச்சில் வெளியாகிறது. அப்போது அவனுடைய ஆநந்தத்தை அளவிட்டுச் சொல்ல முடியுமோ! இத்தனை காலம் தான் ஒரு எழுத்தாளன் என்பதை அந்த ஆசிரியர் அறிந்துகொள்ளாமல் தன்னுடைய வியாசங்களைப் புறக்கணித்ததும் ஒரு காரியமாகப் படுவதில்லே. அவரிடத்தில் பிரீதி அதிகமாகிறது. காரணம் தான் எழுதியதை அச்சில் பார்த்த பூரிப்பினலேயே.

ஃ

"அந்தப் பெண்ணை அவன் வேண்டாமென்று சொல்லிவிட்டான். மாப்பிள்ளே வீட்டார் வேறொரு பெண்ணைத்தான் தேடிக்கொண்டிருக்கிறர்கள். அவனுக்கு வேறொரு பெண்ணைத் தேடிக் கூடிய சீக்கிரம் முகூர்த்தம் வைத்துவிடுவார்கள்" என்று சுப்பு பாட்டி முத்து பாட்டியிடம் சொல்கிருள். முத்துப் பாட்டி "இல்லடி! அவன் அப்படித்தான் சொல்லிண்டிருந்தானும். பிறகு இப்போ ஏதோ சம்மதிச்சாப்போலிருக்கு. வேணுமுண்ணு பாரேன். கலியாணக் கடுதாசி வரும்" என்கிருள். ஒரு வாரம் கழித்து முத்துப் பாட்டி சொன்னது மாதிரி அதே பெண் மணப்பெண்ணுகவும் அவனே மணமகனுகவும் உள்ள ஒரு அச்சடித்த கலியாண அழைப்புப் பத்திரிகை இருவருக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது. சுவற்றிலிருக்கும் பூனே அந்தப் பக்கம் குதிக்குமோ இந்தப் பக்கம் குதிக்குமோ என்ற சந்தேகமே இல்லாது இந்தப் பக்கந்தான் கட்டாயமாய்க் குதித்தது என்று சொல்லும்படி அச்சடித்த பத்திரிகையின் மகிமை விவாகத்தை உறுதி செய்து விடுகிறது.

ஃ

தான் பிறரை அடக்கித் தன் அதிகாரத்தைக் காட்ட இவன் நினைக்கிறன். மற்றவர்களோ இவனைக் காலின்கீழ் போட்டு மிதித்து லக்ஷியமே செய்யாமல் எவ்வித மதிப்புமே தராமல் கேவலப்படுத்துகிறர்கள். இந்தத் தாழ்வு தன்னுடைய புத்திக் கோணலால் விளைந்ததென்பதை அவன் அறிகிறதுமில்லே, திருந்துகிறதுமில்லே.

"திம்மம்பட்டியில் அமாவாசைக் கவுண்டர் ஒரு பஞ்சாயத்து போர்டு மெம்பர்" என்றும் கவனியாமல் அவரை ஒருவர் அடித்துவிட்டார் என்று ஊர் பூராவும் பறை சாற்றி ஞற்போல் ஒவ்வொரு நாளும் பலர் பேசிக்கொண்டாலும் அது அமாவாசைக் கவுண்டருக்கு ஒரு பொருட்டல்ல. ஆனால், இந்த விஷயத்தைப் பிரமாதமாக எந்த அச்சாபீசிலாவது பிரசுரித்துவிட்டால் "அந்தப் பத்திரிகையையும், அதன் நிருபரையும் பஸ்மீகரம் செய்துவிடுகிறேன்" என்று அமாவாசைக் கவுண்டர் தன் தெருவாசலிலிருந்து ஒரு கூக்குரல் கிளப்புகிருர். அப்படியே தான் பஞ்சாயத்து போர்டு மெம்பர் பதவிக்கு வந்தது அந்த ஊர் பூராவும் தெரிந்திருந்தாலும் அது அவ்வளவாக அவருக்குச் சந்தோஷத்தைக் கொடுப்பதில்லை. ஆனால், அந்தப்பதவி தனக்குக் கிடைத்ததாக ஏதாவதொரு பத்திரிகையில் அச்சில் வெளியாய் விட்டால், அதைக் கிழித்துத் தன்னுடைய பொக்கிஷ அறையில் வைத்துக்கொண்டு தினமும் அதைக் கண்டு மகிழ்வார்.

ஃ

தான் எவ்வளவோ காக்காய் பிடித்துத் தன் மேல் உத்தியோகஸ்தர்களை சந்தோஷப்படுத்தியாயிற்று. எவ்வளவோ டீ பார்ட்டிகளை நடத்தியாயிற்று. தனக்கு ஒரு பட்டம் அளிப்பதாக மேலதிகாரிகளும் வாக்குறுதி கொடுத்தாயிற்று. நாளைக்கே அளிப்பார்களென்று நம்பத்தகுந்த இடத்திலிருந்தும் செய்தி கிடைத்தாயிற்று. ஆனாலும், அவருக்கு மனச்சாந்தி இருக்கிறதா? இல்லவே இல்லை. ஆனால், அவருடைய பெயர் ஒரு பட்டத்தின் கீழ் ஒரு பத்திரிகையில் அச்சில் பிரசுரமாகிவிட்டால் அப்போதுதான் அவருக்குப் பிரசவ வேதனை தீர்ந்த மாதிரி ஆகிறது.

ஃ

தன்னுடைய கடிதங்களையும் மற்றவைகளையும் வெறும் காகிதத்தில் எழுதினால் மகிமையில்லை. ஒரு அச்சடித்த லெட்டர் பேப்பரில் தன் பட்டங்கள் விலாசம் முதலியவைகளுள்ளதில் எழுதினால் அதற்கு ஒரு தனி மதிப்பு கொடுக்கப்படுகிறது. ஒரு மனிதரை அவருக்குப் பரிச்சயமில்லாத மற்றொருவர் பார்க்கச் செல்லுகையில் கொடுக்கப்படும் தன் விலாசம் முதலியனவுள்ள கடிதத்தை அச்சில் இருந்து கொடுத்தால் அதற்கு ஒரு கௌரவம் கிடைக்கிறது. அப்படி இல்லாது அந்த நேரத்திற்குப் பென்சிலினாலோ அல்லது பேனாவினாலோ ஒழுங்கீனமான காகிதத்தில் தன் பெயர் எழுதிக் கொடுத்தால் அதற்கு மதிப்பு குறையவே செய்கிறது.

ஃ

ஒருவன் முழு மோசக்காரனாகவோ அல்லது பல குற்றங்களுக்கு ஜவாப்தாரியாகவோ இருக்கலாம். அதைப்பற்றி ஊரார் அவனை எதிரிலும் மறைவிலும் திட்டத்தான் செய்கிறார்கள். அதைக் கேட்டுக்கொண்டு அவனும் அதைக் குற்றமாக எண்ணாது அவன்பாட்டில் போகிறான். வாயினால் அவன் எதிரில் சொன்ன சொல் அவனுக்குத் தப்பிதமாகத் தோன்றாது. அது அச்சில் வந்த மாத்திரம் பிரமாதமாகப்படுகிறது. என்னே! அச்சின் மகிமை!

S. ஸ்ரீரங்க ராஜு.

சேட்டுதனத்தின் போக்கு

உங்கள் குமாரனுக்குக் கடவுள் பக்தியே யில்லையென்றால், அதற்கு வியாபாரி, கோயில் பூஜைச் செலவுகள் லாபமாயிற்று என்கிறார். நாளைக்கு அந்தக் குமாரன் நாஸ்திகனாகிக் கண்டபடி துர்விஷயங்களில் செலவிட்டால் அதுவும் ஒரு லாபந்தான்போலும்! வீட்டுப் பெண்கள் வெகு செட்டாக இருக்க, வீட்டுப் புருஷர்கள் முனிசிபல் கௌன்ஸிலர் முதலிய பதவிகளுக்குப் பணத்தை வாரி இறைப்பார்கள். ஒரு ஏழைக்கு ஒரு காலணா தரமாட்டார்கள்; பெரிய உத்தியோகஸ்தர்களுக்குத் தடபுடல் விருந்துகள் நடத்துவார்கள். மூன்றணாவுக்குக் காய்கறி வாங்குவார்கள். அதில் காலணா அரையணா எண்ணெய் அதிகம் ஊற்றிவிட்டால் குடியே கெட்டுவிடுமென்று தரித்திரமாய்ச் சமைத்து உண்பதற்கு ருசிகரப்படாமற் செய்துவிடுவார்கள். வீண் விஷயங்களில் கண்டபடி செலவிட்டு, அவசியமானவற்றில் செட்டுத்தனம் காட்டுவார்கள் மூன்று காசு தர்மத்திற்குக் கொடாமல் வைத்தியனுக்கு முப்பது ரூபாய் கொடுப்பார்கள். சொந்த மனைவிக்கு ஒரு நகை செய்வதில் வெகு செட்டுத்தனம் காண்பித்துவிட்டு, தாசிக்கு இரத்தின பில்லை செய்யத் தட்டானிடம் போவார்கள். ஒரு எளிய பந்து தங்கள் வீட்டில் இரண்டு நாள் அதிகம் தங்கிவிட்டால் வெகு செட்டுக் காட்டிப் பொறுக்கமுடியாமல் துள்ளித் துரத்திவிட்டு, வருவானுக்கும் போவானுக்கும் கனத்த விருந்துகள் செய்வார்கள். இன்னும் சிலர் உடம்பில் 2000-ரூபா நகை தரித்திருப்பார்கள். அவர்கள் சாப்பிடும் சாப்பாடோ கத்தரிக்காய் வற்றல் குழம்பாய் வெகு பிசினறித்தனமாய் நாறிக்கொண்டு கிடக்கும்.

நீயாரோ! நானாரோ!

எல்லாம் ஒரு காரியத்துக்கே சந்திப்பு! காரியம் முடிந்தபிறகு அவரவரும் தத்தம் வேலைகளின்மீது கருத்தாய்ச் சென்றிடுவர். அதற்குமுன் ஓரிடத்தில் சந்தித்து அவருக்கு அருகே ஒட்டியிருந்து பேசியதெல்லாம் பிறகு நீயாரோ நானாரோ என்றாய்விடும். ரயில் வண்டி, ஜட்கா வண்டிகளில் ஒவ்வொருவர் பிறரிடம் எவ்வளவு பேசுகிறார்கள்; பொடி, வெற்றிலை சேட்டுப்பெற்று நேசமாய் வார்த்தையாடுகிறார்கள். அவர்கள் வண்டியைவிட்டு இறங்கவேண்டிய இடம் வந்து இறங்கிய பிறகோ நீயாரோ—நானாரோ என்று பிரிந்து போய்விடுகிறார்கள். தமக்குப் பிடிக்காத ஒரு வியாபாரியிடம் சரக்கு கொள்ளாதபோதும், சுயநல உருவினனை வெறுத்து ஒதுக்குகையிலும் நீயாரோ—நானாரோ என்று விலகிப் போய்விடுகிறார்கள். இறந்ததாக வந்த தந்திக்கு ஒருவர் உடனே பிரயாணமாகிவிட, மற்றவர்களோ போகாதிருந்து விடுகிறார்கள். காரணமென்ன? நீயாரோ—நானாரோ என்று தூரவிலகிப் பிடிப்பும் பற்றுதலும் அற்றவராய் இறந்தோரின் வீட்டார் இருந்ததால்தான். பரஸ்பரம் நெருங்கிய உறவும் அன்பும் நட்பும் இல்லாவிடத்தில் நீயாரோ—நானாரோ என்று தூர ஒதுங்கி விடுவதும் சாதாரணமே. ஒட்டினால் தொட்டிலும் கொள்ளும்; ஒட்டாவிட்டால் கட்டிலும் கொள்ளாது. முன்பு நேசமாயிருந்து பிரிந்துபோனவர்கள் வழி நடுவிற் சந்திப்பின் நீயாரோ நானாரோ தான். உறவினர் பகைப்பின் நீயாரோ நானாரோ என்று விலகிடுவர். ஒருவரின் கஷ்டத்தில் மற்றவர் விலகுவதும் இப்படியே.

சட்ட சபைத் தேர்தல்.

பொதுஜனங்களுக்கு ராஜீய ஞானத்தை ஊட்டுவதற்குப் பொதுத் தேர்தல் ஒரு சிறந்த கருவியாக உலகெங்கும் கருதப்படுகிறது. ஜனநாயக முறையின் அடிப்படையான தர்மங்களைக் காப்பாற்றுவதற்குத் தேர்தல் முறையே உலகெங்கும் அனுஷ்டிக்கப்படுகிறது. ஜனங்களுக்காக ஏற்பட்டுள்ள கவர்ன்மெண்டானது ஜனங்களாலேயே நடத்தப்பட வேண்டுமாயின், தேர்தல் முறையின் மூலமாகவே அது சாத்தியமாகும். எனினும், அபேக்ஷகர்களும் வாக்காளர்களும் தங்கள் தங்களுக்கு இருந்து வரும் பொறுப்பை உணர முடியாதபடி புல்லுருவி நடுவில் முளைத்திருந்தால் அதைக் களைந்தெறியவேண்டும். தேர்தல் பிரசார வேலையைப் பல ஜில்லாக்களிலும் சிலர் ஒரு தொழிலாகச் செய்துகொண்டு மிருக்கிறார்கள். ஒருவர்மீதொருவரைப் போட்டியாகக் கிளப்பிவிட்டேனும் பணத்தைச் சம்பாதிப்பதையே அவர்கள் முக்கிய நோக்கமாகக் கொண்டிருக்கிறார்கள். பிரதிநிதி ஸ்தானங்களை வகிப்பதற்குப் போதிய யோக்கியதையில்லாதவர்கள் பொதுத் தேர்தல்களில் அபேக்ஷகர்களாக நிற்க முன்வந்து, எவ்விதமேனும் வெற்றிபெற வேண்டுமென்பதற்காக, வாக்காளர்களை வசப்படுத்த ஒழுக்கமற்ற முறைகளைக் கையாண்டதன் மூலம் ஓட்டுச் சுதந்தரத்தின் புனிதத் தன்மையை வெகுவாகக் கெடுத்திருக்கிறார்களென்பதை ஒருவரும் மறுக்க முடியாது. ஆனால், அவைகளை ருஜுச் செய்வதென்பது சுலப சாத்தியமானதில்லை. இதன் பலனாக தேர்தல் போராட்டத்தில் இறங்கிய பல பெரிய குடும்பங்கள் அதோகதியாகி யிருக்கின்றன. ஆகையால், அறிவும் ஆற்றலும் அனுபவமுமுள்ளவர்களாகவும், எந்தப் பிரதிநிதிச் சபைக்கும் கௌரவத்தைக் கொடுக்கக் கூடியவர்களாகவும், தங்களுடைய தொகுதிக்கு உண்மையாக சேவை செய்யக்கூடியவர்களாகவுமிருக்கும் பலர் பொதுத் தேர்தலில் அபேஷகர்களாக நிற்பதற்கு முன்வரவே அஞ்சுகிறார்கள். இதனால் பிரதிநிதி ஸ்தாபனங்களுக்கு முக்கியமாக இருந்து வரவேண்டிய லக்ஷணம் அவைகளுக்கு இல்லாமற் போய்விடுகிறது.

ஃ

ஓட்டுத் தொகுதிகளோ மிகப் பெரியவைகளாக இருந்து வருகின்றன. இந்தப் பரந்த விஸ்தீரணத்தில் நானா ஊர்களிலுமாகச் சிதறிக்

ஒன்றைப் படித்துப் பார்ப்பதினாலேயே அறிவு வளர்ந்திடாது. அதை எழுதிப் பார்ப்பதினாலும், அதே விதமாகத் தான் எழுத இயலுமாவென முயன்று பார்ப்பதினாலுமே ஒவ்வோர் சமயம் அந்நூலாசிரியரைப்போல் தானும் எழுத ஆற்றல் பெறலாம். அதற்கும் அநேக நாள் ஆகும். எதுவும் உடனே கைகூடிவிடுவதில்லை.

லிடக்கும் வாக்காளரை அணுகி அவர்களுடைய ஆதரவைப் பெறுவதற்கு ஒவ்வொரு அபேக்ஷகரும் தங்களுடைய சொந்த முயற்சியையும் சக்தியையுமே பெரிதும் நம்பியிருக்க வேண்டியதாயுளது. மேலும், எல்லா வாக்காளர்களையும் அபேக்ஷகர்கள் நேரில் அணுகி, அவர்களுடைய ஆதரவைப் பெறுவதென்பது அனுபவ சாத்தியமானதில்லை. வாக்காளர்களும், அபேக்ஷகர்களும் தாங்கள் பொதுஜனங்களின் சார்பாக இருந்து அவர்களுடைய டிரஸ்டிகள் என்ற முறையிலேயே காரியத்தைச் செய்ய வேண்டியவர்கள் என்பதை உணரும்படியான காலம் வந்தால், தேர்தலும் திறமையாக நடைபெற்று நாட்டிற்கு நன்மையும் உண்டாகும்.

ஃ

ஓட் கொடுக்கிற வாக்காளர்கள் 50 ரூபாய் கிஸ்தி செலுத்துபவர்களாகவோ, அல்லது முனிசிபல் வரியாக 20-ரூபாய் செலுத்துபவர்களாகவோ, வருமான வரி செலுத்துபவர்களாகவோ இருக்க வேண்டுமென்று சில யோக்கியதைகளைக் கவர்ன்மெண்டார் ஏற்படுத்தி யிருக்கின்றனர். இந்த யோக்கியதையும் செல்வ அந்தஸ்து மில்லாதவர்கள் வெகு பேராக, அவை யுள்ளவர்கள் சிலரேயாகிறார்கள். இந்த சிலர், இந்த அந்தஸ்து இல்லாத வெகு பேரான ஜனங்களுக்கு டிரஸ்டிகள் போலிருந்துகொண்டு அவர்களின் நன்மையை மனதில் வைத்து, தகுந்த அபேக்ஷகரைத் தெரிந்தெடுத்து ஓட் கொடுக்க வேண்டிய பொறுப்பைக் கொண்டவர்க ளென்பதை அவர்கள் உணர்ந்தால் தக்க யோக்கியதையுள்ள அபேக்ஷகர்கள் தெரிந்தெடுக்கப்படுதல் சுலபமாகும். சொந்த நன்மையைப் பெருக்கிக் கொள்வதற்கு ஒரு சாதனமாக சட்டசபை புகும் பிரதிநிதி ஸ்தானத்தை உபயோகிக்க முயலுகிற சுயநலஸ்தர்களை அறிந்து ஒதுக்கி, தக்கவர்களை அறிந்து ஓட் செய்து தெரிந்தெடுக்கும்படியான அறிவும் தெளிவும் வாக்காளர்களுக்கு இருக்கவேண்டும்.

சிலர் உத்தியோக பதவியிலுள்ளவர்கட்கு விருந்து முதலியன நடத்தி, அவர்களைப்போல் தாங்களும் உடைதரித்துப் பந்து விளையாடி, அவர்களோடு அன்னபானம் செய்து, ஆசாரம் கெட்டு, எந்த மீட்டிங்குக்கும் சென்று, ஏராளமான பொருளை நன்கொடை யளித்து, பிறகு பணப்பெட்டி வறண்டு, கையில் காசு இன்றிப் பலரிடம் கடன் வாங்கித் தொல்லைப்பட்டு, பெருமைகெட்டு, தம் இனத்தாரின் பிரீதியை இழந்து, அந்தரத்தில் தொங்கும் திரிச்சங்குவைப்போல் அவஸ்தைப் படுகின்றனர். கடைசியில் இவர்கள் தேடிக்கொண்ட பெருமை தான் என்னவோ?

ஒரு விசேஷ சமயத்துக்குக் கடிதம் எழுதினால், அதற்கு உடனே பதில் தந்தால் தாங்கள் அந்த விசேஷத்திற்கு ஏதாவது செய்யும்படியான பணச் செலவு ஏற்படுமென்று மௌனமாயிருந்துவிட்டு, அந்த விசேஷம் நடந்தான பிறகு உபசாரக்கடிதம் அனுப்பி, அந்த விசேஷத்துக்குத் தாங்கள் மிகவும் சந்தோஷிப்பதாய்த் தெரிவிக்கிறார்கள். இதை அந்தக் கடிதத்தைப் பெறுவோர் அறியாமலில்லை.

ஒரு சில பத்திராசிரியர்கள்

எழுதுகோலைப் பிடிப்பதற்கு முன்பு பத்திராசிரியருக்கு ஒரு குணம்! அப்போது எல்லோருக்கும் நல்லவரே! யாவருடனும் கலந்து பழகிச் சிரிக்கும் உல்லாஸ முகமே. எழுதுகோலை ஏந்தியதும் வேறு ஒரு தனி மாதிரியான புதுக்குணம்! அந்த சமயம் எவரையும் லக்ஷியம் செய்கிறதில்லை; எவர் வந்தபோதிலும் பேசுவதில்லை. தன் எழுத்துவேலையிலேயே கவனம். எவ்வளவு விவரமாய் எழுதவேண்டுமோ அவ்வளவுக்கும் எழுதித் தீர்த்துவிடுகிறது. இந்த 'ஆணவ'மும், தடபுடலும், 'ராங்கி'யும் ஆரவாரமும், வணங்காத திமிர்பிடித்த தலையும் அதிகமேயன்றி, மற்றபடி அவர் ஏழைதான். ஓயாது உழைக்கும் கட்டைதான். தினமும் வீட்டுக்குக் காய்கறிவாங்க அவரே செல்லவேண்டியும் வரலாம். ஆனால், அன்பிலோ மகா உயர்ந்த ஸ்தானம். எவர் எது எழுதியனுப்பினும் கூடியவரை திருத்தி வெளியிட்டுத் திருப்தி படுத்தவே நினைவு. பிறர் பிரயாசையை நன்கறிந்த நல்ல உள்ளம். அன்புக்கு அடிமைத்தொழில் செய்ய எப்போதும் தயார். கடவுளை நம்புவதிலோ பூரணமாக மனதைச் செலுத்தியவர். செய்யும் காரியத்திலோ வெகு பொறுப்பைச் சுமந்து தாங்கியவர். தூஷிப்பவர்களைப் பார்த்துப் பொறுமைப்படுபவர். புகழ்பவர்களை நோக்கி நன்மனத்தினரென்று மகிழ்ந்து மௌனமாகிறவர். பிறரது குணங்களை யறிவதிலே விசேஷித்தவர். தன்னை அலக்ஷியம் செய்த இடத்தைத் திரும்பிப் பாராதவர். ஒரே பிடிவாதக்கொள்கையில் நிற்பவர். ஏழையும் செல்வரும் அவருக்கு ஒன்றே. ரோசத்திலும் மானத்திலும் வீரத்திலும் எப்போதுமே கண். தன்னை ஒரு சாதாரண மனிதன் போலவே காட்டிக்கொள்வதில்தான் அவருக்கு அதிக விருப்பம்.

யார் அதற்குக் காரணம்?

ஒரு மாற்றாந்தாய் தன் மூத்தாளின் குமாரனது வீட்டிற்குவந்து சில நாள் இருந்தாள். அவனுடைய குமார்த்தியைப் பார்த்து 'நீகூட இருந்து சரியாக வேலைசெய்ய மாட்டேனென்கிறாயே' என்று கோபித்ததற்கு அந்தச் சிறுமி அழுதாள். அதற்கு மாற்றாந்தாய் 'என் பெண்ணின் மகளானால் நான் அடித்தாலும் பேசாமலிருக்கும்; இந்தப் பெண்ணோ நான் ஒன்று சொல்லும்போதே முகம் கோணிக்கொள்கிறது' என்றாள். அதற்குக் காரணம் நீயே என்று மூத்தாள் குமாரன் கூற, மாற்றாந்தாய்; அது எப்படி சொல்லு என்றாள்.

"நீ எப்போதோ ஒரு தடவை விருந்தாளிபோல வந்துவிட்டுப் போய்விடுகிறாய். இந்த வீட்டை உன் சொந்தமாக நீ நினைப்பதில்லை. ஆகவே, குழந்தைகளும் உன்னை ஒரு விருந்தாளிபோல் தூரத்தில் ஒதுக்கி எண்ணுகிறார்கள். அந்த நிலையில் நீ ஏதாவது கூறினால் அது அவர்களின் மனதுக்கு வேதனையாகப் படுகிறது. நீயும் உன் பெண்ணின் மகளைச் சொந்த பேர்த்தியாக நினைப்பது போல் என் பெண்ணை நினைக்க சக்தியற்றிருக்கிறாய். அதனால் இந்தப் பெண் செய்வது உனக்குக் குற்றமாகப் படுகிறது. உன் சொந்த பேர்த்தி இப்படித் தவறு செய்தால் அது உன் மனதில் அவ்வளவாகக் குற்றமாய்ப்படாது. அதற்குக் காரணம் அன்புதான். அந்த அன்பை இங்கும் காண்பித்து, இங்கேயே அதிகமாகத் தங்கிக்கொண்டு, நீ ஏதாவது பேசினால் அது சொந்தப்பாட்டி பேசுவதுபோல் தோன்றி, மனதை வருத்தாமல் சாதாரணமாகப் போய்விடும். ஆதலின், நீ தூரமனுஷிபோல் வேற்றுருவமாய் நடப்பதை விட்டுவிடு" என்றான். மாற்றாந்தாய் மௌனமானாள்.

விவாக ரத்தும் இச்சா தாம்பத்தியமும்.

[மிஸஸ். மாகின்டோஸ் எம். ஏ.]

மணம், கிருக கிருத்தியம், இவ்விரண்டுமே எக்காலத்தும் மக்களது வாழ்க்கையின் முக்கிய அம்சங்களாகும். 'விவாகரத்து' என்ற கோடரியானது இவ்விரண்டு அம்சங்களையும் வெட்டி வீழ்த்திவிடும்போல் தோற்றுகிறது. இக்கோடாரியைக் கண்டு ஆடவரும் பெண்டிரும் ஒருங்கே அஞ்சவேண்டியதாகவிருக்கிறது. விவாகரத்து ஏற்பாடு சமூகத்தை நிலைகுலைத்து விடுமென்பதற்கு எத்தனை காரணங்கள் வேண்டுமாயினும் காட்டலாம். குடும்பத்தையே விவாக ரத்து சீர்குலைத்து விடுமென்பது சொல்லித் தெரியவேண்டிய விஷயமல்ல. கலியாணத்தின் லக்ஷியம்—பிரஜோற்பத்தி—பூர்த்தியாவது குடும்பத்தில் தான். இதற்கு 'மரணம் பிரிக்கும் வரை' கணவனும் மனைவியும் ஒன்றுபட்டிருத்தலவசியம். விவாக ரத்து செய்து கொண்டவர்களின் குழந்தைகளைவிடப் பரிதாபகரமான ஜீவன்களில்லை!

ஃ

குடும்பம் என்ற ஏற்பாட்டை ஒழிக்க இக்காலத்தில் முயற்சிகள் நடைபெறுகின்றன. குடும்ப ஏற்பாடு காலத்திற்கேற்றதல்லவென்று பெர்ட்ரான்ட் ரஸ்ஸல் போன்ற நூலாசிரியர்கள் பலர் கூறித்திரிகின்றனர். 'இச்சா தாம்பத்தியம்' (அதாவது, ஆணும் பெண்ணும் இச்சைப்பட்ட இடத்தில் ஒன்று சேர்ந்து தம்பதிகளாகிப் பிறகு வேறிடத்தில் இச்சை தோன்றியதும் முன் விவாகத்தை ரத்து செய்துகொண்டு புதிய ஆண் பெண்ணை நாடி மீண்டும் வேறு மணம் புரிதல்.) என்ற கொள்கையும் இப்பொழுது நிலவி வருகிறது. விவாக பந்தகத்தைத் தளர்த்தி, காமத்தைப் பூர்த்தி செய்ய அதிகப்படியான உரிமைகளை இருபாலரும் பெறவேண்டுமாம். இவ்வாறு செய்யினும் பிரஜோத்பத்தி ஏற்படும். ஆனால், இச்சாதாம்பத்தியத்தில் பிறந்த குழந்தைகள் இப்பொழுதிருக்கும் சமூகத்தினரைப் போல் வளரமாட்டா. பெற்றோர்களின் கடமை இல்லாது போமாயின் குழந்தைகள் பூச்சி புழுக்கள்போலத் தான் வளரும். நிலைபெற்ற நோக்கமும் லக்ஷியமுமின்றி அவை தான்தோன்றித்தனமாய் வளரும். அமெரிக்காவிலும் ரஷியாவிலும் இம்முறை பரீக்ஷிக்கப்படுகிறது. ஆனால் இது சரியாக நடைபெறவில்லை. தறுதலைகளாய்த் திரிய விரும்பும் ஒரு சிலரே இப்புதிய 'சீர்திருத்தங்களை' யாதரிக்கின்றனர்.

ஃ

விருத்த அவஸ்தைகளும், விருத்த பல ஹீனங்களும், விருத்தத் தளர்ச்சியின் சோர்வுகளும் யௌவன காலத்தில் தெரிவதில்லை. அந்த சோர்வுகளின் பொருளும், அவை எவ்விதமிருக்கு மென்பதுங்கூட விளங்குவதில்லை. பிறகு படும்போதே தெரிகிறது.

இவ்வேற்பாடுகள் சமூகத்தின் யோக்கியதையைக் கெடுத்துவிடும். மேலும் மேலும் யோக்கியதையை அபிவிருத்தி செய்துகொள்ளவே மக்கள் முயலவேண்டும். குடும்பமே இந்த லக்ஷியத்திற்கு மார்க்கம். இயேசுநாதர் விவாக ரத்தையும், சுயேச்சா தாம்பத்தியத்தையும் கண்டித்திருக்கிறார். சில தாம்பத்தியங்கள் சரியாக நடப்பதில்லை யென்பதை நானறிவேன். அத்தகைய சந்தர்ப்பங்களில் அவர்கள் பிரிந்து வாழட்டும். ஆனால், கணவனோ மனைவியோ உயிருடனிருக்கும்பொழுது மறு மணம் செய்து கொள்ளுவது விரும்பத்தக்கதில்லை. மேலும், பாவ கிருத்தியங்களே பெரும்பாலும் தம்பதிகளுக்குள் சச்சரவை உண்டுபண்ணக் காரணமா யிருக்கின்றன. கொஞ்சகாலம் பிரிந்து வாழ்ந்தாலும் மறுபடியும் சேருவோம் என்ற எண்ணம் தம்பதிகளுக்கிருந்தால் அபிப்பிராய பேதம் தீர்ந்துவிடும். காதலென்பது நாளுக்குநாள் அதிகப்படும் உணர்ச்சி. கணவனும் மனைவியும் பரஸ்பரம் உதவி புரிவதோடு கஷ்டங்களையும் சகித்து வந்தால் காதல் வளருவது நிச்சயம். கடவுளால் தம்பதிகள் சேர்க்கப்படுகின்றனர். மனிதன் அவர்களைப் பிரித்து வைக்காமலிருப்பானாக.

ஒருவன் கத்தரிக்காய் ஒரு அணுவுக்கு வாங்கும்போது அவன் வீட்டுக்கு வந்துள்ள விருந்தாளி அது போதாதென்று மேலும் காலணுவுக்குத் தான் வாங்கச் செல்லுகிறான். இதைக் கண்ட வீட்டுக்காரன் வருத்தத்துடன் "ஒரு அணுவுக்குக் காய் வாங்கியவனுக்கு இன்னொரு காலணு வாங்குவது கஷ்டமா? அவ்விதமே வாங்கிவிடுகிறேன்; என் நிர்வாகத்தில் நீ நடுவில் வந்து கோணல் சொல்லி நீயும் காய் சறிக்குச் செலவிட்டது போல் காட்டிக்கொள்ள வேண்டாம்" என்கிறான். காலணு சீமான் மௌனமாகிறான்.

உரியவரை இழந்தோர் துயரம் பெரிது பெரிதேதான். எத்தனைநாள் இருப்பினும் திருப்தியிலை. பிரியும் நாள் ஒன்று உண்டெனத் தெரியினும், அது எங்கோ அநேக ஆண்டுகட்குப் பிறகே யுள்ளதாக நினைவு. இங்ஙனம் நீள நினைத்து மனப்பால் குடித்து மதிமயங்கி இருக்கும் வேளையில் பேரிடி மரணம் நேரிடில் மாந்தரின் ஆவி—பாசமிக்கோர்தம் உள்ளம்—ஒரு துள்ளு துள்ளி அலறிச் சகிக்கத் தாளாது தத்தளித்துப் போய்விடுகின்றது. யாவும் விதியின் பிழை. சென்ற நாட்களின் களிப்பையும் மரித்தோருடன் மகிழ்ச்சியாய்க் குலாவிய காலங்களையும் எண்ணுந்தோறும் உன்னுந்தோறும் ஆற்றொணாத் துயரப்பெருக்கே. இன்றிறந்தோரை இனி இறக்கப்போவோர் சுமந்து செல்லும் மாயாவுலகின் விநோதத் தோற்றம் இருந்தவாறென்னே! என்னே!!

தாங்கள்கூட இருந்து ஒரு உதவியும் செய்வதில்லை. ஆனால், பிறர் மிக்கப் பாடுபட்டு உழைத்துவிட்டுச் சோர்ந்திடும்போது, "ஏண்டா இப்படி உழைக்கிறாய்?" என்று கைகாட்டி மகா மேதாவித்தனத்தோடுபேசமுற்பட்டுக் கொள்கிறார்கள். அவனுடைய உழைப்பு அவர்களுக்குக் கஷ்டமாய்த் தோன்றினால், வேறு பிழைப்பை அவனுக்குக் காட்டுகிறதுதானே! அதற்குமட்டும் கை நீளத்தைக் காணோம்!

மாணவர் பக்கம்.

மருவி வழங்கும் சில சொற்கள்.

"அண்ணாவுக்கயறு" என்று கூறும் சிலரைப் பரிகசித்து வேறு சிலர் "அரணாக்கயிர்" என்று அத்தொடரைத் திருத்துவர். முந்தியவர் கூறியது எவ்வளவு தவறானதோ, அவ்வளவு தவறானதே பிந்தியவர் திருத்தமும். இருவரும் கருதிக் கூறிய தொடர்மொழி "அரைஞாண் (கயிறு) என்பதே. இதற்கு 'இடுப்பிற் கட்டும் கயிறு' என்பது பொருள். (அரை—இடுப்பு; ஞாண்—நாண்: கயிறு) "கயிறு" என்ற சொல் அநாவசியமும் மிகையும் ஆம் என்பதையும் கவனிக்க.

ஃ

"கருகப்பிலே" என்பதைக் "கருவேப்பிலே" என்பதன் மரூஉ எனக் கொள்வர் சிலர். 'கருவேப்பிலே' என்பதற்குக் 'கருவேம்பின் இலே' என்பது பொருள். 'கருவேம்பு' என்ற ஒரு வகை வேம்பு உண்டு. அதற்கும் கருகப்பிலே' என்பதற்கும் யாதொரு சம்பந்தமும் இல்லே. ஆதலின், உண்ணற்கான கறிக்கு இடும் காரணத்தால் அது "கறிவேப்பிலே" என்று இருத்தலே நேர் என எண்ணுகிறோம்.

ஃ

"அப்பாவி" என்று ஒரு பாவமும் அறியாதவனேயும், "அப்பிராணி" என்று ஒரு தீங்கும் செய்ய வல்லமையில்லாதானேயும் நாம் பரிந்து கூறுகிறோம். இச்சொற்கள் அவ்விருவருக்கும் முறையே பொருந்துமாறெங்ஙனம்? "அப்பாவி" என்பதற்கு "அந்தப் பாவி" என்றும், "அப்பிராணி" என்பதற்கு "அந்த மிருகம்" என்றுமே பொருள் உண்டு. ஒரு பாவமும் அறியாதனே "அந்தப் பாவி" என்னலும், தீங்கு செய்யச் சக்தியில்லாதானே "அந்த மிருகம்" என்னலும் சரியா? அவை இரண்டும் வசை மொழிகளன்றோ? ஆதலின், அவை முறையே "அபாவி, அபிராணி" என்பவற்றின் திரிபுகளே ஆதல்வேண்டும். அவை இரண்டும் வடமொழிச் சொற்கள். அ—பாவி (ந—பாவி) பாவமில்லாதவன்; அதாவது நிர்த்தோஷி என்றும், அ—பிராணி (ந—பிராணி) பிராணற்றவன்—அதாவது செத்தவன் போன்றவன்; ஆதலின், தீங்கு செய்யத் திறமையற்றவன் என்றும் பொருள் படும் என்று நமக்குத் தோன்றுகிறது.

ஃ

"போக்கிரி" என்று போக்கற்றுத் திரியும் துஷ்டனொருவனேப் பார்த்துச் சொல்லுகிறார்கள். "போக்கிரி" என்பதற்குப் பொருள் இல்லே. அச்சொல் "போக்கிலி" என்றிருத்தலே நேர். "போக்கிலி" என்பதற்குப் "போக்கில்லாதவன்," "மனம் போன படி திரிபவன்" என்பன பொருளாதால் காண்க.

ஃ

"பார்க்காய்" என்றும், "பாவக்காய்" என்றும் ஒரு வகைக் கைப்புக் காயைக் கூறுகிறார்கள். "பார்க்காய்" என்பதற்குப் பொருளே இல்லே. "பாவக்காய்" என்றால், "பாவம் நிறைந்தகாய்" என்று பொருள் படுகிறது. இவ்விரண்டும் பொருத்தமில்லாத சொற்களாய் விட்டன. திருத்தமான மொழி யாதெனில், "பாகற்காய்" என்பதே. இதற்குப் "பாகல்" என்ற கொடியில் முளேக்குங்காய் என்பது பொருள். M. G.

*துரௌபதி கூந்தல் முடித்தல்.

—மஹா பாரதப் போரின் சுருக்கம்.—

(451-ம் பக்கத் தொடர்ச்சி)

II

பாண்டவர்களுக்கு இவ்வாறு ஜயமாகவே, அவர்கள் பீமனின் குமாரனாகிய கடோற்கசனுடைய பேருதவியைக்கொண்டு மறுபடியும் அன்றிராத்திரியும் யுத்தம் செய்யத் தொடங்கினார்கள். அப்போது கடோற்கசன் ஆகாய மார்க்கத்தில் நின்றுகொண்டு வெகு கடினமாகப் போர் புரிய, அவன் கொடுமையைப் பொறுக்கமாட்டாமல் துரியோதனன், இவனை எப்படியாவது உடனே கொன்றுவிட வேண்டுமென்று கர்ணனை வேண்டிக்கொள்ள, அவன் வேறு வகையில்லாமல் அர்ச்சுனனுக்கென்று தான் காப்பாற்றி வைத்திருந்த 'சக்தி' என்னும் படைக்கலத்தைப் பிரயோகித்துக் கடோற்கசனைக் கொன்றுவிட்டான். அவ்விரவு நடந்த யுத்தத்தில் பாண்டவ சேனையிலே விராடன், துருபதன் முதலான அரசர்களும், கௌரவ சேனையில் பகதத்தன், பூரிச்சிரவசு முதலியவர்களும் மாண்டார்கள். இப்பெரும் போர்க்களத்தில் பல பிசாசங்கள் அங்குள்ள உதிர மாமிசங்களைக் குடித்துத் தின்று களித்துப் பாடியாடிக்கொண்டிருந்தன.

ஃ

பிறகு, கிருஷ்ணன், துரோணாசாரியர் பிழைத்திருக்குமளவும் கௌரவர்களைக் கொல்ல எவராலும் முடியாதென்று தெரிந்து, துரோணாசாரியரைக் கொல்ல உபாயம் யாதுயென்று ஆலோசித்துக் கடைசியில், "அசுவத்தாமா மடிந்து விட்டான்" என்னும் பொருளுடைய பொய்ம்மொழியை யுரைக்கும்படி தர்மபுத்திரரைக் கேட்க, அவர் கலைபோனாலும் பொய் சொல்வதில்லை யென்பது எனது பிரதிக்ஞை யாகையால், நான் அவ்வாறு ஒருபொழுதும் உரையேன் என்று மறுத்தார். அதற்குக் கிருஷ்ணன், தர்ம சூக்ஷமம் அதுவன்று; சில சமயங்களில் பொய் சொல்வதும் புண்ணியமாகும்; மெய் சொல்வதும் ஒவ்வொரு தருணத்தில் தீச்செயலாகிவிடும்.

"பொய்ம்மையும் வாய்மை
யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்குமெனின்."

---

* "துரௌபதி கூந்தல் முடித்தல்" என்ற இது வேணீ ஸம்ஹாரம் என்ற ஸம்ஸ்கிருத நாடகத்தின் மொழிபெயர்ப்பாகும். இந்த நாடகம் சற்றேறக்குறைய 550-வருடங்களுக்குமுன் பட்ட நாராயணன் என்ற ஒரு ஸம்ஸ்கிருத மகா கவியால் எழுதப்பட்டது. இந்தக் கிரந்தத்தில் மகா பாரதம் சுருக்கமாய் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கின்றது. "வேணி ஸம்ஹாரம்" என்றால் 'கூந்தலை முடித்தல்' என்று அர்த்தமாகும். இதில் வீர ரஸம் அதிகமாய் விளங்குகின்றது.

ஒருவனுக்கு உயிர் போகிற தருணத்தில் ஒரு பொய் சொல்வதனால், அவன் பிழைத்துப்போம்படி யிருந்தால் அப்போது பொய் சொல்வது பிழையாகாதென நீதி நூல்கள் முறையிடுகின்றனவே; அப்படி யிருக்க, நீர் இப்பொழுது ஒரு பொய் சொல்வதனால் அநேகமாயிரம் பிராணிகள் மாண்டுபோகாமல் தப்புவார்களாகையால், அவசியம் நீர் இப்பொய் யுரை யுரைத்தே தீரவேண்டுமென வேண்டிக்கொண்டார்.

ஃ

அதற்குத் தர்மபுத்திரர், நீர் சொல்வது நியாயமே. ஆயினும், 'அசுவத்தாமா ஹத:" என்று நான் சொன்னால், அம்மொழியைக் கேட்டவுடனே துரோணாசாரியார் உயிர் நீத்துவிடுவார்; எல்லாப் பாதகங்களிலும் மிகப் பெரியதான குருஹத்தி தோஷத்திற்காளாகிவிடுவேன். ஆகலால், அவ்வாறுரைக்க நான் ஒரு போதும் துணியேனென்று மறுத்து விட்டார்.

ஃ

இவரது பிடிவாதத்தைக் கண்ட பீமன், இந்திரவர்மனென்னும் மாளவதேசத்தரசனுடைய அசுவத்தாமாவென்னும் யானையை நான் கொன்றிருப்பதால் "அசுவத்தாமா ஹத: குஞ்சர:" (அசுவத்தாமாவென்ற யானை கொல்லப்பட்டது) என்பது ஒருபோதும் பொய்யன்று; அதை நீர் உரைக்கலாமென்று நிர்ப்பந்திக்க, தருமபுத்திரர் அதற்கு உடன்பட்டார். "அசுவத்தாமா ஹத:" என்று உரப்பாய்த் துரோணர் காதில் கேட்கும்படி தர்மபுத்திரர் சொன்னவுடனே "குஞ்சர:" என்பது அவருக்குக் கேளாதிருக்கும்படி கிருஷ்ணன் சங்கநாதம் செய்தார். அதைக் கேட்டுத் துரோணர் தம் அருமை மகன் உயிரிழந்ததாக நினைத்து, வில்லை யெறிந்துவிட்டு, இனி நான் இவ்விடம் விட்டு எழுந்திருப்பதில்லை யென்று கண்ணும் கண்ணீருமாகக் கீழே விழுந்துவிட்டார். அப்போது திருஷ்டத்யும்னன் அவர் தலை மயிரைப் பிடித்திழுத்துக் கொண்டு கத்தியால் அவர் கழுத்தை யறுத்துவிட்டான். இந்த அக்கிரமத்தைக் கண்ட அங்குள்ளாரெல்லாரும் ஹாஹாகாரம் செய்ய அந்தக் கூச்சலைக் கேட்டு அசுவத்தாமா அவ்விடத்திற்கு வெகு விரைவாய் ஓடி வந்தான்.

ஃ

இப்படி சேனைத் தலைவரான துரோணர் கீழே விழுந்து மடியவே, போர்வீரர்களெல்லோரும் நாற்புறமும் முறிந்தோடினர். இதை அசுவத்தாமா கண்டு "ஓகோ! இதென்ன? இதுவரையில் மகாராசனின் உப்பைத் தின்று உயிரைக் காப்பாற்றினேமென்பதைச் சிறிதேனு மெண்ணாமல், அவர்க்கு ஆபத்து நேர்ந்த காலத்து உயிரைக் கொடுத்தாயினும் கட்டிக் காப்பதைவிட்டு, மானத்தைக் கைவிட்டுப் பிராணனையே பெரிதாய்

ஒருவரை ஒரு வேலையினிமித்தம் உதவிக்கு அழைக்கிற சமயத்தில் அவர் தென்படுகிறதேயில்லை. ஒரு சமயம் எதிர்ப்பட்டாலும் நாளைக்கு ஆகட்டுமென்கிறார். இன்றைக்கு நல்ல நாள் அல்ல என்கிறார். நாளைக்கோ அவரைக் கண்டுபிடிக்கவே முடிகிறதில்லை. பிறகு நாமே மற்றொருவரின் உதவியைக் கொண்டு அந்த வேலையை முடித்துக்கொண்ட பிறகு, 'அவர்' எதிர்ப்பட்டு எல்லாம் ஆய்விட்டதா சந்தோஷம் என்கிறார். இதென்ன பேய்க்குணமோ? இதை ஒரு சமர்த்தாகவும் நினைத்துக் கொள்கிறார்களே!

எண்ணி, மகாவீரர்கள் எனப் பெயர் பெற்ற இவர்களும் இப்படிப் பயந்தோடுகிறார்களே! கொள்ளு என்றால் வாயைத் திறப்பதும், கடிவாளமென்றால் வாயை மூடுவதுமா? அப்படித்தானென்ன! இவர்கள் சிரஞ்சிவிகளாயிருக்கப் போகிறார்களா? ஆறிலும் சாவு, நூறிலும் சாவுதானே. பிறக்கும்போது இறப்பும் உடனே பிறந்திருக்கின்றதென்பதை இவர்கள் அறியார்களோ. போர்க்களத்தில் பின்வாங்குவதைவிடப் பெரும் பழிப்பு வேறுண்டோ? ஜயித்தால் புகழுண்டு; மரித்தாலும் வீர சுவர்க்கமுண்டே. அதனிலும் நமது பிதா சேனாதிபத்தியத்தை வகித்திருக்கும்பொழுது இவ்வாறு சேனை கலைவதற்கு என்ன நிமித்தம் என்று இப்படிப் பலவாறு சொல்லிக்கொண்டே சென்றான். செல்லும்பொழுது வழியில் ஓடிவந்த துரோணாசாரியருடைய சாரதி அசுவத்தாமாவைக் கண்டு, "அப்பா, உனக்கு இன்னும் தந்தை ஒருவர் பூமியில் இருக்கின்றாரோ?" என்று சொல்லி அவனைக் கட்டிக்கொண்டு கண்ணீர் விட்டான். அவனால் தன் தந்தை உயிரிழக்கும்படி நேர்ந்த செய்தியைக் கேட்டுச் சோகத்தால் மூர்ச்சையடைந்து கீழே வீழ்ந்தான்.

ஃ

அத்தருணம் அசுவத்தாமனின் மாமாவாகிய கிருபாசாரியரும் அவ்விடம் வந்து சேர, அசுவத்தாமா பல சிதோபசாரங்களால் மூர்ச்சை தெளிந்து எழுந்து, தந்தையை நினைத்துச் சிறிது நேரம் புலம்பிப் பிறகு, சத்தியவாக்கு என்று தரும புத்திரன் சொன்ன பொய்ப் பேச்சை நம்பி நான் இறந்து போனதாயெண்ணிப் பிதா பிராணனைவிடத் துறந்தாரே; உத்தன்மையான என் அருமைத் தந்தை உண்மையாகவே உயிரிழந்த பிறகு நான் பிராணனை வைத்திருப்பேனா? இதோ நானும் அவர் சென்ற வழியே செல்லுகிறேனென்று கூற, கிருபாசாரியார் பலவிதமாக அவனைச் சமாதானப்படுத்தி, குழந்தாய், அப்படியன்று; பிதாக்களுக்குப் புத்திரர்கள் இவ்வுலகம் மேலுலகம் என்னும் இரண்டிலும் உதவிபுரிய உரிமைப் பட்டிருக்கின்றனர்; நீ பிழைத்திருந்து தர்ப்பணம் முதலியவைகள் செய்து வருவதே உன் பிதாவுக்கு நீ செய்யவேண்டிய பெரிய கடமையாம் என்று சொல்லித் தேற்றினார்.

ஃ

அப்பொழுது ஆ! ஆ! விசனத்தினால் படைக்கலங்களை யெறிந்துவிட்டுப் பிராயோபவேசமாய்ப் படுத்துக்கொண்ட துரோணாசாரியரைத் திருஷ்டத்தியும்னன் தலை மயிரைப் பிடித்திழுத்துக்கொண்டு கத்தியால் கழுத்தை அறுத்துவிட்டு ஓடுகிறானே! இந்த அக்கிரமத்திற்குக் கேள்வியில்லையா என்று ஒரு பெருங் கூச்சல் கேட்டது. அதைக் கேட்டவுடனே அசுவத்தாமா அதிக பௌருஷங்கொண்டு, "அடே! திருஷ்டத்தியும்னா! உயிரை விட்டுப் பிணமாய்ப்போன என் தந்தையை நீ நாய்

புத்தக உருவமைந்த மாதப் பத்திரிகைகளைப் பத்திரமாகச் சேர்த்துப் பயிண்டு செய்து கொள்வது வழக்கம். அவ்விதம் பயிண்டு ஆகி ஒரு பெரிய புஸ்தக வடிவில் அமைந்த நூல் ஒரு பொக்கிஷத்துக்குச் சமமாகும். தற்போது மாதப் பத்திரிகைகள் பெருகிவிட்டதில் அப்படியே அவற்றை மளிகைக் கடைகளில் வீசை இரண்டணா வீதம் விற்றுத் தொலைக்கும் புத்திமான்களும் புறப்பட்டிருக்கிறார்கள்!

நரிகளுக்கு ஒப்பாய்ப் பிடித்திழுத்தாய்; உயிரோடிருக்கையிலேயே நான் உன்னையும், இவ்வக்கிரமச் செய்கையைக் கண்ணுற்றிருந்த மற்றும் பல அரசர்களையும் அவ்வாறு பிடித்துச் சித்திரவதை செய்து என் துயரத்தைத் தணித்துக் கொள்கிறேன். பரசுராமர் தன் பிதாவை க்ஷத்திரியனொருவன் கொன்றதற்காக என்னென்ன செய்தாரோ அவ்வளவையும் நான் செய்வேன்" என்று ஒரு அட்டகாஸம் செய்தான். அது கேட்டுக் கிருபாசாரியார், "குழந்தாய், நீ இப்பொழுது பேசியது உன் சூரத்தனத்துக்குத் தக்கபடியே யிருக்கின்றது. ஆயினும், நீ சேனாதிபத்தியத்தை வகித்துக்கொண்டு பிறகு இவ்வாறு செய்வாயானால், உன் மகிமைக்கு மிகவும் ஏற்றதாகும்" என்று சொல்லி, அவனையும் அழைத்துக்கொண்டு துரியோதனன் இருக்கு மிடத்துக்குச் சென்றார்.

ஃ

துரோணர் போர்க்களத்தில் மாண்டவுடன், துரியோதனன் கர்ணனைச் சேனாதிபதியாக அபிஷேகம் பண்ணிவைத்து. அவனுடன், "துரோணாசாரியார் என்ன தான் வில்வித்தையில் கெட்டிக்காரராக இருந்தும் தன் பிராமண குணமான பயத்தைக் காட்டிப் போர்க்களத்தில் ஆயுதத்தை நழுவவிட்டாரே" என்று சொல்லிக் கொண்டிருந்தான். இத்தருணத்தில் அசுவத்தாமாவும் கிருபாசாரியரும் அங்குபோய்ச் சேர்ந்தனர். துரியோதனன் அவர்களுக்கு ஏற்ற மரியாதைசெய்து, ஆஸனங்களில் வீற்றிருக்கப்பண்ணி, துரோணாசாரியர் உயிரிழந்ததைப்பற்றி அசுவத்தாமாவுக்கு உபசாரஞ் சொல்லி, தனக்குப் பெருந்துணையாயிருந்தவர் இறந்துபோனது தனக்குக் கையொடிந்ததுபோலாகிவிட்டது என்று மிகவும் விசனமடைந்து நின்றான். அதுகண்டு அசுவத்தாமா, "நீ என்னிடத்தில் இத்தனை ஆதரவாயிருப்பதனால் எனக்குத் தகப்பனார் இறந்த துக்கங்கூட மறந்து போகின்றது; ஆயின், நான் உயிரோடிருக்கையிலேயே பிதாவுக்கு இந்த விபத்து நேரிடலாயிற்றே என்பதை நினைக்கும் பொழுது மாத்திரம் மனதுக்கு மிகத் துயர முண்டாகின்றது" என்றான்.

ஃ

அருகிலிருந்து அதைக் கேட்டிருந்த கர்ணன், "அதற்கு யார் என்ன செய்வது? பகைவர்களை வெல்வதற்குப் பெருந் துணையான படைக்கலங்களை அப்பால் எறிந்து விட்டால் போர்க்களத்திலுள்ளோர் சும்மா விடுவார்களோ?" என்று பரிகாசமாய்ப் பேசினான். அதன்மேல் அவ்விருவருக்கும் ஒன்றின்மேல் ஒன்றாய்ப் பேச்சுகள் வளரும்படியாயிற்று.

ஃ

அசுவத்தாமா, கர்ணனைப் பார்த்து, "என்ன சொன்னாய் தேர்ப்பாகன் மகனே" என, அதற்குக் கர்ணன் "நான் தேர்ப்பாகனாகட்டும், யாராயிருந்தால் தான் உனக்கென்ன? நாம் பிறக்கிற குலம் தெய்வத்தின் செயலல்லவோ? நமது செயலெல்லாம் நம்முடைய சொந்த சக்தி

முன்னூறு பக்கக் கதையைப் பத்து பக்கத்தில் சுருக்கி எழுதிவிடலாம். அவ்விதம் சுருக்கிச் சிறுகதையாகத் தருவது பெரிய கதைக்கு நஷ்டமன்றோ? ஆகவே, இரண்டொரு கற்பனைகளை மட்டுமே கொண்டு அதற்கேற்றபடி விவரித்து அழகு செய்து சிறு கதையாக முடிப்பது வழக்கமாயிருக்கிறது.

ஆகையால், நம்முடைய சொந்தச் செயலை எடுத்துப் பேசவேண்டுமே யல்லாது பிறப்பு முதலிய தெய்வச் செயல்களைப்பற்றிப் பேசக் கூடாது. என் பிறப்பு எப்படி யிருந்தாலும் எனது ஆயுதங்களைப் போர்க்களத்தில் துரோணாசாரியர் கைவிட்டதுபோல் நான் விடவில்லை" என்றான். இதைக்கேட்ட அசுவத்தாமா அடக்கக் கூடாத கோபமடைந்து "தேர்ப்பாகனின் குலத்திற் பிறந்த பதரே, என் தகப்பனாரை நீ நிந்திக்கிற நிந்தைமட்டும் நான் பொறுப்பேனா? இந்தக் காலை உன் தலையில் வைத்து மிதிக்கிறேன். உன் கத்தியைக்கொண்டு தடை செய் பார்ப்போம்" என்று சொல்லித் தனது இடது காலைத் தூக்கினான். உடனே, கர்ணனும் கோபத்துடனே கட்கத்தை உருவி, "அடா, தற்புகழ் செய்து கொள்ளும் பிராமணப் பதரே. உன் சாதியின் பொருட்டு நான் உன்னைக் கொல்லக் கூடாதென்றாலும், இந்தப் பட்டயத்தினால் உன் காலை வாங்கி விடுகிறேன்" என்றான். அதற்கு அசுவத்தாமா, "நீ என்னுடைய சாதியின் பொருட்டுப் பின்வாங்கவேண்டியதில்லை; இதோ என் பூணூலை அறுத்தெறிகிறேன்; வா, சண்டை செய்ய" என்று காலருத்திரன் போலக் கனைத்து நிற்க, அவ்விருவரையும் கிருபாசாரியரும் துரியோதனனும் விலக்கிச் சாந்தப்படுத்தி விட்டார்கள்.

ஃ

இப்படித் துரோணாசாரியரைக் கர்ணன் நிந்தித்திருக்க. அதைக் கொஞ்சமேனும் கவனிக்காமல் அவனுடன் சேர்ந்திருந்த துரியோதனனிடம் அசுவத்தாமா கோபங்கொண்டான். பிறகு, கிருபாசாரியர், "இப்போது அசுவத்தாமாவுக்குச் சேனாதிபத்தியம் கொடுத்தால் இவனுக்கு இருக்கிற ஆக்கிரகத்தில் பகைவர்கள் அனைவரையும் ஒரு நொடியில் அதம் செய்துவிடுவான்" என்று கூற, துரியோதனன், "நீர் உரைப்பது உண்மையே; ஆயினும், நான் முன்னமே கர்ணனுக்குப் பட்டாபிஷேகம் செய்துவிட்டதால் சொன்ன சொல்லை மறுபடி மாற்றுவது உசிதமல்லவே" என்றான்.

ஃ

அதைக் கேட்டதும் அசுவத்தாமா, "நான் இதோ சென்று பாண்டவர்களை நொடிப்பொழுதில் பொடியாக்கிவிட்டு வருகிறே"னென்று வீரவாதம் செய்ய. அதுகேட்டுக் கர்ணன் "மகா மகா சூரர்கள்கூட உன்னைப் போல இவ்வாறு வீரவாதம் செய்யவில்லையே; என் வீணாய்க் கூவுகிறாய்? பாண்டவர்களென்றால் என்ன? கிள்ளுக்கீரை என்று நினைத்தாயோ" என்றான். அதன்மேல் அவ்விருவருக்குமே பெருங் கலகம் விளைந்து கை கலக்கிற தருணமாகிவிட்டது. கிருபாசாரியரும், துரியோதனனும் அவர்களை விலக்கிச் சமாதானப்படுத்த, அசுவத்தாமன், "இனி, நான் கர்ணன் சேனாதிபதியா யிருக்குமளவும் கையில் ஆயுதமெடுப்பதில்லை" யென்று பிரதிக்ஞை செய்து ஆயுதங்களை எறிந்து விட்டான். கர்ணன் அது கண்டு, "நான் ஆயுதபாணியாய் எதிர்த்துச் செல்லும்பொழுது, நீ ஆயுதமெடுத்துச் செய்ய வேண்டிய உதவி ஒன்றுமில்லை; நீ போர்க்களத்துக்கு வருவதும் வராதிருப்பதும் இரண்டும் ஒன்றுபோலத்தான்" என்றான்.

(இனி, 'மூன்றில்' முடிவு.)

கடவுள் சிலருக்கு நல்ல பதவியைக் கொடுத்தும் நல்லவன் என்ற பெயரெடுக்க முடியாது போய் விடுகிறது.

சோம்பலின் கோணல்.

சோம்பல் எப்படியோ எல்லாருக்கும் சொந்த சொத்து. சோம்பல் என்பது துளி அளவாவது இல்லாமல் ஒருவனும் இருக்க முடியாது. தகுந்த வேலை கொடுத்து மூளையை அதன் தூக்கத்திலிருந்தும் எழுப்பாதவரையும் சோம்பல் சூழ்ந்திருக்கத்தான் செய்யும். கொஞ்சம் ஒழிவு கிடைத்தால் அதில் வேறொரு வேலை செய்ய வேண்டுமேயன்றி சோம்பியிருத்தலாகாது. இளைப்பாறுதல் என்பது வேலையை மாற்றிக் கொள்ளுதல் என்று அர்த்தமேயன்றி சும்மா கிடப்பதென்பதல்ல. பேசுவதும் ஒரு வேலை. விளையாடுவதும் ஒரு வேலை. களைத்துத் தூங்குவதும் ஒரு வேலை. இப்படி வேலையாக இருக்கவேண்டுமேயன்றி சோம்பி இருக்கவொண்ணாது. இன்று செய்யக்கூடிய ஒரு வேலையை அதைச்செய்ய எவ்வளவோ நேரமிருந்துங்கூட, நாளை செய்வோமென்பது ஒரு சோம்பற்றன்வையாகும். கைக்குப் பணம் கிடைத்த இப்போதுதானே கடன் தீர்த்துவிடாது பிறகு தருவோம் எனல் சோம்பலின் கேடுகளிலே ஒன்றாம். அதிகாலை நேரம் ஒரு பொன் சுரங்கம் கண்டெடுத்ததற்குச் சமம். அந்த நேரத்தில் எழுதவோ, ஒரு தொழில் செய்யவோ நாடாது தூங்கிவிழுதல் சோம்பலின் அவலக்ஷணமாம். வந்த கடிதத்திற்கு உடனே பதில் எழுதாமல் நாட்களைக் கழிப்பதும் ஒரு சோம்பலாம். இன்ன நேரத்தில் இன்ன வேலையென்று கண்டிப்புத் திட்டத்துடனிருந்து அதைச் செய்து சோம்பலுக்குட்படாது விளங்குவோர் கடவுளின் ஆசி பெற்றவராவர். சுறுசுறுப்புக்காரனை நம்பலாம். சோம்பி உட்கார்ந்திருப்பவனை நம்பொணாது. அவன் வீட்டுக்கே ஒரு அவலக்ஷணமாம்.

அரைகுறை வேலைகள்.

எந்த வேலையையும் அரைகுறையாக விட்டுவிடுவது அவலக்ஷணம். ஒரு கடிதத்தைப் பாதிவரையில் எழுதிவிட்டு மறுபாதியை எழுதச் சோம்புவதில். அன்றைய தபாலுக்கு அதை அனுப்ப முடியாமற் போய் விடுகிறது ரஸத்தில் இன்னும் கொஞ்சம் மிளகைப் போடாமல் அரைகுறையாக விடுவதில் உண்பதற்கே ருசியற்று வீணாகிறது. ஒரு அரையணா எண்ணெய் அதிகம் ஊற்றி அந்தக் காய்கறியை வறுத்திருந்தால் எவ்வளவோ நன்றாக இருக்கும். அவ்வளவுக்குச் செலவிட்டவன் அந்த சிறியதையும் வாங்கிக் கொடுத்திருந்தால் பெண்களின் முகம் கோணாதிருக்கும் அரைகுறையான பேச்சுகள் எப்பொழுதும் உறுதியற்றதாகும். அரைகுறையான ஒரு நேசம் ஆபத்துக்கு நமபக்கூடியதல்ல. எந்தக் காரியத்திலும் ஒரு மிச்சத்தைச் செய்யாமல் பாக்கிவைப்பது அரைகுறையான வேலைதான். எல்லா காய்கறிகளும் வாங்கிவந்து இலை வாங்க மறந்துவிடுவது எவ்வளவு கஷ்டம். ஒருவருக்கு ஒன்றைத் தந்தால் மனஸ்பூர்வமாகக் கொடுக்க வேண்டும். அரைகுறையான மனதுடன் தருவதிலும் செய்வதிலும் உண்மையான திருப்தியைக் காண இயலாது. அரைகுறையான கவனிப்பினால் விருந்தினர் மனஸ்தாபப்பட நேர்கிறது. இன்று பையனுக்குப் பாடம் கற்பித்துவிட்டுப் பிறகு சிலநாள் பொறுத்துப் பாடம் கேட்பது விருத்திக்குரியதல்ல. ஒரு நூலைப் பாதி வாசித்து மிகுதியை எப்போதோ ஒருநாள் படிக்க முயல்வது ருசிக்காது. அதுவும் கேடு கெட்ட அரை குறை வேலைதான்.

6-ஆங்கில காதற் கடிதங்கள்.

(446-ம் பக்கத் தொடர்ச்சி.)

6-ம் கடிதம்.

அந்தக் கனவான் லண்டன் பட்டணம் வந்து சேர்ந்த பின்பு நாட்டிலிருந்த அந்தப் பெண்ணுக்கு எழுதியது.

எனதன்புள்ள கண்ணே,

நான் இனி உன்னை இப்படித்தான் அழைக்கவேண்டியது. இராத்திரிதான் இங்கு வந்து சேர்ந்து இப்போதே எழுதுகிறேன். இந்த லண்டன் பட்டணம் எப்படிப்பட்ட தொழில் நடக்கும் இடமாயும், இதில் என்னென்ன தேசத்து மனிதர்களெல்லாம் கூடியதாயும், ஓயாது நடக்கும்படியான பரபரப்பான வேலைகளாயும், உயர்குலத்தோரும் கனவான்களும் தங்கள் முன்னோர்வைத்த ஆஸ்திகளை எப்படிப்பட்ட நாசம் செய்கிறதாயும். வியாபாரத்தாற் குடிகள் எப்படிப்பட்ட திரவியம் தேடுகிறதாயும் இருக்கின்றது. வியாபாரம் செய்யும் ஜாதியாரிடத்தில் மனிதர் நடக்கை எப்போதும் இப்படித்தான் இருக்கின்றது. ஒருவன் விதைக்கவும், ஒருவன் தூக்கவும், மற்றொருவன் அவர்கள் பாடுபட்ட பலனை அனுபவிக்கவுமா யிருக்கின்றது. எனக்கோ வெனில், இந்த ஆரவாரமும் தனிவாசமும் இஷ்டமுள்ளவைகளல்ல. எல்லாக் காரியத்துக்கும் மத்தியநிலை ஒன்று உண்டு. அதையே அதன் தலை கடை இரண்டுக்கும் உத்தமமாக எண்ணவேண்டும்.

ஃ

ஐசுவரியத்திலும் பெருமைப்பாட்டிலும் திடீர் என்று உயர்வதும் தாழ்வதும் சமமாகவே பொல்லாதவைகளாம். ஐசுவரியமும் பெருமையும் மனிதனைச் சகலவித அக்கிரமத்திலும் மூழ்த்துகின்றன. தாழ்வானது எப்போதும் ஆசையை யறுத்துவிடுகின்றது. வருஷத்தில் மூன்றுமாதம் லண்டனில் இருக்கவும். மற்ற காலம் நாட்டிலிருக்கவுமே எனக்குஇஷ்டமாயிருக்கின்றது இது ஒரு இடத்தின் சுகத்தையாகிலும் நிலையாயிருந்து அனுபவிக்கமாட்டாமல் தற்காலம் செய்கின்றபடி இடம்விட்டு இடமாய் ஓயாமல் அலைவதைப் பார்க்கிலும் என் புத்திக்கு அதிக நியாயமான வகையாயு மிருக்கின்றது. ஆனால், நான் எழுதுவது இன்னாருக்கென்பதை மறந்துவிட்டேன்.

ஃ

இங்கே என் காரியங்களை முடித்துக்கொள்ள மூன்று வாரம் செல்லும். அவைகளை முடித்தவுடனே

காங்கிரஸ் தேர்தலுக்கு நிற்பதனாலேயே சிலரைப் பரோபகாரிகளென்று சொல்லிவிட முடியாதபடி அவர்களைக் குறித்த அனுபவங்கள் விபரீதமாயுள்ளன. வெளிக் கௌரவம் கிடைக்குமிடத்தில் எவ்வளவோ உழைத்துவிட்டு, எந்தக் கௌரவமும் ஏற்படாதென்று தெரிகிற இடத்தில், அறுந்த விரலுக்குச் சுண்ணாம்பு தரவும் மனமற்றுப்போனவர்களும் இல்லாமலில்லை.

வருவேன். அப்போது நமது ஆயுளுடன் பூர்த்தியாகவேண்டிய விவாகம் நிறைவேறுமென்று நம்பியிருக்கிறேன். உனக்குப் பரிய உடன்படிக்கை எழுதும்படி என் குமாஸ்தாவுடன் சொல்லியிருக்கிறேன். அதை உனக்கு உரித்தானவர்களுக்கு முன்பாகக் கையெழுத்திடும்படி என்னுடன் கொண்டுவருவேன். உன் தமயனும் அவர் மனைவியும் சுகமாயிருக்கிறார்களென்று நம்பியிருக்கிறேன். விசேஷத்தியாக எழுதிய அவர் காகிதம் எனக்கு வந்து சேர்ந்ததால், அதில் எழுதியிருக்கும் சங்கதிகளுக்காக அவருக்கு மிக்க நன்றியறிந்திருக்கிறேன்.

இங்ஙனம்

என் பிரியமுள்ளவளே, உனக்கு உண்மையும் அன்புமுள்ளவனுகிய

ஜான் வில்லியம்.

(முற்றிற்று.)

ரயிலுக்குச் செல்வோர் தமது பெட்டி மூட்டைகளைத் தம்முடன் வருவோர் கவனித்துக்கொள்வரென்று எண்ணிவிடக்கூடாது. மற்றவர் கவனிப்பினுங்கூடத் தமது கவனமும் முக்கியமாக இருக்கவேண்டும். ரயில் வண்டியிலிருந்து இறக்கிய சாமான்களில் தமது பெட்டி மூட்டைகளும் தவறுமல் சரியாயிருக்கிறதாவென்று தமது கண்களாலேயே சரிவரக் கவனித்துப் பார்த்துவிடவேண்டும். இதில் தவறினுல் பெட்டி மூட்டைகள் ரயில் வண்டியிலேயே கிடந்து ரயிலும் சென்றுவிடலாம். பிறகு ஏங்கி என் செய்ய?

எவர் உயர்ந்தவர்? எவர் தாழ்ந்தவர்?

ஆண் பெண் இருபாலார்க்குமுள்ள வித்தியாஸமென்ன? மேன்மை தாழ்மை என்ன? நுண்ணறிவுடன் யோசிப்பின், புருஷர்கள் பெண்களுக்கு உற்றதுணைவர்களாகவும், சிநேகிதர்களாகவும் ஏற்பாடுவார்களேயன்றி வேறில்லை. ஆனுல், ஸ்திரீகள் இயற்கையிலேயே சரீர பலம் குறைந்தவர்களாயிருப்பதால், பெண்களைப் புருஷரே காக்கவேண்டியவராயிருக்கிறுர்கள். ஆனுலோ, அப்படிக் காக்கவேண்டியது புருஷருடைய கடமையாயும் தருமமாயும் ஏற்படுகின்றதன்றி, அதே காரணத்தை வைத்துக்கொண்டு நினைத்தபடியெல்லாம் பெண்களை நிர்ப்பந்தம் செய்யலாமென்று எண்ணி விடுவது தெய்வ சம்மதமாகாது. பெண்களுக்குப் புருஷனில்லாமல் எவ்வளவு அசௌகரியம் ஏற்படக் கூடுமோ, அவ்வளவு அசௌகரியம் புருஷர்களுக்கும் பெண்களில்லாமற் போனுல் ஏற்படக் கூடியதேதான். இதில் எவர் உயர்ந்தவர்? எவர் தாழ்ந்தவர்?

தானே வலியத் தெரிவித்தல் ஏன்?

தன் க்ஷேமம் கேளாதவர்க்குத் தன் வீட்டின் செய்திகளை யெல்லாம் வலிய எழுதித் தெரிவித்துக் கொள்வானேன்? அக்கடிதத்தைப் பெறுகிறவர்கள் அச்செய்திகளை அலக்ஷியமாய் நினைத்து, இந்தக் குப்பைகளை யெல்லாம் யார் எழுதச் சொன்னது? என்று சலித்துக்கொள்கிறார்கள். அத்தகையோரிடம் அவர் பல்லிளித்தால், அதற்குப்பதிலாகத் தானும் தன் பற்களைத் திறந்து காட்டிவிட்டு அத்துடன் மூடித்துவிடுதலே கௌரவமாகும். சமீப சகோதரனாயினும், அவன் தனக்கு ஒரு குழந்தை பிறந்ததை எழுதாதபோது, மற்றவனும் தனது விசேஷங்களை அறிவியாதிருந்துவிடுகிறான். சொந்த உறவு பாராட்டாதவரிடம் நெருங்கி நெருங்கிச் சேர்வதில் கேவலமே வரும். அவன் பணக்காரனாயின் அவன் மட்டிலிருக்கட்டும். அதற்காகத் தன்மதிப்பை விட்டு அவனைத் தாங்கி உட்பட வேண்டுமென்பது அவசியமில்லை. தன் வீட்டு சுபாசுபங்கட்கு வராமல் ஒப்பாரித்தனமாக ஒரு கார்டு எழுதிவிடுவோருக்குத் தானும் அந்தப்படியே எழுதிவிட்டு ஒதுங்குதலே சரி. தான் ஏழை யென்ற அளவிலேயே தனது வீரமும் மானமும் போய்விடாது. தன் குடிசை வீட்டுக்குத் தானே ராஜா. கூழ் குடிப்பினும் தலை நிமிர்ந்து நிற்கவேண்டும். உழைத்துப் புசித்து மீசையை முறுக்க வேண்டும். அழைக்காத விருந்தைக் காலின்கீழ் போட்டு மிதித்துத் தள்ளவேண்டும். அனுதாபத்துடன் தன் செய்திகளைக் கேளாத நடிப்புக்காரர்களிடம் பாதி செய்தி பேசியதுடன் நிறுத்திவிட வேண்டும். எவரெவர் அன்பற்றவர்களென்று தெரிந்து வைப்பது மேல். ஆனால், எவரிடமும் துவேஷம் வேண்டாம்.

வாலிபம்.

(மிஸ்டர் மாக்லிலாண்ட்)

மனித வாழ்க்கையில் ஸ்திரீ புருஷ உணர்ச்சி எல்லா உணர்ச்சிகளிலும் மிகுந்ததாகக் காணப்படுகின்றது; சாதாரணமாக ஜனங்கள் இவ்வுணர்ச்சிக்கு அடிமைகளாகிவிடுகின்றனர். இதை ஜயிக்க சிலர் முயலுகின்றனர். இவ்வுணர்ச்சி நமது பாஷையில் பல வார்த்தைகள் தோன்றக் காரணமா யிருந்திருக்கிறது. பௌருஷம், பெண்மை, காதல், கலியாணம், கிருக கிருத்தியம், தந்தை, தாய் குடும்ப வாழ்க்கை, அன்பு. இதே உணர்ச்சி நம்மை ஜயித்துவிடுமானால், கெட்ட வழக்கங்கள், ஸ்திரீரோகங்கள், விபசாரம், விபசார விடுதிகள் முதலிய வார்த்தைகளுக்கு இடமேற்படும்.

ஸ்திரீ புருஷ உறவைப் பற்றிய விஷயங்களை அனைவரும் தெரிந்து கொள்ளல் வேண்டும். இத்தகைய ஞானமில்லாததால் பலருடைய வாழ்க்கைகள் சிதறிப்போய்க் கிடக்கின்றன. வாலிபர்களுக்கு நாமாக இவ்விஷயங்களைப் போதிக்கத் தவறினால் விரும்பத்தகாத மார்க்கங்களில் அவர்கள் விஷயங்களைத் தெரிந்து கொள்ள ஆரம்பிக்கின்றனர். பால்யத்தில் துரப்பியாசங்க ளேற்பட்டால், அவை உடல் நலத்தையும், யோக்கியதையையும் பாதித்துவிடும். தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டில். சிறந்த முறைகளில் இவ்விஷயங்களைப் போதிப்பதால் வாலிபர்களது உடல் நலனும் காப்பாற்றப்படும்.

சிறுவர்கட்கு வாழ்க்கை விஷயங்களைப் போதிப்பதற்கு மத சம்பந்தமான கதை சரித்திரங்களில் ருசி பிறக்கச் செய்து, அவ்வழியில் வாழ்க்கையின் வகைகளை விவரித்து ஆஸ்திக புத்தி வளரச் செய்தால் தம்மில் தாமே நலம்பயப்பவைகளை நுட்பமாய் உணர்ந்து நல்லோராதல் கூடும்.



பெரியாரின் மொழிகள்



(லாங்பெலோவின் பொன் மொழிகள்.)

1. The present is an age of doubt and disbelief and darkness; out of which shall rise a bright and clear Hereafter.

சந்தேகமும், நம்பாமையும், இருளும் சூழ்ந்தது தற்காலம். இதனிடமிருந்து சோதியும். தெளிவும் பொருந்தி ஒரு பிற்காலம் உண்டாகும்.

2. I saw the branches of the trees; Bend down thy touch to meet; The clover-blossoms in the grass; Rise up to kiss thy feet.

மரங்களிலிருக்கும் கிளைகள் உன் ஸ்பரிசத்தை ஏற்றுக்கொள்வதற்காக வளைவதையும், புற்களில் புஷ்பிக்கும் பூக்கள் உன்னுடைய திருவடிகளை முத்தமிடுவதற்கு நிமிர்வதையும் நான் பார்த்தேன்.

3. Friends my soul with joy remembers! How like quivering flames they start, When I fan the living embers On the hearth-stone of my heart!

என் ஹிருதயம் சிநேகர்களை ஸந்தோஷத்தோடு ஞாபகப்படுத்துகிறது. என்னுடைய ஹிருதயமாகி. அடுப்பின்மேலுள்ள தணலை விசிறும் போது அச்சிநேகமானது) சுவாலையாகக் கிளம்புகிறது.

4 Swifter than arrows, The life of the truth.

உண்மையின் உயிர், அம்புகளைவிட வேகமுடையது.

5. Each word of kindness, Come whence it may, is welcome to the poor.

அன்புள்ள ஒவ்வொரு வார்த்தையும், யாரிடமிருந்து வந்தாலும், ஏழைகளால் வரவேற்கப்படுகிறது.

6. No endeavour is in vain: Its reward is in the doing, And the rapture of pursuing, Is the prize, the vanquished gain.

எந்த முயற்சியும் வீண் போகாது. செய்வதிலேயே அதன் பயன் அடங்கியுள்ளது. அதைத் தேடிச் செல்வதிலான பரவசமே (தோல்வியடைந்தோர்களுக்கும்) அதன் லாபமாகும்.

7. Wondrous truths, and manifold as wondrous, God hath

சொத்து எவனுக்கு உண்டோ, அவன் சிறியவனாயினும் பெரியவனே. சொத்தில்லாதவன் அண்ணனாயின், சொத்துள்ள தம்பிக்கே உலக மதிப்பு. மதிப்பு என்பது வயதைப் பொருத்ததாயில்லாமல், சொத்தையும் பதவிகளையும் பொருத்துள்ளது.

written in those stars above; But not less in the bright flowerets under us Stands the revelation of His love.

அற்புதமான உண்மைகளையும், பலவிதமான புதுமைகளையும், மேலே இருக்கும் நட்சத்திரங்களில் கடவுள் எழுதியிருக்கிறார். ஆனல், நமக்கு அடியிலுள்ள காந்தியான பூக்களிலும் கடவுளினுடைய அன்பின் பிரவாகம் இல்லாமலில்லை.

8. The moments glided on, and the footsteps of Time were not heard amid the sound of music and voices.

சங்கீதங்களின் நாதத்தினிடையில் நிமிடங்களில் ஊர்ந்து செல்வதும், காலத்தின் ஓட்டமும் கேட்பதில்லை

9. Enjoy thy youth, it will not stay, Enjoy the fr grance of thy prime, For O! it is not always May.

உன்னுடைய இளமையை நன்ருக அனுபவி. அது தங்கியிருக்காது. உன்னுடைய வாலிபத்தின் பரிமளத்தை அனுபவி. எனெனில், எப்போதும் இளமை நில்லாது.

10. Give what you have, To someone it may be bettor than you dare to think.

உன்னிடத்திலிருப்பதைக் கொடு. (அதனல்,) நீ நினைக்க முடியாத மகத்தான நன்மையைச் சிலருக்கு அது பயக்கும்.

P. G. குலசேகரம்,

ஆசிரியர் "எதிரொலி" ராயபுரம்.

தான் நிரபராதியாயிருந்தும் தன்னைவிட்டு ஒருவர் விலகிக்கொள்கிறபோது, மறுபடியும் வலியச்சென்று உறவாடிச் சேர்ந்து ஒட்டிக்கொள்ளவே முயலவேண்டும். அவ்விதம் சேர்ந்து ஒன்றுகிவிட்ட பிறகு, திடீரென்று தான் விலகிப் பிரிந்து ஒதுங்கிக்கொண்டு, தானே விலகியதாய் மீசை முறுக்க வேண்டும். முன்பு விலக நினைத்தவன் எவ்வளவு நேசிக்கவரினும், அதற்கு இடம் தாராமல் தூர இருந்துவிட வேண்டும். இது பதிலுக்குப் பதில் சூடு போட்டதுபோலாகும்.

ஒரு பெண்ணுக்கு முன்பே சிறு வயதில் விவாகம் நடந்திருந்தது. 14-வயதானதும் கணவன் வீட்டிற்கு அனுப்பினர். பெண் போக மறுத்து அழுதாள். அழுதாலும் பிறகு செல்லவேண்டியதாயிற்று பெண் வருவதற்கு மறுத்ததைக் கேட்டதும் கணவனுக்குக் கோபமுண்டதாம். அதனல் அவன் அப்பெண்ணை முரட்டுத்தனமாக நடத்தினனும். அச்சமயத்தில் பெண் கணவனைக் காலால் உதைத்தாளாம். உதை பட்டதினல் அவமானம் எற்பட்டுவிட்டதாகக் கருதிக் கணவன் தன் மனைவியைக் கத்தியால் பல இடங்களில் குத்தவே அதனுற் பெண் மடிந்தாள். கணவன்மீது கொலைக் குற்றம் எற்பட்டுத் தூக்கு சிக்ஷையில் முடிந்தான். ஒரு விவாகம் வெகு சீக்கிரத்தில் முடிவுக்கு வந்து விட்டது!

"குடி வருந்தக்கோன் வருந்தும்"——"குடிதாழக் கோன் தாழும்" என்பது பழமொழி.

நிமிஷத்திற்கு ஒரு குணம்.

கடைக்காரன் தரவேண்டிய சில்லரையோடு கூட ஒரு ரூபாய் அதிகமாகத் தவறிக் கொடுத்து விட்டால் திருப்பி அந்த ரூபாயைக் கொடுத்து விடக் கூடியவர்கள் அபூர்வமே. சில சமயத்தில் நற்குணம முன்னே நின்று திருப்பித் தருகிறவர்களுமுண்டு. ஆனால், அவர்களே மற்றொரு சமயத்தில் தங்களின் துர்க்குணத்தை முன்னே நிறுத்தி —கைக்கு வந்ததை இழப்பதா?;—என்று சுயநலமாய் அந்த ரூபாயைத் தாங்களே எடுத்துக் கொள்வது முண்டு. ஒரு நிமிஷத்திலுள்ள நல்ல குணம் மற்றொரு நிமிஷத்திலில்லை. இந்த நிமிஷத்தில் ஒருவருக்கு ஒன்றைச் செய்யத் தோன்றுகிற மனம் மறு நிமிஷத்தில் பேதப்பட்டு விடுகிறது. ஒரு மனுஷ்யன் எந்தக் காலத்துக்குமே யோக்கியமாகவே இருப்பானென்று சொல்வதற்கில்லை. பணம் தாராளமாக நடமாட்டமிருக்கையில் நாணயமாக நடந்து கொண்டவன், செல்வம் வற்றியபோது மோசம், ஏமாற்றுதல் முதலியவைகளைக் கற்றுக் கொள்கிறான். விவாகத்துக்கு முன்பு ஒரு போக்கு. விவாகமான பிறகு வேறொரு புது தினுசு. கடன் வாங்குகையில் சீக்கிரம் தந்து விடவேண்டுமென்று தீர்மானிக்கிறவன், கடன் வாங்கிய பிறகோ தன் கையில் பணம் வந்தும் கடன் தீர்க்காமல் தாமதமாயிருக்கிறான். கைக்கு வந்த பணத்தை வேறொன்றுக்குச் செலவிட்டு விடுகிறான். வேலை கிடைப்பதற்கு முன்பு சாதுவாய்க் கெஞ்சியபடி யிருந்தவன், ஒரு தொழிலில் அமர்ந்ததும் வேறு மாதிரியாய்க் கர்வியாகிறான். ஒருவன் எப்போதுமே நல்லவனுமல்ல, எப்போதுமே கெட்டவனுமல்ல.

பூரணம் ஆபத்து.

பூரணம் அடைந்தாரென்றால் இறந்தார் என்பது பொருள். அதாவது நாசம் என்பது கருத்து. ஆகவே, பூரணப் படாமல் ஒரு குறைவு ஒட்டியிருப்பதே நன்மையாகுமாம். 100—என்று பூரணப்படாமல் 70, 80, 90—என்று இருக்கவேண்டுமாம். ஒரு வீட்டைக் கட்டுவதில் ஒரு பக்கம் கொஞ்சம் ஓட்டையாக விட்டு வைக்க வேண்டுமாம். வீட்டைப் பார்க்க வருவோர் அந்த ஓட்டையின்மீது கண் செலுத்தி அதை ஒரு குறைவாகக் கூறிப் போய் விடுவார்களாம். அப்பொழுது வீட்டின் மீது கண் திருஷ்டி விழமாட்டாதாம். இதற்காகவே அவலக்ஷணப் பொம்மைகளை புது வீட்டின்மேல் வைக்கிறது வழக்கமாம். வருவோர் பொம்மையைப் பார்த்தபடி போய் விடுவதில் வீட்டின் மேல் கண் திருஷ்டி விழாமற் போகுமாம். வீடு முழுதுமே நன்றாகக் கட்டி விட்டாலோ, அல்லது வேறெந்தக் காரியத்தையோ பூரண அழகாகச் செய்து விட்டாலோ கண்ணெச்சில் பட்டுக் கெட்டழியுமாம். ஆதலின், உலக வாழ்விலே ஒரு குறையொட்டியிருந்தால் தான் க்ஷேமமாம். பிள்ளையுள்ளவனுக்கு தரித்திரம் சொந்தமாயிருக்க, அவனுக்குச் சொத்து சேர்ந்தால் பிள்ளைகளுக்கு ஆபத்து உண்டாகுமாம். பிள்ளை யில்லாதபோது வேண்டிய சொத்துகள் இருக்குமாம். குழந்தை பிறந்ததும் சொத்துகள் அழியத் தொடங்குமாம். ஒன்றிருந்தால் மற்றொன்றில்லாத குறையிலேயே உலக வாழ்வாம்.

விவசாய விநவிடை.

1. வினா:—நான் குளிர்ச்சிக்காக வேம்பு வைத்திருக்கிறேன். அது மழைபெய்த காலங்களில் தழைக்கிறது; மற்றக் காலங்களில் இருந்தபடியே யிருக்கிறது. கன்று பிடுங்கிவைத்து தரித்து $2\frac{1}{2}$ வருஷமாகின்றது. வேம்புக்கேற்றபடி கோடை காலத்தில் தழைக்கிறதில்லை. ஒழுங்காய்த் தழைக்காததால் உத்தேசித்தபடி நிழல் தர மார்க்கமற்றிருக்கிறது அதற்குப் பரிகாரம் என்ன?

விடை:—வேம்பை எப்பேர்ப்பட்ட நிலத்தில் வைத்துண்டாக்கி யிருக்கிற கிறதென்றும், அதற்கு ஜலம் ஏதாவது விட்டு வரப்படுகிறதாவென்றும் இதைப்போலொத்த விஷயங்களைத் தெரிவிக்கலேண்டும். எந்த மரமானுலும். அதை நட்டபின் அதன் வேர் பூமியின்கீழ் மண்ணில் ஈரம் வேருக்கு உரைத்து ஜீவிக்கும்வரை அதைச் சரியானபடி ஜலம் விட்டுப் பரிபாலித்தால்தான் அது உண்டாகும். அப்படிக்கில்லாமல் செடியைப் பலிக்கவில்லையென்றும், அதற்கு சிகிச்சை என்னவென்றும் கேட்பது சரியாகாது.

ஃ

2. வினா:—எனது தோட்டத்திலிருக்கும் வாழை மரங்களில் 2-செவ்வாழை மரம் இருக்கின்றது. அது சுமார் 3-வருஷகாலமாக இருக்கிறது. ஆயினும், நாளது வரையில் குலை தள்ளினது கிடையாது. முதல் மரம் சுமார் ஒரு வருஷம் வளர்ந்த பிறகு அந்த மரம் வரவர க்ஷீணதசை அடைய, அதன்கீழ் கன்று அதற்குப் பதில் ஓங்கி வளர்கின்றது. இவ்வாறு மாறி மாறி வளர்கிறதே தவிர, காய் காய்ப்பதே கிடையாது. இதற்கு என்ன உபாயம் செய்வது?

விடை:—வாழை மரங்கள் காய்க்காததற்கு அநேக காரணங்கள் உண்டு. சில வேளைகளில் ஜாஸ்தி நிழல் அடைந்திருப்பதனுல் காய்ப்பு தாமதமாகலாம். சில சமயங்களில் தாய் வாழை குலை போடாத வாழை மரங்களுக்குப் பக்கத்தில் உண்டாயிருக்கிற கன்றுகளை எடுத்துப் பயிராக்கினுல் இம்மாதிரி சம்பவிக்கும். வாழைத் தார் போட்ட மரங்களின் பக்கத்திலிருக்கும் கன்றை வைத்து உண்டாக்கிப் பலனடைவதுதான் உபாயம். சில சமயங்களில் வாழைமரம் பூக்கும் சமயத்திற்குமுன் ஒரு நோய் நொடியால் பூ கருகிப்போய் காய்க்க ஏதுவில்லாமற் போகும். அப்போதும் இப்படிச் சம்பவிக்கும்.

ஃ

3. வினா:—தென்னையில் 'ஆயிரம் காய்ச்சி' என்று இருப்பதாயும், அதில் ஒன்றுக்கு 1000-காய்கள் வீதம் காய்ப்பதாயும் சொல்லக் கேள்வி. அது உண்மையா?

ஒருவனைக் கெடுத்துவாழக் கருதும் வஞ்சகர்களின் காரியங்கள் அப்போது தடையின்றி நிறைவேறுவதுபோலவே தோற்றினும், அதிசீக்கிரத்தில் அவர்களுடைய மனோரதங்கள் யாவும் சண்டமாருதத்தால் சிதறவடிக்கப்பட்ட மேகங்கள்போல் அழிந்து நிலைகுலைந்து விடுகின்றன. தெய்வம் வஞ்சிக்கப்பட்டுப் போனவர்களை ஆதரித்துக் கைதூக்கிவிடுவதும் பல இடத்திலும் கண்ட உண்மை.

விடை:—தென்னையில் 'ஆயிரம் குச்சு' என்று இருக்கிறது. அது சாதாரணமாய் அலங்காரச் செடிகளாகிய பனைத்தினுசு செடிகளில் ஒன்றே தவிர, வேறு பயனில்லை.

ஃ

4. வினா:—மாடுகள் மூத்திரம் குடித்தால் அதை எவ்விதமாக நீக்கலாம்? அதனால் கெடுதலுண்டா, இல்லையா?

விடை:—மாடுகள் மூத்திரம் குடிப்பது மாட்டுத்தீவனத்தில் உப்பு சத்து குறைந்து கொடுப்பதினால்தான். மாடுகளுக்குப் பருத்திக்கொட்டை, புண்ணாக்கு முதலிய தினுசுகள் கொடுக்கும்போதும், சஞ்சி முதலிய தண்ணீர் காட்டும்போதும் மாடு ஒன்றுக்கு தினம் 1-க்கு 3-ரூபா எடை வரை 'சாப்பிடும் உப்பு' கொடுத்துக்கொண்டு வந்தால் இவ்விதம் மூத்திரம் குடிக்கும் வழக்கம் வந்தே இராது. மூத்திரம் குடிக்கும் மாடுகள் இளைத்துக் கொண்டேவரும். கழுத்தில் மூக்காணியைப்போல் ஓர்வித உபாயம் மூங்கிலில் செய்து மாட்டுக் கழுத்தில் போட்டுவைத்திருந்தால், அம்மாடு மூத்திரத்தைக் குடிக்கக் கழுத்தைத் திருப்பும்போது அம்முனைகள் கழுத்தில் குத்தி, அவ்வுபத்திரவத்தினால் மாடு மூத்திரத்தைக் குடிக்கும் பழக்கத்தை விட்டுவிடும்.

(தொடரும்)

J. R. R.

திக்கித் திக்கிப் பேசும் வாயுள்ள ஒருவர் தாம் சென்ற ஊரில் தமது நண்பரைத் தேடிச்சென்று ஆவலுடன் பேசினார். அந்த நண்பரோ "நீர் பேசுவதை யறிவதற்குள் தலைவலி எடுத்துக்கொள்கிறது" என்று தாழ்ச்சியாக நவின்றார். அது திக்குவாயருக்கு வேதனையாகி, ஆவலுடன் வந்த இடத்தில் பழித்துப் பேசுவதாவென்று நொந்து பிறகு அந்த நண்பரிடம் மறுபடியும் செல்லவே யில்லை. தன்னால் நண்பருக்குத் தலைவலி உண்டாகாதிருக்கட்டுமென்றார்.

"அனுபவம்" என்ற பதத்திற்கு எங்கும் பெரிய மதிப்புண்டு. அனுபவம் என்பது தானே பட்டுத் தெளியும் புது அறிவு. ஒரு வியாபாரியின் அனுபவம் பலநாள் பழகிவந்ததாம். அவ்விதமே உத்தியோகஸ்தரின் அனுபவமும் உத்தியோகம் செய்ததிலிருந்தும் தெளிந்தது. சமையலின் அனுபவம் சமைத்துப் பழகித் தெரிந்தது. ஒவ்வொரு தொழிலாளிக்கும் ஒவ்வொரு அனுபவமுண்டு. அனுபவங்களையே ஞானமுத்துக்கள் என்று பாராட்டுவர். அனுபவஞான நூல், அநுபவ நாவல், அனுபவக் கதை, அநுபவங்களையே கூறும் பத்திரிகை ஆகிய இவைகள் பரம பிரயோஜனத்தை விளைவிப்பவைகளாகும்.

"பணக்காரன்" என்று சிலரைக் கூறுவதெல்லாம் வெறும் ஹம்பக் (நடிப்பே). அவனிடம் உள்ள ஊழல்—கெடுதி—ரகசியக் கடன்கள்—ஏமாற்றல்—பித்தலாட்டங்கள்—மோசம்—பொய்கள் அளவிடமுடியாததாகும்.

R. M. S. M. கதிரேசன்.

பழம் உண்ணல்.



பண்டைக் காலத்தில் ரிஷிகள், முனிவர்கள் தத்தம் ஆசிரமங்களில் வசித்துக் கொண்டு காய், கிழங்கு, பழம் முதலியவற்றையே புசித்து அநேக வருஷங்கள் வரை நோயற்ற வாழ்வினராய் விளங்கினர். வியாதிகளைத் தடுப்பதற்குரிய குணங்கள் பழங்களுக்கு உண்டு. பழங்கள் தலைவலி, அஜீர்ணம் முதலிய ரோகங்களுக்கு உத்தம ஔஷதம்போல் உதவும். உலகில் இருக்கும் சகல வித உணவுப் பொருள்களைக் காட்டிலும், பழங்களே உன்னதமான ஆகாரங்களாகும். பழங்களைக் கடித்து உண்ண வேண்டியது. மற்றபடி நாம் தயாரித்து உண்ணும் உணவுகளைப் பெரும்பாலும் விழுங்கி விடுகிறோம். கடித்துச் சாப்பிடாததால் அநேக வியாதிகள் உண்டாகின்றன. சரீரத்திலுள்ள விஷ வஸ்துக்களை வெளியில் தள்ளுதற்குப் பழங்களுக்குச் சக்தி யுண்டு. பழங்களையே புசித்தால் ஜலம் பருகவேண்டிய அவசியமிராது.

ஃ

இயற்கைக்குரிய வாழ்வு வாழ்வதுதான் ஆயுள் விருத்திக்குக் காரணமாகும். பசு, பக்ஷி, மிருகம் முதலியவை யெல்லாம் இயற்கை வாழ்வு வாழ்வதின் காரணத்தால் தான். மனிதனைப் பீடிக்கும் அநேக நோய்கள் அவைகளைப் பாதிக்கவில்லை. பழங்களைப் புசிப்பது மனிதனின் இயற்கைக்குரியது. ஏனெனில், பழங்கள் எப்படி நமக்குக் கிடைக்கின்றனவோ அப்படியே அவைகளைப் புசிக்கலாம். இதர பதார்த்தங்களை அப்படிப் புசிக்க முடியாது. ஏனைய உணவுப் பொருள்களை இதர பதார்த்தங்களோடு சேர்த்துப் பக்குவப்படுத்தியே உண்ணவேண்டி யிருக்கிறது. இப்படிச் செய்வதால் பதார்த்தங்களுடைய இயற்கைக் குணங்களும் அதன் ருசி நயங்களும் மாறுதல் அடைகின்றன. அதனால் பலவித நோய்களும பலக்குறைவும் உண்டாவதோடுகூட, குணங்களும் பாதிக்கப்படுகின்றன. பழங்களைப் புசிப்பது சரீரத்திற்கு ஆரோக்கியமும், பலமும், புஷ்டியையும் தரக்கூடியவை யென்று வைத்திய பண்டிதர்கள் சாற்றுகின்றனர். ஸம்ஸ்கிருத பாஷையில் "பலாஹாரம்" என்றால் "பழங்கள் உண்ணல்" என்பது பொருள். தமிழில் 'பலவித ஆகாரம்' என்று விபரீத அர்த்தமாய்க் கொள்ளக் கூடாது. நோன்பு விரதங்களின்போது ஆகாரம் இல்லாதிருப்பதே நலம். அதுதான் முன்னோரால் விதிக்கப்பட்ட கிரமம். அதற்கு சக்தியற்றவர்கள் ஜலபானம் மட்டும் செய்யலாம். இதுவும் முடியாமற்போனால் பால் அருந்தலாம். அதுவும் முடியாமற்போனால் பழங்களைமட்டும் புசிக்கலாம். அவ்வளவே

ஆண்களுக்குமட்டும் சொத்து சேர்த்துவைத்து, பெண்களைக் கொண்ட கணவனின் சோதனையில் மூழ்கவைக்கும் தற்காலக் கொள்கை சரியா?

யன்றி தோசை, இட்டிலி, காபி முதலியவற்ருல் முழு வயிற்றையும் நிரப்பிக்கொள்வது விரதமாகாது.

ஃ

கலப்பு போஜனம் சாப்பிடுகிறவர்கள், முதன்முதல் பழங்களைச் சாப்பிடவேண்டும். போஜனத்தில் சமையல் செய்யப்பட்ட பதார்த்தங்களை உண்ணுவதற்கு முன்பு, சமையல் செய்யப்படாத உணவுகளைச் சாப்பிடவேண்டும். பழங்களை மற்ற உணவுகளுடன் கலந்து சாப்பிடாமல் இருப்பதே நல்ல பயனை அளிக்கக்கூடியது. பழங்களை சாப்பிட்ட கொஞ்சநேரம் கழிந்த பின்பு, தேவையானல் இதர ஆகாரங்களைச் சாப்பிட்டுக் கொள்ளலாம்.

ஃ

பித்த சம்பந்தமான நோய்கள் பழம் சாப்பிடுகிறவர்களை அணுகாது; அந்நோய்கள் இருந்தாலும், அவைகள் தீரும். அங்கரா, ஆரஞ்சு பழரசம் ஜுரத்திற்கு நல்லது. அடிக்கடி சரீரத்தில் உண்டாகும் விஷங்களை, மூத்திரம், மலத்துடன் வெளியில் விலக்கப் பழங்களுக்கு ஒரு ஆச்சரியமான சக்தி இருக்கிறது. மூத்திர சம்பந்தமான ரோகங்கள் பழங்களுடைய ரசத்தால் நிவர்த்தியாகும். 'டைபாயிட் (Typhoid) ஜுரத்திற்கு மூலகாரணமான, வியாதிக் கிருமிகள் (Bacilli) ஆகாரக்குழாய்த் துவாரமாய்ச் சென்று இரத்தத்தில் பரமாணுக்களின்மீது ஆக்கிரமித்துச் சரீரத்தில் கடுமையான ஒரு விஷ வஸ்துவை உண்டாக்கிவிடுகிறது. அக்கிருமிகள் விருத்தியாகாமல் தடுத்து, அவைகளையும் நசிக்கும்படி செய்யும் சக்தி பழங்களுக்குண்டு. 'டைபாயிட்' ஜுரம் ஆரம்பகாலத்தில், தலைவலி தோன்றினவுடன், பழங்களைச் சாப்பிட்டால் நோய் அதிகரிக்காது; அநேக சௌகரியங்களும் ஏற்படும். மேலும், பழங்கள் சரீரத்திற்கு உண்டாகும் சிரமத்தைக் குறைக்கும். பழரசம் பெரும்பாலும் ரத்தத்தில் கலந்துகொள்ளுகிறது; சமையல் செய்து பக்குவப்படுத்திய போஜனம் அதிகமாய் சாரமில்லாமல் மலத்துடன் சேர்ந்துவிடுகிறது. உலர்ந்த பழங்கள், பச்சைப் பழங்களைப்போல் சிறந்ததாகாது. அவைகளை உண்ணுவதற்கு முன்பு கொஞ்சநேரம் ஜலத்தில் ஊற வைத்துச் சாப்பிடவேண்டும்.

எஸ். வி. ஸ்ரீநிவாஸன்,
பீ. ஏ., பீ. எல்.

சிலர் பிறரது பொடி டப்பியை அவர்களைக் கேளாமலே எடுத்து வைத்துக்கொண்டு பொடியை உறிஞ்சுவர். டப்பிக்கு உடையவர்கள் அதைக் காணுது எவ்வளவு தேடிக் கஷ்டப்படினும், அதை எடுத்தோர் மவுனமாக இருந்து விடுவர். பிறகு டப்பியிலுள்ள பொடி முற்றும் ஆனதும் டப்பியை முன்னிருந்த இடத்தில் மெதுவாய் வைத்து விட்டு எதும் அறியாதவராக நடிப்பர்.

விலையின்றி இலவசத்தில் வருமேல் அளவின்றி உண்பது எவர்க்கும் வழக்கம் அன்ருே? தன் வீட்டில் ஒரு துளி நெய் ஊற்றிக்கொண்டாலும் காசு செலவாகி விடுமென்று எண்ணுவோர் பிறர் வீட்டில் எவ்வளவு நெய் ஊற்றினுலும் போதுமென்று சொல்லார். கிடைத்தமட்டும் லாபமென்று புசிப்பார்.

விவேகம்
விநோதம்
விசித்திரம்
விகடம்

விகடப்பிரதாபன்

REGISTERED TRADE MARK

அநுபவம்
அற்புதம்
ஆச்சரியம்
ஆநந்தம்

யாருக்கு நல்ல பேரு? யாரப்பா ராஜா?



நம்ம விகட தாத்தாவுக்கு இது தெரியாதா? உண்மையாக உழைத்துப் பாடுபட்டவனுக்குத் தான் நல்ல பேரு; ராஜ்ய லக்ஷ்மியிருந்து அரசாளுகிறவர்கள்தான் ராஜா என்று என் நஞ்சான் குஞ்சான்கள் நினைக்கலாம்! சங்கதி அப்படியல்ல. யார் உழைக்காமலே, உடம்பு நோகாமலே, வெளிக்குத் தங்களாலேயே எல்லா காரியமும் ஆவதுபோலத் தளுக்கு காண்பித்துக்கொண்டு, எந்தெந்த சமயத்தில் எங்கெங்கிருந்து தங்களின் தலையைக் காட்டவேண்டுமோ அங்கெல்லாம் நின்று தலையாட்டிவிட்டுத் தாங்கள் எந்த வேலையுமே செய்யாமலே, பேருக்கு மட்டில் அதைச் செய்தாயா, இதைச் செய்தாயாவென்று மற்றவர்களை வீண் அரட்டல் அடித்து அதிகாரம் செய்தபடி, தங்களின் உடம்பு நோகாமல் பார்த்துக்கொண்டு வீட்டுக்காரனுக்கு வெகு விசுவாசமுள்ளவர்கள்போல் நடிக்கிறார்களே சிலர்; அவர்களுக்குத் தானப்பா நல்லபேரு! அவர்களால் தான் எல்லா காரியங்களும் ஆனதாகவும், ரொம்ப ரொம்ப அக்கரைப்பட்ட மனுஷர்கள் அவர்களேயென்றும் வீட்டின் எஜமானர்கள் மெச்சிக்கொள்வதும் அவர்களையே தான்! இதில் உண்மையாக ஓடி உழைத்து அலைந்து காரியங்களை முடித்துக் கனத்த பாடு பட்டவனுக்கோ மூதேவிப் பட்டமும் சோம்பேரிப் பட்டமுமேதான் கதி! வருகிற திட்டுகளெல்லாம் உழைத்தவனின் தலையில் தான்! அவன் அரை குறையாக வேலை செய்தானென்றும், எதையும் கவனித்துச் சிரத்தையாய்ச் செய்வதில்லையென்றும் திட்டுவதும் அவனையேதான்! நான் கூப்பிட்ட நேரத்துக்கு இல்லாமல் எங்கே போனாய், உன்னைத் தேடிப் பிடிப்பது வெகு கஷ்டமாயிருக்கே என்று அதிகாரம் செய்வதுவும் அவனிடத்தில் தான்!

ஃ

வீட்டுக்கு உழைத்துப் போடுகிற குமாரனிடத்திலே தாய்க்குக் குற்றம் கண்டுபிடிப்பது தான் வேலை! அவன் தன் தம்பியைக் கவனியாமலிருக்கிறானென்றும், அவனுக்கு ஒரு விவாகம் செய்து வைக்காமலிருக்கிறானென்றும், தனது மனைவிக்கு மட்டும்

நகைகள் செய்து சிங்காரிப்பதில் சுறு சுறுப்புக்குக் குறைவில்லை யென்றும், அந்த மருமகச் சிறுக்கியின் வலையிலே தன் மகன் விழுந்து கெட்டு அவள் மனுஷியாகப் போய்விட்டானென்றும் பழித்துக் கேவலப்படுத்துவதும் அந்த உழைக்கும் புண்ணியைத் தான்! எந்த உழைப்புமின்றி வேளை தவருமல் வெட்டிச்சோறு தின்று கொழுத்து ஊர் சுற்றிக்கொண்டு திரிகிற குமாரனிடத்தில் தான் தாய்க்குப் பரம விசுவாசம்! அந்தக் குமாரனுக்குத்தான் நல்லபேரு! அவனைத்தான் தன் பக்க மனுஷனுகத் தலையில் தூக்கி வைத்துக்கொண்டாடுவது!

ஃ

வீட்டின் எல்லா பாரச் சுமைகளையும் சுமந்து தாங்கிச் செலவிடுகிறவளை வீட்டுக்கார அம்மாளான மனைவி ஒரு பொருட்டாக மதிப்பதேயில்லை! அந்தக் கணவனிடம் தான் ஓயாமற் சண்டையிடுவது! உண்ணப் போகிற நேரத்திலே, ரவிக்கையில்லை, சேலையில்லை, நகையில்லை என்கிற பேச்சுகளை எடுத்துக்கொண்டு அதிலிருந்தும் ஒரு கலகத்தை வளர்த்துவிட்டு, சாப்பிடப் போன சாதம் நஞ்சாக மாறும்படி செய்து ஆட்டிவைப்பதும், விசுவாச மற்று நடப்பதும், பழிப்பதும், தூஷித்து எதிர்ப்பதும் அவனையே தான்! என்ன செய்து விட்டது, என்ன சாதித்து விட்டது, நான் ஒருத்தி இங்கு இல்லாமற்போனுல் வீடு நாறிப் போகுமே என்பது போன்ற பழிப்பு வார்த்தைகள் வீசுவதும் அவனிடமேதான்! தனக்கு எந்த உதவியுமே செய்யாமல் பேருக்கு மட்டும் வெகு பக்ஷமாய் நடிக்கிறவர்களையும், தன் கற்பையே உறிஞ்சிவிட நினைக்கிற தன் தமக்கை தங்கை புருஷர்களையும், கெடுபுத்தி படைத்து வெளிக்கு விசுவாசமாக உறவாட வருகிற பந்துவர்க்கத்தைச் சேர்ந்த நரிகளிடமும் உயிருக்குயிரான அபிமானம் வைத்து ஆகாசத்திலே உயர்த்திப் பேசுகிருள்! அந்த உதவாக் கட்டைகளுக்குத்தான் ரொம்ப நல்ல பேரு! தன் பர்த்தாவைவிட அவர்களேதான் தனது ஆபத்துகளுக்கு உதவக்கூடியவர்களென்று வீட்டுக்காரி நினைத்துக்கொள்கிருள்! தன் கற்பைக் கொடுத்தாவது அவர்களைத் தனக்குவேண்டிய மனுஷர்களாக்கிக் கொள்ளவேண்டுமென்று நினைக்கிறவர்களும் இல்லாமலில்லை! அந்த நல்ல பேரு படைத்தவர்களோ விருந்தும் பத்துவகைப் பக்ஷணங்களுமாக நன்ருக உண்டுவிட்டுக் கம்பி நீட்டுகிருர்கள்! அந்த நல்ல பேருக்காரர்கள் தன் வீட்டுக்கு வந்தால் படுத்துக் கொள்வதற்கென்று சுத்தமான தலையணையும் பாய் ஜமுக்காளங்களும் தனியாக எடுத்துப் பத்திரப்படுத்திப் பரணிமேலே வைக்கிருள்! கட்டிக்கொண்ட புருஷனுக்கு இரவிலே பாய் படுக்கைகூடப் போட்டுக் கொடுக்காமல் போய்விடுகிருள்! வீட்டுக்காரன் அந்தப் பாய் படுக்கையைத் தானே சென்று எடுத்துப் போட்டுக் கொள்ளும்படி யாகிறது! நாளைப் புரட்டாசி சனிக்கிழமைக்கு அந்த நல்ல பேரு கொண்டவர்கள் வருவார்களென்று தெரிந்ததும் இன்றைக்கே தோசை இட்டிலிக்கு மாவு அரைத்து வைத்துவிடுகிருள்!

அதிக மூளையின் கூர்மை வேற்றுமைப்புத்தியை வளர்த்து, தான் பிரியவோ, மற்றவர்களைப் பிரிக்கவோ முயன்று; முடிவில் தனது நன்மைக்கே தீங்கைச் செய்துகொள்கிறது.

"நான் எவ்வளவோ தடவை தோசை சுடும்படி கேட்டும் மாவு அரைக்க என்னுலிருக்கிறதா என்று சலித்து முறைத்துக்கொண்ட நீ இன்றைக்கு ஏது புதுமையாக மாவு அரைத்தது" என்று புருஷன் கேட்பானுனல் "உங்களுக்காகத்தான் தோசை மாவு அரைத்தேன்; நீங்கள் பிரியப்பட்டுக் கேட்கையில் எத்தனை நாளைக்குத் தான் முடியாதென்று சொல்வதென நினைத்து என் பாடோடு பாடாக மாவு அரைத்து வைத்தேன்" என்று வெகு பக்குவமாய்ப் பேசி மயக்கிவிடுகிருள்! மறுநாள் சனிக்கிழமையில் அந்த நல்ல பேருக்காரர்கள் வந்துவிடவே, வீட்டுப் புருஷனுக்கும் தன் மனைவி எவருக்காக வென்று மாவு அரைத்தாளென்பதும் விளங்கி விடுகிறது! தான் அவ்விதம் அறிந்துகொண்டதை அவளிடம் வெளியிட்டுக்கொண்டு, அதில் ஒரு பெரிய கலகம் சண்டை எதற்கு என்று ஏதும் தெரியாதவன்போல் மௌனமாக இருந்துவிடுகிருன்!

ஃ

வேறு பெண்ணின் முகத்தைப் பாராமல் தன் மனைவியோடு திருப்தி பட்டுக்கொண்டிருப்பவனுக்கு நல்ல பேரே இல்லை! அவன் தன் ஆசைக்குத் தன் மனையாளை அழைத்தாலும், எத்தனை முறை எழுப்பி அவள் காலைச் சுறண்டினுலும், அவள் எழுந்திருப்பதுமில்லை! வருவது மில்லை. அவனது ஆசை நோயைத் திருப்திபடுத்துவதுமில்லை! அவனுக்கு இன்பமாக நடந்துகொள்வது மில்லை! அப்படித்தான் வந்தாலும் சிடு சிடுப்பும் வெடு வெடுப்புமாக அவன் மூஞ்சியில் எரிந்து விழுந்து அந்த இன்பப் பொழுதைப் புண்ணுக்கி விடுகிருள்! இப்படியாக வீட்டுப் புருஷன் பலகாலும் ஏமாறி மனம் வெறுத்துப்போய், சீ! என்று தன் மனைவியை விட்டுவிட்டு வேறு பெண்களிடத்தில் சரசம் வைத்துக் கொள்ளத் தலைப்பட்டு, வீட்டு நகைகளை யெல்லாம் தன் ஆசைப்பெண்களுக்குக் கொடுக்க ஆரம்பித்து, தன் வருமானத்தையும் அங்கேயே செலவிடத் தொடங்கிவிடுவானுனல், அப்போதுதான் வீட்டுக்காரிக்கு நல்ல விழிப்பு வருகிறதப்பா! தன் புருஷன் வீட்டில் தங்காமல் வெளியே போய் விடுவதையும், இரவுக்கு வீட்டில் இல்லாமல் வேறிடத்தில் படுக்கை வைத்துக்கொண்டு விட்டதையும் நினைத்து என்ன செய்வதென்று கையை முறிக்கிருள்! அவனுக்கு வெகு நல்லவளாகவும் நடந்துகொள்ளப் பார்க்கிருன்! அவன் என்றைக்காவது நாலுநாள் வீட்டோடு தங்கி விட்டால், "அவர் இப்போது நல்லவராய் விட்டாரு" என்று அவனுக்கு "நல்லபேரு" கொடுக்கத் தொடங்கி விடுகிருள்! "என்னவோ என் தலையெழுத்து, அவர் அந்த மூதேவியுடன் கெட்டலைந்தாலும் என்னை மறக்காமலே நல்லவராகவே நடந்துகொள்ளுகிருரு" என்று சொல்ல ஆரம்பிக்கிருள்! "புருஷன் என்று இருந்தால் தாசி வேசி வீட்டுக்குப்போகாம லிருக்க முடியுமா? என்னதான் போனுலும் என்னை அவர் கைவிட்டுவிடவில்லையே" என்று சொல்லிக் கொண்டு, தன் புருஷனுக்கு "நல்ல பேரு" தருகிற பூங்கோதைகளையும் அங்கங்கே பார்த்துக்கொண்டே தான் வருகிறோம்! சில பெண்களோ தங்கள் கணவன்மார் உயிருடனுள்ள வரையில் அவர்களுக்கு "நல்லபேரு" தருவதேயில்லை! அவர்கள் செத்துச் சாம்பலான பிறகு, எல்லாக் குடும்ப பாரமும் தங்கள்மீது ஏறி அழுத்தும் போது புத்திவந்து, அந்த நல்ல மனுஷர் இருந்திருந்தால் இப்படிச் சீரழி

யுமா, எவ்வளவோ பதவிசாய் மேன்மையாக நடத்தியிருப்பாரே, அவ்வளவுக்கு நான் பாவி கொடுத்துவைக்காமற் போனேனே என்று அங்கலாய்த்துக்கொண்டு, அந்த செத்துப்போனவர்களுக்கு "நல்லபேரு" கொடுக்கத் தொடங்குகிறார்கள்!

ஃ

நெற்றி வியர்வை நிலத்தில் வீழ உழைத்தவனின் சம்பளத்திலோ கூலியிலோ ஒரு ரூபாயோ எட்டணா காலணாவோ இழுத்துப் பிடித்துக்கொண்டு, நீ என்னடா அப்படி வேலைசெய்து புரட்டிவிட்டதென்று கண்டபடி வைதுவிட்டுத் தன் முதலாளிக்குத் தான் லாபம் சம்பாதித்துக் கொடுத்ததாகக் காண்பித்துக்கொண்டு, ரகசியத்தில் தோலிருக்கச் சுளை முழுங்கியாகத் தப்புக் கணக்குகள் எழுதிக் கிடைத்தவரையில் தினமும் சுறண்டிக்கொண்டு போகிறானே அந்தத் தலைமைக் குமாஸ்தாவுக்கு வெகு நல்லபேரு அப்பா! அந்தக் குமாஸ்தாவிடத்திலேதான் முதலாளிக்கு ரொம்ப நம்பிக்கை விசுவாசங்களப்பா! யதார்த்தமாகப் பாடுபட்டவனுக்கோ பட்டைநாமமும் பழிப்புச் சொற்களுமப்பா! நாளைக்கு முதலாளி கடனாளியாகி நஷ்டப்பட்டு நடுத்தெருவுக்கு வருவதும் இந்தத் தலைமைக் குமஸ்தாவாலே தானப்பா! இவனுக்குத்தான் நல்ல பேரு!

ஃ

எவ்வளவோ சீர்வரிசைகள் செய்து வாரிக்கொடுத்த பெண் வீட்டாருக்கு "அவர்கள் என்ன அப்படித் தூக்கிக் கொடுத்துவிட்டது" என்பதாக இழிவான பேச்சுகளே இனாமாக வரும்! எதுவுமே செய்யாமல் ஒதுங்கிக்கொண்டவர்களுக்கும், இரண்டு நாளைக்கு மருமகன் தங்களின் வீட்டில் தங்கிவிட்டால், அதை ஒரு பெரிய பாரமும் கனத்த தொந்தரையும் செலவுமாக நினைக்கிற பெண் வீட்டுக்காரர்களுக்குமோ ரொம்ப நல்லபேரு! அவர்களுக்குத்தான் உப்புமா காபி உபசாரங்கள்! அவர்களைத்தான் தனக்கு ரொம்பவும் முக்கியஸ்தர்களாக நினைத்துக் கொள்வதுங்கூட! இப்படியே மனதார உழைத்து முகம் கோணாமல் நடந்துகொண்ட மூத்த மனைவிக்கும் மருமகளுக்கும் கெட்ட பேரு! எந்தச் சின்ன சங்கதிக்குமே ஒரு முழம் கையை நீட்டி எதிர்த்துப் பேச வருகிற இளைய மனைவிக்கும், மீறிப்போன மருமகளுக்கும் ரொம்ப நல்ல பேரு!

ஃ

காலமுழுதுக்கும் தன்னை ஆதரித்துக் காத்து உலகத்திலே தன்னையும் ஒரு மனுஷ்யனாக்கிவிட்ட உபகாரியைக் கண்டபடி தூற்றுகிறது; அவனிடம் விசுவாசமற்றுப் போவது! எப்போதோ ஒரு நாளைக்கு விருந்து செய்தவனையும், தனக்கு ஒரு சமயம் துணையாயிருந்தவனையும் வெகு நல்லவனாக நினைத்துக்கொண்டு சிலாகிப்பது! பலநாளும் நன்மை செய்த நண்பனை தான் கேட்டபோது ஒன்றைத் தராமற் போனதற்காக விரோதித்து விலகிக்கொள்வது; தன் செலவிலேயே தன்னோடு சுற்றித்திரியும் உதவாக் கட்டைகளைத் தனக்கு வேண்டிய நேசர்களாக நினைத்துக்

"இந்த நோயாளிப்பெண் எனக்கு வேண்டாம்; வேறு விவாகம் செய்துகொள்ளுகிறேன்" என்கிறான் ஆடவன். பெண் அப்படிச் சொல்ல முடியவில்லையே. விவாகரத்துச் சட்டமே இனி தோன்றினும் அவ்விதம் பெண் பிரிவது தர்மமல்லவே.

கொள்வதும், அவர்களுக்கே நல்ல பேரு தருவதும் என்ன வேடிக்கைக ளப்பா! கல்யாணத்துக்கு எல்லா ஏற் பாடுகளும் செய்து சேர்த்துவைத்து வீட்டிலே விளக்கு ஏற்றி வைத்தவ னைக் கடைசியிலே விரோதித்துக் கொள்வது! அந்தக் கல்யாணமே நட வாதபடி எதிரிடையாயிருந்துவிட்டு, கலியாணமான பிறகு பல்லிளித்துக் கூடிக்கொண்டவனை ரொம்ப மதிப் பாக நினைத்து அவனோடு குலாவி அவனுக்கு நல்லபேரு தருவது! இப் படியே மோசங்கள் செய்து சொத்து சேர்த்து மாடி வீடு கட்டினவனுக்கு நல்லபேரு! ஒழுங்கு தப்பாமல் தர் மத்தை நினைத்து நடந்தவனுக்குப் பழிப்புப் பேரு! தன் தங்கைக்கு அவ ளுடைய விதவை நிலைமையில் சின்னபின்னமாகக் கிடந்த சொத்து களை யெல்லாம் ஒன்று சேர்த்து வைத்து ஆதரித்த அண்ணனுக்குக் கெட்டபேரு! அப்பால் பிந்தியநாளில் மூன்றுவது மனிதனொருவன் மெது வாக வீட்டுக்குள் காலடிவைத்து நுழைந்து அந்த விதவையை வசப் படுத்திக்கொண்டு, அவளையும் குடும் பத்திலிருந்து பிரித்து, அவள் சொத்துகளை யெல்லாம் தன் வசம் செய்துகொண்டு அழிக்கத் தொடங்கு கிறவனுக்கு வெகு நல்ல பேரு! அந்த விதவைத் தங்கை தனக்கு எவ் வளவோ உபகாரம் செய்த அண்ண னைப் பழித்துவிட்டு, அந்த நாசகால னை மூன்றுவது மனிதனையே வெகு நல்லவனென்று நம்பி விடுகி ருள்! நாலாம்நாளில் யாவும் தோற்று நடுத்தெருவுக்கும் வந்து விடுகிருள்!

ஃ

எதிலும் கண்டிப்பா யிருப்பவ னுக்கும், கருமிக்கும், எதிலும் பட்டுக் கொள்ளாதவனுக்கும் நல்லபேரு! வழ வழவென்று தாராளமாயிருப்பவனுக் கும், அதிகச் செலவிடுவோனுக்கும், எந்த சங்கதியிலும் உடனிருந்து உதவுகிறவனுக்கும் கெட்ட பேரு! தீபாவளிக்குத் தன் வீட்டாருக்கும் தன் மனைவிக்கும் வேண்டியதெல் லாம் வாங்கிக்கொடுத்து ஏராளமாய்ச் செலவிட்டவனுக்கு "அது வாங்க வில்லே, இது வாங்கவில்லே" என்ப தாகப் பழித்துக் கெட்டபேரு! தன் மனைவிக்கு ஏதோ ஒரு நாட்டுச் சேலையை எடுத்துக் கொடுத்துவிட்டு அவ்வளவுடன் கை சுருங்கிக்கொண் டவனுக்கு நல்லபேரு! உண்மையான எஜமானனிடத்திலே துரோகமாய் நடந்துகொண்டு, மோசக்கார நன்றி யற்ற எஜமானனுக்கு வெகு நல்லவ னக நடந்துகொள்வதும் ஒரு வேடிக் கைதான்! இப்படியே, நன்ருக உழைக்கிறவர்களின் வயிற்றிலே அடித்துவிட்டு, மேலுக்கு ரொம்ப ரொம்ப உழைப்பதுபோலக் காட்டுகி றவர்களின் சம்பளங்களை உயர்த்தி அவர்களுக்கு நல்ல பேரு தருகிற முதலாளிகளது கோணல் புத்தியின் சங்கதிகளும் வெகு விநோதமான வைகள் தான்!

II

இனி யாரப்பா ராஜா? ஓடிப் போனவனுக்கு ஒன்பதாம் இடத் திலே ராஜா! அகப்பட்டவனுக்கோ அஷ்டமத்துச்சனி! தன் வீட்டிலே பிரயாணம்சொல்லிக்கொண்டு வண்டி யேறி விடுகிருனே—அவன் அப் பாலே ராஜா! அவன் மறுபடி வீடு திரும்புகிற வரையில் சமுசாரத் தொல்லைகளில்லாத ராஜாவாகி விடு கிருன்! கடன்காரனுக்குக் கடுக்கா காண்பித்து ஏமாற்றிப் போடு கிருனே—அவனும் ஒரு ராஜா! நல்ல அதிர்ஷ்டமிருந்து வியாபாரம் கூடிக் கொண்டு விருத்தியடைந்து உச்சிக்கு உயர்ந்து விடுகிருனே—அவனும் ஒரு

ராஜா! வணக்கமும் தாழ்மையும் நல்ல படிப்புமுள்ள பெண்ணை மணந்து கொண்டவனும் ஒரு ராஜா! பிழைப்புக்கு வழி கிடைத்து விட்டவனும் ஒரு ராஜா! பணக்கார மாமியார் வீடு கிடைத்தவனும் ஒரு ராஜா! தன்னைச் சுற்றி நண்பர்களோடு விளங்குகிறவனும் ஒரு ராஜா! தன் பெற்றோர்களுக்கும் பந்துக்களுக்கும் பக்கத்திலில்லாமல் தூரமான ஊரில் இருந்து கொண்டு, எப்போதோ கொஞ்சம் பணம் அனுப்பிவிட்டு ஒதுங்கி நிற்கிறானே அவனும் ஒரு சுகமான ராஜா! மணத்திற்கும் மரணத்துக்கும் வண்டிச் செலவுகள் செய்துகொண்டு புறப்பட்டுச் செல்லாமல் ஒரு கார்டு மிக்க உருக்கமாக எழுதியனுப்பி விட்டுத் தப்பித்துக் கொள்கிறானே—அவனும் ஒரு ராஜா! தன் பந்துக்களில் ஒருவருக்கு மரணம் நேர்ந்த போதும், வேறு விசேஷங்கள் நடந்த போதும் ஊரில் இல்லாமல் வெளியூரிலிருந்து விடுகிறவனும் ஒரு ராஜா!

ஃ

தான் சம்பாதித்து வந்த பணத்தில் கலியாணம் செய்துகொள்ளாமல், எல்லாம் தகப்பனாரே செய்யத் தான் மாப்பிள்ளையாக இருந்து பெண்ணின் கையைப் பிடிக்கிறானே—அந்தக் கவலையற்றவனும் ஒரு ராஜா! மூத்த மனைவியோடேயே காலமுழுதும் இருந்துவிட்டுக் கடவுளிடம் போகிறானே—அவனும் ஒரு ராஜா! ஆண் குழந்தைகளையே பெறுகிறவனும் ஒரு ராஜா! எல்லா சொத்துக்களும் தகப்பன் தேடிவைத்துச் சாக, தான் சௌக்கியமாய் வீட்டிலிருந்து கொண்டு உண்ணுகிறானே அவனும் ஒரு ராஜா!

ஃ

கோர்ட்டு வழக்கிலே ஜெயம் பெற்றவனும் ஒரு ராஜா! தன்னிடம் ஒரு நகையையோ, பணமுடிப்பையோவைத்திருக்கும்படிக் கொடுத்துவிட்டுப்போனவன் மறுபடியும்திரும்பிவராமல்வாந்திபேதியில்போய்விட்டால், அதைப் பெற்றுக் கொண்டவனும். இனிமேல் ஒரு ராஜா! தன் திருட்டு, துரோகங்கள் வெளியாகாமல் தப்பித்துக் கொள்கிறவனும் ஒரு ராஜா! போன இடத்திலே காரியம் கைகூடி லாபமாய் முடிந்து பணமூட்டை கட்டுகிறானே அவனும் ஒரு ராஜா!

ஃ

தான் தேடிப்போன மனுஷ்யன் எதிரே வரக்கண்டாலும், அல்லது அவனது வீட்டிலே அவனைச் சந்திக்கும்படி யாகிவிட்டாலும், அப்போது உண்டாகிற திருப்தியிலே ஒரு ராஜாதான்! காதலித்த நங்கை தனக்கு வசப்பட்டுவிட்டால் அவனும் ஒரு ராஜாதான்! நாலாறு அண்ணன் தம்பிகளிருந்து சொத்துக்கள் பாகம் செய்யப்பட்டுச் சிறுத்துப் போகாமல், ஏக குமாரனாக இருந்து எல்லாச் சொத்துக்களையும் தானே ஆண்டனுபவித்துக் கொள்கிறானே அவனும் அதிர்ஷ்டசாலியான ஒரு ராஜா!

ஃ

புஸ்தகத்தை இரவலாகப் பெற்றுப் பிறகு மெதுவாக விழுங்கிவிட்டு

சீரங்கத்துக் காக்காவொன்று திருவானைக்காவற் கோயிலை மூக்கினால் சுறண்டிச் சுறண்டி இடித்துவிட எண்ணியதாம்! சீரங்கத்து வைணவப் பார்ப்பானொருவன் திருவானைக் காவலில் சைவர் வீடுகளில் பிச்சை யெடுத்துப் பிச்சை யெடுத்து அவ்வூராரை எளியவராக்க முயன்றானாம்! இது மதப் பகைமையை விளக்கும் பழைய கதை.

அந்த வகையில் கைகடிக்காமல் புஸ்தகம் பெற்றுக்கொண்ட மோசக்காரனும் ஒரு ராஜா! தன் கடன்களையெல்லாம் மறைத்துக்கொண்டு கைமூடி வாழ்கிறவனும் வெளிப் பகட்டிலே ஒரு பெரிய ராஜா! விற்பதற்குக் கொடுத்த புஸ்தகங்களுக்குப் பணம் தராமலே நூலாசிரியர்களை ஏமாற்றிவிடுகிற வியாபாரிகளும் ஒரு ராஜா! நாளைக்கு ஆக்கிச் சமைக்க அரிசி யில்லாமற் போனாலும், இன்றைக்குப் பானையிலே சாதமும் குழம்பு மிருப்பவனும் ஒரு ராஜா! அதிக வோட்டுகள் அதிர்ஷ்டத்தாலே கிடைத்து ஜெயம் பெற்றவர்களும் ஒரு ராஜா!


ஃ

இப்படியாக, தேசமும், சொந்த ராஜ்ஜியமும் இல்லாத ராஜாக்கள் இந்த விநோத விகட உலகத்திலே எவ்வளவோ பேர் இருக்கிறார்களப்பா! இவர்களோடு கூட வெளிக்கு நல்ல பேரு வாங்கிய ஜெகஜாலக் கபட துரோக சித்தர்களுமிருக்கிறார்களப்பா! இந்த இருவகை மனிதர்களையும் விகடன் இங்கே குறிப்பாகக் காட்டிவிட்டேன்! நீங்களும் கேட்டுவிட்டு, உங்களின் எண்ணங்களை நீட்டிவிட்டுக் கொள்ளுங்கள்! ராம்! ராம்! சுபம்; சூ! சுவாஹா!!

படித்து உழைக்காத மாணவர்கள், தங்கள் தோல்விக்காக பரீட்சாதிகாரிகளின் பேரில் பழிபோட்டு, பொய்ச் சமாதானத்தை மனதில் வருவித்துக் கொள்ள முயலுவதுபோல, நம்மவர்கள் எவ்வித முயற்சியிலும் உழைப்பிலும் மனப்பிடிப்பு இல்லாமல், "காலம் வரணும்" என்று சாக்குப் போக்குச் சொல்லுகிறார்கள்.

காரியத்திற் கண்ணானவர்கள்.

சிலரது நடத்தைகள் அருவருக்கத்தக்கவை. அவர்களுக்குத் தங்களின் காரியத்திலேயே கண். பிறரிடத்தில் அன்போ விசுவாசப் பேச்சோ எதுவும் வைத்துக் கொள்வதில்லை. தங்களின் காரியங்கள் எதெது உண்டோ அதை மட்டும் முக்கியமாய்க் கவனித்துக்கொண்டு போய் விடுவர். ஒருவர் தன் கடைக்குச் சாமான் வாங்க வந்தால் அந்த சமயம் அவரோடு வெகு பிரியமான பேச்சு. அதற்குப் பதிலாக அவரும் பேசுகிறார். இதனிடையே அவரது வியாபாரம் தீர்ந்ததும், அவர் பேசுவதைக் கவனியாமல், அவ்வளவுடன் நிறுத்திக்கொண்டு, சரக்கு வாங்க வந்த வேறொருவரிடம் பேச ஆரம்பித்து விடுகிறார். முன்பு பேசியவர் தமது பேச்சைப்பாதியில் நிறுத்திக்கொண்டு போகவேண்டியவராகிறார். இவ்வளவு கொடுமையான சுயநல புத்தியும் அலக்ஷியமும் அருவருக்கத்தக்கவையன்றோ?



எச்சில் புசித்தாலும் வயிறு நிறையத் தின்ன வேணுமாம்! எசிக் காட்டினாலும் பொழுதுவிடிய எசிக் காட்டவேண்டுமாம்!

யாராவது வீட்டுக்கு வந்திருக்கும்போது புருஷனுடன் சண்டையிட்டுக்கொண்டால்தான் வீட்டின் கௌரவம் பளிச்சென்று தெரியுமாம்!

தனக்காகச் செய்து கொள்ளுகிற வேலையைப்போலப் பிறருக்குச் செய்து கொடுக்க மனம் வராதாம்!

கெஞ்சிக் கேட்கிறவனுக்குக் கஞ்சித் தண்ணியும் கிடைக்காதாம்! மிஞ்சி விலகி மீறிப்பேசுகிறவனுக்கே புலாச்சாப்பாட்டு விருந்துநடக்குமாம்!

தீபாவளியிலே பணக்காரர்களுடைய பணங்களெல்லாம் பாணங்களாகவும், பையன்களுடைய பணமெல்லாம் பட்டாசுக்கட்டுகளாவும் மாறுமாம்!

எங்கள் வீட்டிலும் காலையில் காபி பலகாரம்தான் என்று பெருமையாகச் சொல்லிக்கொள்ளவேணுமாம்!

வியாபாரி சிரித்துப் பேசுவதெல்லாம் வியாபாரம் நடப்பதற்காகவாம்!

கறி திண்டியும் சாராயத் தண்ணியும் இல்லாத தீபாவளி உற்சாகம் தராதாம்!

மனைவியின் அழுகையைக் கவனிக்காதவர்களும் மகள் அழுதால் உடனே கவனிப்பார்களாம்!

ஊராரை மோசம் செய்து விட்டுக் கோயில் தீபத்திற்கு நெய் விட்டால் பாவம் தீர்ந்து விடுமாம்!

தகப்பன் செத்தாலும் மாற்றாந் தாய் காட்டும் பகை சாகாதாம்!

அடங்காப் பெண்டாட்டியாயிருந்தாலும், வீட்டுக்கு ஒரு மனுஷியாய்த் துணையிருக்கிறாளே யென்று திருப்திபட்டுக்கொள்ள வேண்டுமாம்!

முள்ளங்கியை மென்றதில் அதிக காரமானால் மிளகாயைக் கடித்தால் போய் விடுமாம்!

என் வீட்டுக்காரருக்குத் தமிழ் படிக்கத் தெரியாது, இங்கிலீஷ் மட்டும் தான் தெரியும் என்று ஒரு தமிழ்ப் பெண் சொன்னாளாம்!

கடன் இல்லாத மனுஷன் கால் மனுஷனாம்! எண்சாண் உடம்புக்குப் பொய்யே பிரதானமாம்!

குதித்துக் கொதிப்பதெல்லாம் தன்னை மதிக்காத இடத்திலே நடக்காதாம்!

மரமேறிக் கைவிட்டவனுக்கு உடனே கைலாச வைகுண்ட பதவி கிடைக்குமாம்!

ஒன்றைக் கொடுத்தவர்கள் திரும்பக் கேட்க மறந்துவிட்டால், அதை வாங்கிக் கொண்டவர்களுக்கு அது சொந்த சொத்தாகி விடுமாம்!

பெண்கள் கல்வி கற்பதெல்லாம் பிறகு கணவனின் வீட்டில் படுகிற கஷ்டங்களைத் தாய்வீட்டுக்குக் கடிதம் எழுதுவதற்காகவாம்!

வீட்டிலே மருமகள் இருந்தாலும் தனக்கென்று ஒரு சொந்த மனைவியிருந்து செய்கிறதுபோல அந்த மருமகள் செய்ய மாட்டாளாம்!

ஒருவர் துணையாயிருப்பதற்குத் தன்னை அழைத்தால், அதுதான் சமயமென்று தன் முழுக் குடும்பத்தையே அவ்வீட்டுக்கு அழைத்து வைத்துக்கொள்ள வேண்டுமாம்!

சொந்தப் புருஷன் வாங்கித் தந்த பட்டுச்சேலையைவிட, ஆசை நாயகன் வாங்கிக் கொடுத்த சீட்டி ரவிக்கைக்குத் தான் அதிக மதிப்பு ஏற்படுமாம்!



ஹாஸ்ய சஞ்சீவினி



தம்பு:—சிமண்ட் பூசினால் கட்டடம் வெகு கெட்டியாயிருக்குமென்கிறார்களே. ஆடும் பல்லுக்கும் சிமண்டு பூசலாமா ?

கோம்பு:—ஆகா! பேஷாகப் பூசலாம். ஆனால், பல்லில் சிமண்டு பூசியிருக்குமிடத்தை நாக்கு தொடாதபடி அதை மடித்துக் கட்டிவிட வேண்டும். பூசிய சிமண்டு ஆறுவதற்காக ஜலம் படாதபடி இரண்டு நாளைக்கு வாயைத் துடைத்து ஈரமின்றி வைத்திருக்கவேண்டும்.

ஃ

சேஷி:—உன் வீட்டுக்காரர் காலை 4-மணி ஆச்சுதென்று உன்னை எழுப்பி வீட்டு வேலைகள் செய்யச் சொன்னாரே, ஏண்டி நீ உடனே எழுந்து போகவில்லை?

துப்பி:—நாலுமணியல்லடி, அப்போதுதான் ஒருமணியடித்தது. ஒரு மணியை நாலுமணியென்று சொல்லி என்னை எழுப்பிக்கொண்டு மெதுவாக உள்ளே அறைக்குப் போகப் பார்த்தாரு. அவர் எண்ணம் தெரிந்துதான் எழுந்திருக்கவில்லை. எப்பவும் அதிலேயே அவருக்கு நினைப்பு.

ஃ

மகன்:—அப்பா, நம் தோட்டத்தில் ஒரு பசுவும் ஒரு ஆளும் நுழைகிறார்கள். பசுவை வெரட்டுவதா? ஆளை வெரட்டுவதா?

தகப்பன்:—அந்த ஆள் யாரென்று விசாரித்தையா?

மகன்:—விசாரித்தேன். அவர் ஒரு லாயராம்.

தகப்பன்:—ஆனால், லாயரை வெளியே வெரட்டு.

மகன்:—அவர் ஒரு கனவானாச்சே? அவரை அவமதிக்கலாமா?

தகப்பன்:—பசு பயிரை மட்டுமே தின்னும். ஆனால், லாயரோ நிலத்தையே தின்றுவிடுவார். ஆனதால் உடனே வெரட்டு.

ஃ

கிருஷ்ணன்:—என்னடா நிலத்தை விற்கப்போகிறாயாமே? அட முட்டாளே! உத்தியோகத்திலே உனக்கு மாதம் நூறு ரூபாய் வரும்போது, நிலத்தை எதற்கு விற்கப் போகிறாய்?

கோபாலன்:—நானோ கிராமத்தில் வசிப்பதில்லை. குத்தகைக்கு விட்டுச் சென்றால் வட்டி சரியாய்க் கட்டுகிறதில்லை. எனக்கு இருக்கும் 10-காணியையும் விற்றுக் கிடைக்கும் ரூ. 10000-த்தை வட்டிக்குப் போட்டால் மாசம் ரூ. 100 எனக்குக் கிடைக்கும். ஆனால், நிலத்திலிருந்து

நாடக மேடையில் இராமபிரானின் (வனவாச) வேடத்தில் மிகப் பொருத்தமாய் நின்றவர் ஸ்ரீமான் தி. நாராயணசாமிப் பிள்ளை. அவருக்குப் பிறகு ஸ்ரீமான் கே. ஸ்ரீநிவாசப் பிள்ளை விளங்கினார். ஸ்ரீமான் இராமச்சந்திரம் பிள்ளை என்பவரும் ராமர் வேடத்தில் பிரக்கியாதி வகித்தார். இம்மூவருக்குப் பிறகு அந்த வேடத்தின் பிரகாசமே குன்றிவிட்ட தென்னலாம். இராமர் வேடத்திற்கு முக்கியமானது சாந்த பாவனை, கம்பீர நடை.

வருமானம் வருஷத்துக்கு ரூ. 200 கூடக் கிடைக்கிறதில்லே. எது லாப மென்று யோசித்துப் பார்.

கிருஷ்ணன்:—நீ பணம் போடுகிற பாங்கு நானைக்கு முழுகிப்போனால் நீ அடியோடு பிச்சைக்காரனுவாய். வட்டிக்கு ஆசைப்பட்டால் அசலே போய்விடும். அதற்காகக் கோர்ட்டும் கச்சேரியுமாக அலேய வேண்டும். நிலமோ சாஸ்வதம். அதன் கௌரவமே ஒரு தனி அந்தஸ்து. நிலம் கைவிட்டுப்போனல் திரும்பி வராது. உங்கள் அப்பா வெகு கஷ்டப்பட்டு வாங்கினர். எதற்கும் யோசித்துச் செய்யப்பா.

ஃ

இங்கிலீஷ் ஐயர்:—குட்மார்னிங் சார், டிக்கட் வாங்கி ஆச்சோ?

தமிழ் பிள்ளை:—நான் ஒரு சிநேகரை ரயிலில் சந்திக்க வந்தேன். ஐயாவாள் எங்கேயோ பயணம்போல் இருக்கிறதே? ஏதாவது யாத்திரை உண்டா?

இங்கிலீஷ் ஐயர்:—இல்லே சார், மெட்ராஸ் போறேன். அங்கே ஒரு பங்களா வாங்கியிருக்கிறேன். அங்கேயே யிருக்கலாமென்று உத்தேசம்.

தமிழ் பிள்ளை:—நிலத்தை நேரிலிருந்துகொண்டு பார்த்தாலல்லவா பலன் கொடுக்கும். உங்கள் தகப்பனர் நிலத்தையே சுற்றிக்கொண்டு கிடப்பாரே.

இங்கிலீஷ் ஐயர்:—நிலத்தையெல்லாம் குத்தகைக்கு விட்டுவிட்டேன். கிராமம் என்றால் என்ன தொல்லே? பையன்களுக்குப் படிப்புக்கு வழியில்லே. குட்டிகளுக்குப் பாட்டு வாத்தியார் கிடைப்பதில்லே. தபால், தந்தி சரியாய் வருவது கஷ்டம். படிப்பில்லா மூடருடன் சதா சர்வகாலம் கழிக்கவேண்டி யிருக்கிறது. பட்டணத்தில் அப்படியில்லே பாருங்கோ. அங்கோ மோட்டார் காரில் ஜம் என்று ஏறிக்கொண்டு பீச், சினிமா, க்ளப் இவ்விடங்களுக்குப் போகலாம். பெரிய உத்தியோகஸ்தருடனும் துரைகளுடனும் பேசிக் காலம் கழிக்கலாம. திடீரென்று அடுத்த தெரு சிநேகருடன் பேசவேண்டுமானல் டெலிபோன் செய்யலாம். இதெல்லாம் உங்கள் கிராமத்திலுண்டா?

தமிழ் பிள்ளை:—நல்ல அடி அடித்தீர்களே! கிராம சௌகரியமும், சுத்தமான காற்றும், நயமான காய் கறி பால் தயிர் நெய் முதலியவைகளும் பட்டணவாசத்திலுண்டா? கிராமத்திலேயே யிருந்தால் நிலத்திலிருந்து வருமானத்தை அதிகப்படுத்தலாம். பட்டணத்திலோ எல்லாம் செலவுக்கே வழி. நிலபலமில்லாதவன் பட்டணம் போவது சரி. வேண்டிய நிலமிருக்கையில் பட்டணம் ஏன் போக? பணத்தைச் செலவு பண்ணவா ?

இங்கிலீஷ் ஐயர்:—நீங்கள் சுத்த நாட்டுப்புறம். சிவிலிசேஷனே—நாகரீகமே—கிடையாது. நீங்கள் கிராமத்தையே கட்டிக்கொண்டு அழுங்கள். யாரடா போட்டர், பஸ்ட் கிளாஸ்

வருஷக் கடைசியில் எல்லா ஸஞ்சிகைகளேயும் ஒன்று சேர்த்துப் பயிண்டு செய்து கொள்ளாதவர்கள் மாதப் பத்திரிகைகளை வாங்குவதில் ஒரு பயனுமில்லே. வாரப்பத்திரிகை, தினப்பத்திரிகைகளைக் கூடச் சேர்த்து வைத்துப் பயிண்டு செய்துகொண்டால் மஹா அபூர்வ நூலாகவும் குடும்பத்தின் பெரிய சொத்தாகவும் ஆகும் இது புத்திசாலிகளின் வேலே.

வண்டியில் சாமான்களை ஜாக்கிரதையாய் எடுத்து வை.

ஃ

வினு:—மழை என் இல்லை?

விடை:—விண்ணில் ஸஞ்சாரம் செய்யும் மேகமெல்லாம் பூலோக வாழ்க்கையை விரும்பி, நோயாக உருவெடுத்து அநேகருடைய காலிலும் தேகத்திலும் தங்கி நீர் பெருகிக்கொண்டிருப்பதால் மழை அருமையாகிவிட்டதாம்!

ஃ

ரங்கன்:—ஹிந்துக்கள் ஜாதிபேதமுள்ளவர்களாமே. முற்காலத்தில் ஹிந்துக்கள் நாகரீக ஏற்றம் பெற்றிருந்தார்களென்று சரித்திரம் முறையிடுகின்றதே. அக்காலத்தில் ஜாதிபேதம் நிலைபெற்றிருக்கவில்லையா?

பத்மன்:—அந்தப் பிதற்றுதல் நம்மைக் கேவலப்படுத்திச் சொல்வதற்கப்பா. ஐரோப்பியர் சுதேச கிறிஸ்தவர்களோடே கலந்தும், கொண்டும், கொடுத்தும் என் சம்பந்தம் போடுகிறதில்லை? இருவரும் ஒரே மதமாயிற்றே. என் பிரிந்து தூர ஒதுங்குகிறார்கள்? அது ஜாதிபேதத்தினாலன்றோ? இவ்வாறிருக்க ஹிந்துக்களைத் தூஷிப்பதேன்?

ஃ

நண்பர்:—தங்கள் மனைவிக்கு சீக்கு சௌக்கியமாய்விட்டதா?

கனவான்:—ஆம். டாக்டர் இப்போது நாள் ஒன்றுக்கு இரண்டு வேளை மட்டுமே வந்து போகிறார்.

ஃ

அவர்:—நான் ஒரு விகடப் பத்திரிகையை ஆரம்பிக்கப் போகிறேன்.

இவர்:—அப்படியா, சந்தோஷம். நமக்கெல்லாம் பத்திரிகை இனாம் தானே?

ஃ

சுப்பு:—தங்கள் மனைவி தூரப் பெண்ணா, அல்லது சொந்த உறவிலேயே செய்துகொண்டதா?

ரத்தினம்:—அத்தை மகளையே மணந்தேன்.

சுப்பு:—அப்படியானால், தங்கள் குமார்த்தி அத்தையின் மகளுடைய பிள்ளையா?

ஃ

பரமசிவம்:—நாடகத்துக்கு வருகிறாயா? பெஞ்சுக்கு எட்டணாதான்.

சாம்பசிவம்:—அவ்வளவுக்கு என்னிடமில்லை. நீயே தந்து அழைத்துப்போனால் சந்தோஷம்தான்.

பரமசிவம்:—இன்றைக்கு நாடகம் அவ்வளவு நன்றாயிராது. உன் கையில் எட்டணா சேர்ந்த பிறகு உயர்ந்த நாடகத்திற்குப் போவோம்.

தனக்குக் கடிதம் வந்து ஒரு மாதத்திற்குப் பிறகு ஒருவன் பதில் வரைந்தால், அக்கடிதத்தைப் பெறுபவனும் அவ்விதமே ஒரு மாதத்திற்குப் பின்னர் பதில் தருகிறான். நாம் காட்டுகிற சோம்பலுக்கும் சுறுசுறுப்புக்கும் தக்கபடியே பிறர் நமக்குச் செய்கிற காரியங்களுமிருக்கும். முதலில் நமது நடத்தையால் பிறருக்கு ஒரு தப்பு வழக்கத்தை உண்டாக்குகிறவர்களாக நாமே ஆகிறோம்.

பாரிஜாதத்தின் பாக்கியம்.

ஜெகநாதய்யர் நல்ல சொத்துள்ளவர். தஞ்சாவூர் இராஜ வீதியிலே மூன்று பெரிய வீடுகள் அவருக்குச் சொந்தம். முப்பதினாயிரம் பெறக்கூடிய தோட்டம் நிலங்கள் வேறே உண்டு. கடவுள் இவ்வளவு கொடுத்திருந்தும் வரதக்ஷிணை யில்லாமல் விவாகம் நடத்தக்கூடாதா? தன் குமாரன் வேணுகோபாலன் பி. ஏ. படித்துவிட்டானென்றும், இனி எம். ஏ. வாசிக்கப்போகிறானென்றும் சொல்லி பெண்ணின் தந்தையான ராமய்யரிடமிருந்து மூவாயிரம் ரூபாய் வரதக்ஷிணை வாங்கிவிட்டார்.

ஃ

ராமய்யர் சிறந்த கல்விமான். கும்பகோணத்தில் ஒரு உபாத்தியாயர். மாதம் அறுபது ரூபாய் சம்பளம் பெற்றுவந்தார். அவர் இருபது வருஷங்கள் வரையில் உழைத்துச் சேர்த்த சொத்து நாலாயிரம் ரூபாய்தான். ஒரு ஆயிரம் ரூபாய் சேருவதென்றால் லேசா! சேர்த்துப் பார்த்தவர்களுக்குக் கஷ்டம் தெரியும். எவ்வளவோ செலவுகளைச் சமாளித்துக்கொண்டு ஒரு மிச்சம் எடுத்து வைத்து அதை ஆயிரமாக்கிப் பிறகு நாலாயிரமாக்குவதென்றால் எத்தனை பாடுகள் படவேண்டும்? அவ்வளவையும் தன் குமார்த்திக்குச் செலவிட்டுவிட்டார். 500-ரூபாய்க்கு நகை, 500-ரூபாய் விவாகச் செலவு, 3000-ரூபாய் பெண்ணைப்பெற்ற தோஷத்திற்காக அபராதமாகச் செலுத்தப்பட்ட வரதக்ஷிணைத் தொகை. பாட்டனார் காலத்திய ஒரு சிறிய வீடும், மனைவியின்மீது 500-ரூபாய் மதிப்புள்ள நகைகளுமே அவருக்கு மிஞ்சியது. அவரது குமாரன் சீனிவாசன் மூன்றாவது பாரத்தில் வாசித்துக்கொண்டிருந்தான். அவரது குமார்த்தி பாரிஜாதத்துக்கு 13-வயது. இன்றைக்கோ நாளைக்கோ பெரிய பெண்ணாகக்கூடிய நிலை.

ஃ


தீபாவளியென்றால் எவ்வளவு பெரிய கவலை? செலவிடுவதற்கு ஒரு மொத்தத்தொகை கைக்கு வேண்டியிருக்கிறது. யார் தருவார்? எங்கிருந்து கொண்டு வருவது? தன் கையில் இல்லாத கஷ்டத்தைச் சொன்னால் வீட்டிலுள்ளவர்கள் கேட்பார்களா? சிள்ளென்று முகத்தில் இடிக்கமாட்டார்களா? ராமய்யர் தனது மனைவியின் கழுத்திலிருந்த கடியார கொலுசைக் கழற்றிக்கொண்டு கும்பகோணத்திலுள்ள ஒரு பாங்கில் அடகு வைத்துப் பணம் வாங்கத் தீர்மானித்தார்.

ஃ

தன் குமாரன் வெள்ளிக்கிழமை கும்பகோணம் வருவானென்று ஜெகனாதய்யர் பெண் வீட்டாருக்குக் கடிதம் எழுதியிருந்தார். ஆனால், வேணு கோபாலனோ தன் நண்பன் கேசவனின் கடிதத்தைக் காணவே, புதன் கிழமையே கும்பகோணத்திற்குப் புறப்பட்டுச் சென்று அவனுடன் சந்தோஷமாயிருந்தான்.

ஃ

கேசவன் கும்பகோணத்திலுள்ள ஒரு பாங்கியில் குமாஸ்தாவானதால் காலையில் வேலைக்குச் செல்லும்பொழுது வேணுகோபாலனையும் இட்டுச் சென்றான். ராமய்யர் தீபாவளி செலவுக்காகத் தன் மனைவியின் கடியார கொலுசுடன் பாங்கிக்கு வந்து தனது நகைக்கு 150-ரூபாய் கேட்டார். 100-ரூபாய்க்குத்தான் பாங்கியில் ஒப்பினர். இதை வேணுகோபாலன்கண்டுவிட்டான். அவன் மனதுக்கு மிக்க வருத்தமாயிற்று. உடனே மாமனாரிடம் சென்று தன்னிடம் 120-ரூபாய் இருப்பதாயும் தன்னிடம் கடியார கொலுசை அடகு வைக்கும்படியும் நோட்டுகளாக 120 - ரூபாய்களை அவரிடம் கொடுத்தான். மாமனார் மருமகனைக் கண்டதும் திகைத்து நின்றார். பதில் பேசாமல் அவனிடம் கடியார கொலுசைக் கொடுத்துவிட்டார்.



மாமனாருடன் வேணுகோபாலன் வீட்டிற்குச் சென்று தன் மாமியிடம் கெடியார கொலுசைக் கொடுத்து, இனி மாமா கேட்டால் தரவேண்டாமென்றான்.



ஃ

வேணுகோபாலனின் குணசீலங்களைக் கண்டு ராமய்யரும் அவர் மனைவியும் அவனைத் தங்களின் உயிராகக் கருதினர். பாரிஜாதமோ தன் கணவனின் பெருந்தன்மைக்கு வியந்து மகிழ்ந்து நின்றாள். தீபாவளியும் நன்கு நிறைவேறியது. ராமய்யர் 120-ரூபாயையும் செலவிட்டு சீர்வரிசைகளுடன்தன் குமார்த்தியையும் மருமகனையும் ஊருக்கு அனுப்பினார். ஜகநாதய்யரும் தீபாவளியின் ஸன்மானங்களைக் கண்டு பூரித்தார். ராமய்யர் தனது தரித்திர நிலையிலும் கடன்பட்டாவது நன்றாகச் செய்யவேண்டுமென்று செய்துவிட்டதாக ஜகநாதய்யர் தமது மனதுக்குள் நினைத்துக்கொள்ளும்போது, இவ்வளவு உத்தமனான மனுஷ்யனைக் கஷ்டப்படும்படி விடக்கூடாதென்ற கருணை அவர் உள்ளத்தே உதயமாயிற்று. ராமய்யரும் வாழவேண்டும், நன்றாக இருக்கவேண்டுமென்று எண்ணினார். உடனே உத்ஸாகத்துடன் பாங்கிக்குச் சென்று தன் பெயரிலுள்ள தொகையில் 4000-ரூபாய்களைப் பெற்றுக் கும்பகோணத்துக்கு ரயில் ஏறிவிட்டார். நேராக ராமய்யரின் வீட்டிற்குச் சென்று, அவர் மனைவியிடம் 4000-ரூபாயையும் கொடுத்து விவாகச் செலவையும் வரதக்ஷிணைத் தொகையையும் திருப்பித் தந்துவிட்டதாகக் கூறி

விட்டு உடனே புறப்படத் தயாரானர். ராமய்யரின் மனைவி தன்னையே மறந்த மகிழ்ச்சியுடன் கொஞ்சம் பாலாவது சாப்பிட்டுவிட்டுப் போகவேண்டு மென்று கெஞ்சினள். ஜகநாதய்யரும் சந்தோஷமாய் பாலைப் பருகிவிட்டு ரயில் ஏறித் தஞ்சாவூருக்கு வந்துவிட்டார். வீட்டில் எவருக்கும் எதுவும் சொல்லவில்லை. தம்மையே அறியாத ஆநந்தத்தில் மூழ்கியிருந்தார்.

ஃ

பள்ளிக்கூடத்திற்குச் சென்றிருந்த ராமய்யர் மாலையில் வீட்டிற்குத் திரும்பியதும், தமது மனைவியால் யாவுமுணர்ந்து ஜகநாதய்யரிடம் அபரிமிதமான பிரேமை கொண்டவராகித் தமது மனைவி குமாரனுடும் அப்பொழுதே புறப்பட்டு ரயிலேறி இரவு 9-மணிக்குத் தஞ்சாவூர் வந்து ஜகநாதய்யரின் பாதங்களில் சாஷ்டாங்கமாக விழுந்து நமஸ்கரித்தார். ராமய்யர் இவ்வளவு துரிதமாய்த் தம்மிடம் வருவாரென்று ஜகநாதய்யர் நினைக்கவில்லையாதலின், ராமய்யரின் விசுவாசத்தைக் காணவும் பரமானந்தத் துடன் அவரைத் தூக்கித் தழுவிக்கொண்டு, "நான் ஒன்றும் பிரமாதமாகச் செய்துவிடவில்லை; எனக்கு எவ்வளவோ சொத்துக்களைக் கடவுள் கொடுத் திருந்தும் திருப்தியற்ற மனதோடு வரதக்ஷிணையாகப் பெருந் தொகையைக் கொள்ளை கொண்டேன்; தன் சொந்த முயற்சியினுல் வருந்திச் சேர்த்த ஒருவ ருடைய சொத்தை யபகரித்துக்கொண்டேனே; அது என் மனதிற்கு மிக்க வேதனையாகப்பட்டு, உங்களைப் பார்க்க வெட்கி, உங்கள் மனைவியிடம்



கொடுத்துவிட்டுத் திரும்பிவிட் டேன். என் தவறுதலைத் திருத் திக்கொண்டபின் என் மன துக்கு எவ்வளவோ சமாதானமா யும் திருப்தியாகவும் இருக்கி றது. இதற்காக நீங்கள் என்னை நமஸ்கரிக்கக்கூடாது. அது சரி யல்ல. இன்னும் எவ்வளவு தொகை வேண்டுமாயினும் என் மருமகளைக் கேட்டுப் பெற்றுக் கொள்ளுங்கள். என் சொத்துக் கள் யாவும் அவளுக்குத் தானே. அவள் தானே இந்த வீட்டின் லக்ஷ்மி" என்ருர். ராமய்யர் பரவச புருஷராய் வணங்கி நின்ருர்.

ஃ


இவ்வளவுக்கும் காரணம் தீபாவளியில் ராமய்யர் தனது மருமகனை 120-ரூபாய் செலவிட்டு மேன்மையாக உபசரித்ததே. அந்த ரூபாய் வேணு கோபாலன் தந்ததென்று ஜகநாதய்யர் அறியார். தனது மருமகனின் வேண்டுதற்படி ராமய்யரும் அதை வெளியிடவில்லை. ஏதோ ஒரு சம்பவத் திலிருந்து திடீரெனச் சிலரது மனம் தயாளமும் பெருந்தன்மையுமாய் மாறிவிடுகிறதென்பதற்கு ஜகநாதய்யர் ஒரு உதாரணமானர். வரதக்ஷிணைத் துன்பம் விலகினுல் எவ்வளவோ குடும்பங்கள் சந்தோஷத்துடன் செழிப்பா யிருக்க முடியும். தீனதயாளுவான மாமனுரையும், குணசீலனான பர்த்தா வையும் கொண்ட பாரிஜாதத்தின் பாக்கியம்தான் என்னே!



கணவன் வீட்டில் பெண்களின் கண்ணீர்.

எவ்வளவோ முயற்சிசெய்து தங்களின் குமாரனுக்கு விவாகம் நடத்தியபின் வீட்டின் லக்ஷ்மியாக வந்த மருமகளை ஹிம்ஸிப்பானேன்? அப்படிச் செய்வது பெரும் பாவமன்றோ? பெரும்பாலும் கணவன் வீட்டுக்கு வரும் பெண்கள் பத்து வயதுக்கு மேற்பட்டும், பதினைந்து பதினாறு வயதுக்குட்பட்டும் தங்களுடைய பெற்றோர்களையும் பந்து வர்க்கங்களையும் விட்டுவிட்டுப் புருஷர்களையே நம்பி வருவோராயிருக்கின்றனர். (ஹிம்ஸிக்கும் மாமியும்கூட இப்படி வந்தவள்தான்.)

ஐயோ! பாவம்! கணவனின் வீட்டுக்குச் சென்ற தங்களின் அருமைக் குழந்தைகளை உள்ளூரிலிருந்தால் நாள் கணக்கிலும், வெளியூரிலிருந்தால் மாதம் அல்லது வருஷக்கணக்கிலும் பார்க்க வேண்டுமென்று பெற்றோர் தங்களின் மருமகன் வீட்டிற்குச் செல்லும்போது, அவர்கள் அந்த வீட்டுப் பூனையின் உத்திரவுகூடப் பெற்றுக்கொண்டேதான் உள்ளே பிரவேசிக்க வேண்டுமாம். அப்படி வீட்டுக்குள் போனாலும், தம்முடைய பெண்ணைக் கண்டுபேசி அதின் கஷ்ட நிஷ்டூரங்களைக் கேட்போமென்றால், கரடி புலிகளாகிய மாமி நாத்தி முதலியவர்கள் அங்கே வந்து விடுவார்கள். வெகு நாட்களாகப் பிரிந்திருந்த தன் தாயைக் காணுகையில் பெண்ணுக்குத் தன் கஷ்டங்களைச் சொல்லி ஆற்றிக்கொள்ள விருப்பமுண்டாகுந்தானே. தன் தாயைப் பார்த்ததும் கண்ணீர் தோன்றும்தானே! பெண் தன் அன்னையிடம் ஏதாவது சொல்லிக்கொண்டிருக்கையில், என்ன பேசிவிடுவார்களோ, ஏது சொல்லி விடுவார்களோ என்று அங்குமிங்கும் திரிவதுபோல் சுவர் பக்கமாய் நின்று உற்றுக் கேட்பார்கள்.



இவர்கள் இவ்விதம் ஒட்டுக் கேட்பதைக் கண்டும், தங்களை வெகு ஜாக்கிரதையாகக் கவனிப்பதைக் கண்டும், தங்கள் பெண்ணைத் தேடி வந்த வர்கள் ஒன்றும் பேச முடியாமலும், தங்கள் குழந்தையின் துக்க முகத்தைப் பார்க்கமாட்டாமலும், தாங்கள் வீட்டிலிருந்து வரும்பொழுது தங்கள் அரு மைக் குழந்தையை எத்தனை ஸந்தோஷத்துடன் பார்க்க வேண்டுமென்று



வந்தார்களோ அத்தனைக் கத்தனை மனவருத்தத்தோடு "ஏண்டா வந்தோம், வராம லிருந்தால் இந்த அவஸ்தை கள் எல்லாம் கண்ணில் படாமலிருக்குமே" என நொந்துகொண்டு சீக்கிரமே புறப்பட்டுப் போய்விடும்படி நேரிடுகிறது. தன் பெற்றோர் கள் ஊருக்குச் செல்வதைக் கண்டு பெண் அழுத கண் ணீருடன் ஏங்கியவளாய் வீட்டின் வாயிற்படியில் நிற்கிறாள். அவர்களும் வண்டியேறிச் சென்றுவிடுகின்றனர்.

ஃ

இத்தனை லக்ஷணத்தோடு தாய்தகப்பனால் பார்க்கப்பட்ட பெண்ணை, அவர்கள் புறப்பட்டுச் சென்றபிறகு வீட்டிலுள்ள மாமி நாத்திகளான கொடும் புலிகள் சூழ்ந்து கொள்ளுகிறார்கள். மாமி பெண்ணின் முகத்திலே குத்தி இடிக்கிறாள். நாத்தியோ தன் கைகளை நீட்டி "ஏண்டி, இந்த வீட்டில் வாழ வந்தாயா, உன் தாய் வீட்டுக்கு ஓடவந்தாயா? என்னைப்பற்றி என் னென்ன சொன்னாயடி" என்று மனம் போனபடி வைகிறாள். "உன் தாய் தகப்பன் வந்தார்களே! என்ன நிறைத்துவிட்டுப் போனார்கள்? அவர்க ளோடு குசுகுசுவென்று இரவும் பகலுமாகப் பேசி னாயே, பிசுபிசுவென்று கண்ணில் நீரை வருவித் துக்கொண்டாயே, அவர் கள் உன் கஷ்டத்தைத் தீர்த்தார்களா? அப்படி உனக்குக் கஷ்டமாயிருந் தால் அவர்கள் வீட்டி லேயே இருக்கிறதுதானே எங்கள் பிள்ளைக்கு வேறு பெண் கிடைக்காதா? எங்



கள் பிள்ளை என்ன துரைபோலிருக்கிறான்; காசுக்கு ஒன்றும், சொசுருக்கு இரண்டும் கிடைப்பார்கள். எங்கள் பேரில் வருவார் போவாரிடத்திலெல்லாம் தூஷணைகளைச் சொல்லிக்கொண்டு எங்கள் மானத்தைக் கெடுத்தபடி நீ இங்கே யிருக்கவேண்டாம்'' என்று இவ்வண்ணம் பலவாறு வாயில் வந்தபடி பேசத் தொடங்குகிறார்கள். மாமியார் பெண்ணின் கழுத்தைப் பிடித்துத் தள்ளிவிட, நாத்தி முகத்தில் குத்துகிறாள்.

ஃ


அதைக் கேட்டு, அந்தப் பேதைப் பெண் பயத்தோடும் விநயத்தோடும், ''நான் அப்படிக்கெல்லாம் அவர்களிடத்தில் ஒன்றும் சொல்லவில்லையே! அவர்கள் என்னைப் பார்த்து நாளாச்சுது; 'சுகமா யிருக்கிறாயா?' யென்று கேட்டார்கள்; நன்றாயிருக்கிறேனென்று சொன்னேனே யொழிய, உங்களுக்கு இத்தனை கோபம் வரும்படியான பேச்சு ஒன்றும் சொல்லவில்லை அம்மா'' என்று கூறுகிறாள்.

ஃ

தாங்கள் கேட்டதற்கு உடனே பதில் சொல்லிவிட்டாளே யென்று அவர்களுக்குக் கோபம் பொங்கிக்கொள்கிறது. 'என்னடி உனக்கு இத்தனை கொழுப்பு; நான் ஒன்று சொன்னால், நீ பத்து சொல்கிறாயோ? பெரியோரென்கிற மரியாதையே யில்லையே! உன் புருஷன் உன் கைவசமாயிருக்கிறானென்று இப்படிக்கெல்லாம் பேசுகிறாயோ? ''கொண்டவன் பலமிருந்தால் குப்பையேறிச் சண்டை செய்யலாம்'' என்று பார்க்கிறாய்போலும். அவன் வீட்டுக்கு வரட்டும்; உன்னை என்ன செய்யப்போகிறேமோ பார்க்கப் போகிறாய்'' என்று அந்த அறியாப் பெண்ணைப் பயமுறுத்தி ஆரவாரிக்கிறார்கள்.

ஃ

மகன் வீட்டுக்கு வந்தவுடன் முக்காடிட்டுப் படுத்துக்கொண்டு ''அப்பா மகனே, உன் மனைவி தகல்பாஜியாயிருக்கிறாள்; அவளைப் பார்க்க வந்த உன் மாமியார் முதலானவர்கள் அவளோடு விடியவிடியப் பேசி ஏதேதோ சொல்லிக் கொடுத்து விட்டுப் போனார்கள். எனக்கு உட்பட்டு நடக்க வேண்டா மென்றார்களாம். தனிக் குடித்தனமாகப் போய்விடு என்றார்களாம். அதை யெல்லாம் கேட்டுக் கொண்டு அவள் தை தை என்று குதிப்பதை நான் என்னவென்று சொல்வேன் அப்பா. இந்த வீட்டில் எனக்கு ஒரு மரியாதையு மில்லையே. என்னை மதிப்பாரில்லையே! வருகிறவர்களெல்லாம் அவளுக்கே



பெருமை கொடுத்துப் பேசுகிறார்கள். அரை நிமிஷமும் வீட்டிலிருக்கவும் சகிக்கவும் முடியவில்லை அப்பா" என்று இல்லாத வார்த்தைகளை யெல்லாம் சொல்லி அவனுக்குக் கோபத்தை மூட்டுகிறாள்.



அவனோ இவற்றை யெல்லாம் மெய்யென்றெண்ணி, தன்னையே தஞ்சமாக நம்பி வந்திருக்கிற மனைவியைத் தாம்தூம் என்று அடிப்பதோ, கண்டபடி திட்டுவதோ செய்கிறான். தாயின் வார்த்தையால் தூண்டப்பட்டுத் தன் மனைவியின் நீண்ட கூந்தலைப் பிடித்துத் தூணிற் கட்டி அடித்த புண்ணிய புருஷர்களும் இருக்கிறார்கள். இந்தப் புண்ணியசீலர்கள் கடைசியில் தெருத்தெருவாய்ச் சோற்றுக்கு அலைந்து மிருக்கிறார்கள். இது நேரிற்கண்ட சங்கதி.

ஃ

ஒருவர் புத்திரப்பேறின்றி தனது சொத்துக்கள் யாவற்றையும் தம் குமார்த்தியின் பேருக்கு எழுதிவைத்து சமீப பந்துவைக் கார்டியனாக சொத்துகளைப் பாதுகாப்பவராய் நியமித்துவிட்டுக் காலஞ் சென்றார். சமீப பந்துவோ அப்பெண்ணை வேறிடத்தில் கொடுத்தால் பெண்ணின் சொத்துக்கள் தன் கைவிட்டுப் போய்விடுமென்று தன் குமாரனுக்கே விவாகம் செய்துவிட்டார். விவாகமானதும் பெண்ணின் பேரால் பாங்கியிலிருந்த பணத்தை வாங்குவதற்குப் பெண்ணைக் கையெழுத்திடும்படி கூற, பெண் மாமனாரது மோசத்தை யறிந்து மறுத்துவிட்டாள். பெண்ணுக்குச் சொந்த மாமியில்லை. தன் கணவனின் மாற்றாந்தாய்க்கு நகைகள் செய்வதற்காகவே பணம் வாங்குவதற்கு நிர்பந்தித்ததால் அவள் மறுத்தாள். கணவனுக்கு அவள் மறுத்தது நியாயமாகப் பட்டபோதிலும் தன் தந்தையை எதிர்த்துக்கொள்ள மனமற்றுத் திகைத்தான். மாமனாரோ அப்பெண்ணை ஒரு அறையில் அடைத்துப் பலகணியின் வழியாக சாதம் குழம்பு கொடுக்க ஏற்பாடு செய்து கதவுக்குப் பெரிய பூட்டும் இட்டார். ஃ

பெண் நன்கு படித்தவளாதலின், வேலைக்காரியை வசம் செய்துகொண்டு ஒரு கடிதம் எழுதிப் போலீஸாருக்கு அனுப்பிவிட்டாள். ஜன்னல் வழியாக சாதம் கொடுக்கிற சமயத்தில் போலீஸாரும் அங்கு வந்து மாமனாரைக் கைது செய்தனர். மாமனாருக்கும் தனது மருமகள் இங்கிலீஷ்

கௌரவத்திற்காக ரயில்வேஸ்டேஷனிலிருந்தும் ஜட்காவண்டி வைத்துக்கொண்டு வந்தும், தான் இறங்கிய வீட்டார் வண்டியைப் பார்க்கவில்லையே, தான் நடந்து வந்ததாக நினைத்து விட்டார்களோ என்று ஒருவர் ஏங்கினராம்!

கோணல் எழுத்து அறிந்த வீரப்பெண் என்று தெரிந்துவிடவே, பிறகு சமரசமானர். பெண்ணும் பாங்கியிலிருந்து 500-ரூபாய் மட்டும் வாங்கித் தருவதாகக் கூற, மாமனாரும் சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டார். அப்பெண்ணின் கணவன் தனக்கும் ஒரு ஆயிரம் ரூபாய் வேண்டுமென, எல்லாவற்றையும் நீங்களே பெற்றுக் கொள்ளுங்கள்; எல்லாம் உங்கள் குழந்தைகளுக்குத்தானே என்று புன்னகை புரிந்தாள்.



ஃ

கணவன் தன் பிரீதியை மனைவியின்பேரில் வைத்து, அவளும் தன்னிடத்தில் பய பக்தி விசுவாசத்தோடு இருக்கும்படி செய்யவேண்டும். அவளிடத்தில் ஏதாவது தப்பிதம் தோன்றிஞல், தன் சுற்றத்தார், வீட்டு வேலைக்காரர்கள் எவரும் அறியாதபடி தானே ரகசியத்தில் சிக்ஷித்து நல்வழிப் படுத்த வேண்டும். ஏனெனில், "கொண்டவன் சீறிஞல் கண்டவனுக்கெல்லாம் இளக்காரம்" என்பார்கள். புருஷனே அவளை 'இளக்காரம்' செய்து கேவலப்படுத்திஞல், அவன் சுற்றத்தார் அவளை இன்னும் இழிவுபடுத்திப் பொசுக்கிவிடுவார்கள். தன்னுடைய பந்துக்கள் தன் மனைவியினிடத்தில் விசுவாசமாகவும் மதிப்பாகவும் இருக்கும்படியாகவும், அவளும் தன் சுற்றத்தாரிடத்தில் தகுந்த மரியாதையுடன் இருக்கும்படியாகவும் செய்யவேண்டும். தன் மனைவியை மற்றவர் கௌரவிப்பது தன்னைக் கௌரவிப்பதாகும் என்பதைப் புத்திமான்கள் அறிந்து, தமது மனைவியை மேன்மைப்படுத்தக்கடவர்.

தன்னோடு சிறுவனாய் முப்பது வருஷங்கட்கு முன்பு பழகிய ஒருவன் நரைத்த தலையுடன் வந்து தான் இன்னானென்று தெரிவிக்கிறான். அவன் பழைய உருவமும் ஞாபகத்திலில்லை. அவன் பேச்சுகளாலேயே நம்ப வேண்டி வருகிறது. அப்பொழுது தக்க நிலையிலிருந்தவன் இப்பொழுதோ திக்கற்று நிற்கிறான். விவாகமும் இல்லை. இருக்க வீடுமில்லை. பத்து சிறுவர்கள் ஒரு பக்கம் ஒன்றாய் விளையாடினும், அவரவர்களின் தலைவிதி வெவ்வேறாயுளது.

ஒருவர் தனது குமாரனுக்குச் சிறு வயதிலிருந்தே தமது பெரிய உத்தியோகத்தின் வேலைகள் அனைத்தையும் கற்றுக்கொடுத்து, அவனே யாவற்றையும் நிர்வகித்துக்கொள்ளும்படியான பயிற்சியை உண்டு பண்ணிவிட்டார். பிறகு தன் குமாரனுக்கு உத்தியோகத்தில் நுழைந்துகொள்ள ஒரு சிறு சந்து தேடிக்கொடுத்து, பிறகு படிப்படியாக சிபார்சுகளின் மூலம் தன் உத்தியோக பதவியையே தன் குமாரன் வகிக்கும்படி செய்துவிட்டார். இது காரியத்திலேயே கண்ணாக இருப்பவரின் சாமர்த்திய வேலை.

ரோஜா அத்தரின் உயர்வு.

ரோஜா மலரை ஸ்தல கமல மென்னலாம். அம்மலரினின்றும் திவ்ய வாஸனையுள்ள தைலம் ஒன்று எடுக்கப்படுகின்றது. ரோஜாப் பூவை எங்கும் விளைவிக்கலாம். எனினும், நமது தேசத்திற்கு வடமேற்கிலுள்ள பாரஸீகம் முதலிய இரண்டொரு தேசங்களில் மட்டுமே தைலம் எடுப்பதற்கேற்ற விதமாய்ச் செழித்து வளருகின்றது. இம்மலரிலிருந்து தைலம் எடுக்கவேண்டுமானால், அரும்பாடு பெரும்பாடு படவேண்டும். ஒரு ரூபாய் எடையுள்ள சுத்தமான ரோஜா அத்தர் சேகரிப்பதற்கு அதமபக்ஷம் இருபதினாயிரம் புஷ்பம் வேண்டும். அவ்வளவு தைலம் நூறு ரூபாய் விலை பெறும்.

ஃ

ஆயிரம் ஸத்தியஞ் செய்து அலட்டும் நாடோடி அத்தர் வியாபாரிகளிடம் குப்பி குப்பியாய் நயமாக வாங்கி வைத்துக்கொண்டு ஸ்வய அத்தர் என்று சொல்லுவதெல்லாம் வீணேயாம். அவ்வாறான அத்தரில் ஏதேனுஞ் சிறிதளவு ஸ்வயமான அத்தர் ஒருகால் வாஸனைக்கு மட்டும் கலந்திருக்குமேயல்லாது வேறில்லை. ஏனெனில், ஒரு ரூபாய் எடையுள்ள ஸ்வயம் ரோஜா அத்தர் நூறு ரூபாய் விலையுள்ளதென்றால், குப்பி குப்பியாய்ச் சொற்ப விலைக்குக் கொடுக்கப்படுகிற ரோஜா அத்தரின் பெருமையை யென்னென்று சொல்லலாம்! சந்தனக் கட்டையிலிருந்து இறக்கப்படுகின்ற எண்ணெயோடு ஒரு சிறு ஸ்வயம் அத்தரை விட்டுக் கலந்துகொண்டு அதை முதற்றரமான ரோஜா அத்தரென்று ஜனங்களை வர்த்தகர் வஞ்சிக்கிறார்களேயன்றி, அது ஒரு பொழுதும் சுத்தமான அத்தரேயன்று; ஒவ்வோர் சமயங்களில் வாஸனையுள்ள வேறு விதமான எண்ணெயோடு இப்படிக் கலப்பதுமுண்டு. ஸ்வயமான அத்தருக்குப் பேர்போன இடமாகிய காஸிபூர் முதலான இடங்களிலும் இவ்விதமான பித்தலாட்டம் நடக்கிறதென்றால், மற்ற விடங்களில் கேட்பானேன்?

ஃ

ரோஜா புஷ்பம் புஷ்பிப்பதற்கேற்ற காலம் சரியாயிராவிட்டால், எத்தனை ஆயிரம் ரோஜாமலர் இருந்தாலும் இரண்டு கிரேன்ஸ் எடை கொண்ட அத்தர்கூடக் கிடைப்பதரிது. மத்தியானத்திற்கு மேல் ரோஜாச் செடிகளிலுள்ள சிவந்த மொட்டுகளைக் கையாற் கொய்து, அதற்கு இருமடங்கான எடை ஜலத்தை ஓர் களிமண் பாண்டத்திலே பெய்து, அத்துடன் இம்மொட்டுகளைக் கலந்து, நன்றாய்க் குலுக்கிக் கலக்கிவிட்டால், அத்தண்ணீர் இரவில் தண்ணென்றாகி, விடிந்து பார்க்கையில், பாலில் ஆடை புடைப்பது போல் மேலாக வெகு நுட்பமாய் ஏடு படிந்தாற்போலிருக்கும். இந்த ஏட்டை வெகு லாகவமாய்க் கையிலோர் இறகைப் பிடித்துக்கொண்டு அதனால் எடுத்துக் குப்பியில் விடவேண்டும். இதுதான் ரோஜா அத்தர் எடுக்கும் முறை. இவ்வாறு ஒரு நாளல்ல; பலநாள் பாடுபடவேண்டும்.

(தொடர்ச்சி 550-ம் பக்கம் பார்க்க)

சென்றமாதம்

சிங்காதனமும் மணிமுடியும்.

சிங்களத்தீவில் "கண்டி" என்னும் நகரம் பூர்வ அரசர்களுக்கு இராஜதானியாகவுள்ளது. கண்டியைச் சுற்றிலும் உயர்ந்த மலைகள் அரணாக அமைந்து நிற்கின்றன. "3-ஆம் விக்கிரமவாகு" என்னும் சிங்கள அரசர் பழய ராஜதானியாகிய கம்பளை (Gampola) என்னும் ராஜதானியை விட்டு கி. பி. 1370-ஆம் ஆண்டில் கண்டியை இராஜதானியாக்கினார். பிறகு சிலகாலத்தில் அன்னியர்களின் உபாதையால் இராஜதானி அந்த இடத்தைவிட்டு மாறிற்று. திரும்பவும் 1592-ஆம் வருடம் "விமல தர்ம ராஜன்" என்பவர் கண்டியையே இராஜதானியாக மாற்றினார். அவர் வமிசத்தில் 1815-ஆம் ஆண்டில் ஆண்டுகொண்டிருந்த "ஸ்ரீ விக்ரமராஜ சிங்கன்" என்பவரை ஆங்கிலேயர் ஜெயித்து நாட்டைக் கைப்பற்றினர். அப்போது இலக்ஷக்கணக்கான விலை மதிப்புள்ள அவருடைய அரியணையையும் மணிமுடியையுங் கைப்பற்றி இங்கிலாந்துக்கு அனுப்பினார்கள். ஆங்கில அரசாங்கத்தார் அவைகளை வின்ஸர் மாளிகையில் வைத்து இதுவரையில் காப்பாற்றிவந்தனர். அவைகளைத் திருப்பித்தர வேண்டுமென்று சிலோன்வாசிகள் சிலகாலமாகக் கிளர்ச்சி செய்துவந்தனர். அதற்கு நமது மன்னர்பிரான் மனமுவந்து அவ்விரு பெருநிதிகளையும் இளவரசர் குளோசெஸ்டர் கோமகன்" மூலமாக அனுப்பிவைத்தார். சென்ற மாதம் 24-ஆம் தேதி இளவரசர் அவைகளைக் கொண்டுவந்து கண்டி அரண்மனையில் வைத்தார். அப்போது அவரை வரவேற்க பொதுஜனத் தலைவர்களும், சிங்களத் தீவின் கவர்னரும் அங்கு வந்திருந்தனர். இக்காக்ஷியைக் காண்பதற்கு சிங்களத்தீவின் பல பாகங்களிலிருந்து சுமார் 30-ஆயிரம் ஜனங்களுக்குமேல் வந்து கூடியிருந்தனர்.

(549-ம் பக்கம் தொடர்ச்சி)

இப்படிப் பல நாளளவுஞ் செய்து கொண்டு வந்தாலும், அத்தண்ணீரில் அத்தரின் அதி நுட்பமான திவலைகள் எடுக்க முடியாமல் தங்கிப்போம். ஒரு பெருங் கிணற்றிலே இரண்டொரு திவலை நல்லெண்ணெயை விட்டால், அது கிணறெங்கும் பரந்து நிற்பதிலும் பதின்மடங்கு ரோஜா அத்தர் தண்ணீரில் கலந்தமைந்திருக்கும். அந்தத் தண்ணிருக்குத்தான் "பன்னீர்" என்று பெயர். லாவந்தர் மல்லிகை முதலிய வாஸனை ஜலமும் இப்படிப்பட்டவை தான். ரோஜா அத்தர் ஸ்மர்ணு, கான்ஸ்டாண்டிநோபில், காஸிபூர் இந்நகரங்களிலிருந்தும், எலுமிச்சம் எண்ணெ ஸிஸிலி, போர்த்துகல் இவ்விடங்களிலிருந்தும், லவங்க எண்ணெ மலாயத் தீவுகளிலிருந்தும் விசேஷமாய் மற்றத் தேசங்களுக்கு அனுப்பப்படுகின்றன. நன்றாய் ஆராய்ந்து பார்க்குமளவில், ரோஜா அத்தரைப்போலச் சிறந்த அத்தர் ஒன்றுமில்லை.

நாடகக்கலையின் நாசம்.

நாடகமென்பது சமூகத்தில் கல்வி ஞானமில்லாத ஜனங்களி னிடையே சன்மார்க்கத்தைப் போதிப்பதற்கு ஓர் சிறந்த கலை என்று பெரியோர்கள் மதித்திருந்தனர். அந்நாடகக் கலையோ இப்பொழுது மனிதர் அறிவைக் குருடாக்கி, பாழ் நரகத்திற்கு ஆளாக்கிக்கொண்டு வருகிறது. புது நாகரீகப் பயாஸ்கோப் காக்ஷிகள் ஜனங்களிடையே பாதகச் செயலுக்குரிய பாடம் கற்பிப்பதாயிருக்கிறது. இதைக் குறித்து "பிரிட்டிஷ் கவியாசுரான திரு. ஜான்மாஸ் பீல்டு சிலோனில் சென்ற செப்டம்பர் மாதம் 22-ம் தேதியில் ஓர் பத்திரிகை நிருபரிடம் கூறியதை இங்கு குறிப்பிடுவோம்:—நாடகங்கள் மூலம் மேனாட்டினரிடையே உயர்ந்த தத்துவங்கள் பரப்பப்பட்டு வந்தகாலம் முன்னரே மாறிவிட்டது. நாடகங்கள் இக்காலத்தில் ஆனந்தம் அனுபவிக்கவே ஏற்பட்டுள்ளன. இவ்வித ஸ்திதிக்கு வந்திருப்பது துக்கிக்கக் கூடியதே. வர்த்தகர்கள் லாபத்தைக் கருதி நாடக மேடைகளை தமாஷ் மண்டபங்களாகச் செய்துவிட்டனர். அங்கு மனதிற்கு வந்தவாறு களிப்பூட்டக் கூடிய ஆட்டங்கள் நடைபெறுகின்றது. ஆனல் நாடகமேடையின் முக்கிய நோக்கம் அதுவல்ல" என்று சொல்லியிருக்கின்றார். இந்த ஆபாச நாடகக் கொள்கையைக் கண்டிப்பதற்கு சென்னை கத்தோலிக்க சமூகத்தினுதரவில் 4—10—34 மாலையில் விக்டோரியா பப்ளிக் ஹாலில் ஒரு பொதுக்கூட்டம் கூட்டப்பட்டது. அதற்கு சென்னை வாசிகளில் பல பிரபலஸ்தர்கள் வந்திருந்தனர். இதற்கு மாஜி செஷன் ஜட்ஜ் திவான்பகதூர் பி. சி. லோபோ தலைமை வகித்தார். திவான் பஹதூர் ஏ. ராமசாமி முதலியார் பேசியபோது, மகா ஆபாசமான படங்கள் பயாஸ்கோப்பு காக்ஷிகளில் காட்டப்படுகிறதென்றும், குடும்ப ஸ்திரீகள் அப்படங்களை பார்க்க யோக்கியதையே இல்லை என்றும், இதனுல் சமூக வாழ்க்கை வெகுவாக சீர் குலைந்து வருகிறதென்றும், அத்தகைய படக்காக்ஷிகளைத் தணிக்கைசெய்து விலக்கிவிடுவதற்கு பிலிம் தணிக்கை செய்யும் சென்னை அதிகாரிகளுக்கு தகுந்த சுதந்தரம் அளிக்கவேண்டுமென்றும் வெகுவிரிவாகப் பேசினர். பிறகு, ஸ்ரீ சத்தியமூர்த்தி "சென்னை நகரில் காட்டப்படும் பிலிம்களின் தன்மையை உயர்த்தவும் அதன் ஆபாசங்களை ஒழிக்கவும் வேண்டியவைகளைச் செய்யவேண்டுமென்று சர்க்கார் அதிகாரிகளையும், சென்னை பிலிம் சென்ஸார் போர்டாரையும், கல்வி ஸ்தாபனங்களையும் இக் கூட்டம் கேட்டுக்கொள்ளுகிறது." என்ற தீர்மானத்தைப் பிரேரேபித்து பின் வருமாறு பேசினர். "விவாகம், குடும்ப வாழ்க்கை இவைகளைப்பற்றி இத் தேசத்திலே இருந்துவரும் ஓர் மதிப்பையும், பொறுப்பையும் படக்காக்ஷிகள் பாழ்படுத்துவதாக விருக்கின்றன. கற்பென்பது அவ்வளவு முக்கியமானதல்ல வென்று சமூகத்தில் உணர்ச்சியை யுண்டாக்கக்கூடிய முறையில் ஆபாசமான படங்கள் காட்டப்படுகின்றன. அதனேடு ஆண், பெண்கள் ஓர் கட்டுதிட்ட மின்றி கலந்துகொள்வது மேலாகுமென்ற உணர்ச்சியும் சமூகத்தில் இப் படக்காக்ஷி உண்டாக்குவதாயு மிருக்கின்றது."

திவான்பகதூர் ஏ. அப்பாதுரை பிள்ளை, பக்ஷீர் அகமத், ஸ்ரீஸ கேரியஸ், எச். துரைராஜ், முதலியவர்களும் படக் காக்ஷியால் வாழ்க்கையி லேற்படும் சீர்கேட்டைக் குறித்துப் பேசியபின் சத்தியமூர்த்தியால் கொண்டுவரப்பட்ட தீர்மானம் ஏகமனதாக நிறைவேறப்பெற்று கூட்டம் கலைந்தது.

இத்தகைய ஆபாசமாசன படங்களின் காக்ஷிகளை இக்காலத்திய அறிவிலிகள் பரிஷ்கரிக்காமல் விரும்பிப் பார்க்கச் செல்வதால் பிலிம் கம்பெனிகள் அதிகம் ஏற்பட்டு வருகின்றன. கம்பெனிகளின் போட்டியால் நடிகர்களுக்கும் அதிகம் சம்பளம் ஏற்பட்டுவிட்டது. மேனாட்டில் சிறந்த நடிகர்களுக்கு வாரத்தில் கொடுக்கப்படும் சம்பளவிகிதத்தை இங்கு காட்டுவோம்.

பெயர்.	பவுன்.	பெயர்.	பவுன்.
கிரிட்டா கார்போ	1800.	வாலஸ் பீயரி	1000.
வில்ரோஜர்ஸ்	1500.	வில்லியம் பவல்	900.
மாரிஸ் ஷிவாலியர்	1500.	ஜான் கிரோபோர்டு	800.
மிஸ் கான்ஸ்டன்ஸ் பென்னெட்	1400.	ஜானட் கேனர்.	750.
ஜான் பாரிமோர்	1300.	எட்வர்ட் ராபின்சன்	600.
ரிசர்ட் பார்தல்மஸ்	1200.	ஜேம்ஸ் காக்னி	560.
நார்மா ஷியாரர்	1200.	காரி உப்பர்	260.
ஹான் ஹார்டிங்	1200.	வாரன் வில்லியம்ஸ்	250.

இவ்வளவு பெருந்தொகையான சம்பளம் பெரிய அரசாங்க உத்யோகஸ்தர்களுக்கும் கிடைப்பது அரிதே. புத்தியில்லாதவர்களுக்கு கஷ்டமில்லாத வழியில் அதிக பணம் கிடைத்தால் அது சமூகத்தில் அதிக துன்பத்தையே விளைவிக்குமென்பது உறுதி.

சினிமா பகுதி:—லண்டனில் வருடத்தில் 1 கோடியே 90-லக்ஷம்பேர் சினிமா படம் பார்க்கப்போகிறார்களாம். அதனால் சென்ற வருடம் லண்டன் சினிமாக் கம்பெனிகளுக்கு 40200000 பவுன் லாபம் கிடைத்திருக்கிறதாம்.

ஹிட்டலரின் இந்திய நாகரீகம்:—நமது நாட்டில் சுமார் பதினாயிர வருஷங்களுக்குமுன் ஜீவகாருண்யத்தை மேற்கொண்ட சமணமதந்தோன்றிற்று. அதன் பயனாக மாமிச உணவு மேன்மை யானதா? மரக்கறி உணவு மேன்மையானதா என்று ஆராயப் புகுந்து தாவரவர்க்கத்தின்று ஜீவிக்கும் யானை, குதிரை முதலிய மிருகங்களின் பலத்திற்கும் மாமிச உணவைத் தின்று ஜீவிக்கும் மிருகங்களின் பலத்திற்கும் குணத்திற்குமுள்ள வேறுபாட்டை உணர்ந்து மனிதருக்கு தாவரவர்க்க உணவே சிறந்ததென்று ஸ்தாபிதஞ் செய்தனர். மாமிசாதிபலிகளால் ஜீவித்து வந்தவர்கள் அந்தக் கொள்கையை இன்றுந் தலையெடுக்க வொட்டாமல் தடுத்து வருகின்றனர். இன்றைக்கும் 100-க்கு 95-பேர் மாமிசதாரிகளாகவே யிருக்கின்றனர். இப்பொழுது ஜர்மன் தேசத்து தேசாதிபதியாக விருக்கும் 'ஹிட்லர்' என்பவர் மாமிச உணவைத் தள்ளி மரக்கறி பதார்த்தத்தைச் சாப்பிட்டுக்கொண்டு புகை குடித்தல், மது முதலியவற்றை விலக்கி யிருக்கின்றாரென்று சொல்லக் கேட்பது மகா ஆச்சரியமாகும். ஒரு பத்திரிகையின் நிருபர் ஹிட்டலரின் தமக்கை ஸ்ரீமதி எஜ்னெஸ் என்பவரைக்கண்டு ஹிட்டலரின் வரலாற்றைக் கேட்டபொழுது அந்த அம்மை ஹிட்டலரின் வாழ்க்கையைக் குறித்துச் சொல்லிய பல விஷயங்களுக்கு இடையே கீழ்வரும் விஷயங்களையுஞ் சொல்லியிருக்கிறார், "கடந்த 2-வருஷங்களுக்கு முன்னர் அவன்

மது மாமிசங்கள் உட்கொள்வதை விட்டு விட்டான். குடியாலும் புகையிலையாலும சரீரத்தில் விஷத்தன்மை உண்டாகிறதென்பது அவன் நோக்கம். மாமிச போஜனம் செய்து வந்த காலத்தில் அவன் நோயால் பல தடவை வாதைப்படுவதுண்டு. ஆனல், இப்போது மரக்கறி போஜனம் ஆரம்பித்தவுடன் அவனுக்கு எத்தகைய நோயும் வரக்காணும். முன்னம் இருந்ததைவிட இப்பொழுது நல்ல தேகசுகத்தோடே இருந்து வருகிறுன்" என்று சொல்லியிருக்கின்றுர். ஹிட்லர் கலியாணமாகாதவரென்பதும் தமக்கையின் பராமரிப்பில் இருக்கின்றுரென்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. மேனுட்டில், அமெரிக்கா. ஐரோப்பா முதலிய கண்டங்களில் பரம்பரையாக மாமிசத்தையும் மதுவையும் அருந்திவந்த வெள்ளையர்கள் விவேகானந்த சுவாமிகளால் அறிவு கொளுத்தப்பட்ட பின்னர் பிரம்ம சமாஜம், தியசாபிக்கல் சபை முதலியவைகளின் வாய்மையுரைகளைக் கேட்டு மது மாமிசாதி உணவைத் தள்ளி தானிய தவசங்களை உண்டுவாழ மனம் திரும்பியிருக்கும் இந்நாளில் நமது நாட்டில் பரம்பரை சைவமாயிருந்துவந்த மேற்குலத்து மக்கள் மூடமதியால் மேனுட்டு நாகரீகமே பெருமை என நினைத்து, மாமிசம் உண்பதும், மதுவருந்தல் புகை குடித்தல் முதலியதுமான கெட்ட வழிகளில் இறங்கி யிருக்கின்றனர்.

உலக விபரீத நிலை.

வட கல்கத்தாவிலுள்ள வசந்தி ஆலையை ஆரம்பித்து வைத்த போது கவியரசர் ரவீந்திரநாத தாகூர் செய்த பிரசங்கத்தில் பின்வருமாறு குறிப்பிட்டார்:—கலா அபிவிருத்திக்கான சௌகரியங்களை பூர்வம் செல்வ வந்தர்களே அளிக்க முடிந்தது. ஆனல் இன்று தனி ஹோதாவிலுள்ள ஒரு சிலரிடமே செல்வம் இருந்து வருகின்றது. அவர்கள் தம் பேராசையினல், தம் லாபத்திலேயே கண்ணூங் கருத்துமா யிருக்கின்றனரே யொழிய சமூகத்தின் க்ஷேமத்தை சுகாதாரத்தை, வனப்பைக் குறித்துச் சிறிதும் அக்கரை கொள்ளுவதில்லை. அதனல் தான் உலக முழுதும் மகா விபரீதமான நிலைமைக்கு உட்படவேண்டி யிருக்கின்றது. இந்த ஆலையின் சொந்தக்காரர்கள் தம் முயற்சியால் லக்ஷ்மிதேவிக்கு ஓர் பலி பீடம் அமைத்து கல்வியின்மை, சுகவீனம், பயங்கரமான மந்த வாழ்க்கை ஆகியவற்றைப் பலியிட முயற்சிப்பார்களென நம்புகிறேன்.

கட்டாய விவாகம்.

ஹிட்லர் கலியாண மாகாதவராயிருந்தும் அவர் தன் தேசத்திலுள்ள மக்களில்கலியாண மாகாதவர்களை கண்டிப்பாய்கலியாணஞ் செய்துகொண்டே ஆகவேண்டுமென்றும் அப்படிக் கில்லாதவர்களுக்கு அரசாங்கத்திலும், மற்ற இடங்களிலும் உத்தியோகம் முதலியவைகள் கண்டிப்பாய்க் கொடுக்கக்கூடாதென்றும் உத்தரவிட்டதோடும் குறிப்பிட்ட வயதுள்ளவர்கள் குறித்தகாலத்திற்குள் விவாகஞ் செய்துக்கொள்ளவேண்டுமென்றும், விவாகம் செய்துகொள்ளாதவர்களுக்கு அபராதம் விதிக்கப்படுமென்றும் கட்டளையிட்டுவிட்டார். இதனல் இலக்ஷக்கணக்கான ஆண்களும் பெண்களும் அதிக கஷ்டத்திற்குளளாகவேண்டி யிருந்தது. இதைக் குறித்து ஹிட்லர் சொன்னதாவது:—"பொறுப்பற்ற குடும்ப பாரமற்ற இளைஞர்களுக்கு உத்தியோகங்

கிடைப்பதால்தான் (அதாவது அவர்களுக்கு வேண்டிய செலவுகளுக்குப் பணங்கள் கிடைப்பதால்தான்) சமூகத்தில் இழிவான பலவித தொந்திரவுகள் ஏற்படுகின்றன" என்றார்.

ஏழைகளுக்கு உதவி:—சென்னை நகர சபையும், கல்கத்தா நகர சபையும் தாழ்த்தப்பட்ட ஏழைகளுக்கு வீட்டு வசதி செய்துகொடுக்கத் திட்டம் போட்டிருக்கின்றனர். இது ஒரு சந்தோஷிக்கத்தக்க செய்தியே.

நூதன ஆராய்ச்சி:—மரங்களை உணவுப் பொருளாக மாற்றும் முறையை ஜெர்மன் டாக்டர் பிரேம்ரில் பேர்ஸியல் என்பவர்கண்டு பிடித்திருக்கிறார். இவர் இதற்காக 10-வருடம் உழைத்தாராம். மரங்களை (குளுகோஸ்) என்னும் சர்க்கரைப் பொருளாகவாவது, சாராய வஸ்துவாகவாவது மாற்றி உணவுப் பொருள் தயாரிக்கலாமாம். இதனால் எத்தகைய பஞ்சம் வந்தாலும், பயிர்களைப் பூச்சி அழித்தாலும், வெள்ளச் சேதம் ஏற்பட்டாலும் பயப்பட தேவைஇல்லையாம்.

இயந்திர மனிதன்:—அமெரிக்காவின் ஐக்கிய நாட்டைச் சேர்ந்த சிகாகோ நகரத்தில் பல்பொருட்காக்ஷியொன்று நடத்தப்பட்டது. அது அத்தேசத்தில் செய்யப்படும் பலவிதமான இயந்திரங்களும் பொருட்காக்ஷியில் ஒருபுறம் வைக்கப்பட்டிருந்தது. அவைகளுள் இஞ்சினியர்களின் அதிசய புத்தியால் ஒரு இயந்திர மனிதனை நிருமாணித்து அங்கு வைத்திருந்தனர். அவ்வியந்திர மனிதன் தானாக சில வார்த்தைகள் பேசுவதும். அங்குள்ள ஒரு எந்திரத்தை வாய் வார்த்தையால் இயக்குவிப்பதும் ஆச்சரியமாக இருந்தது. அந்த இயந்திர மனிதன் பேசத்தொடங்கி "நான்தான் உலகிலேயே பெரியவன், ஜார்ஜ் வாஷிங்டன், ஆபிரகாம் லிங்கன் முதலியவர்களைவிட நானே சிறந்தவன்" என்று சொல்வானும். பிறகு "உட்கார்ந்தபடி இருந்து கொண்டு எனக்காக இயந்திரங்களை வேலை செய்யும்படி கட்டளை இடுபவன் நான் தான்" கூடிய சீக்கிரத்தில் ஏராளமானவர்கள் என்னைப்போல் ஆகிவிடுவார்கள் என்று சொல்லிவிட்டு, ஓர் எந்திரத்தைப் பார்த்து "ஓர் வேலை செய்" என்று சொன்னவுடன் அந்த எந்திரம் தானாகச் சென்று நிலத்தை உழத்தொடங்கி ஆழமாகவும் ஒழுங்காகவும் சிறிதுநேரம் உழுதபின் "நில்" என்று அந்த எந்திர மனிதன் சொல்ல அந்த எந்திரக் கலப்பை தானாக வந்து முன் இருந்த இடதில் நின்றுவிடுகிறதாம். இந்த எந்திர முறையின் அதிசயத்தைக் கண்ணுற்றவர்கள் பிற்காலத்தில் மனிதனுடைய தேவைக்கான எல்லாக் காரியங்களும் மனிதனுடைய ஏவல்படி எந்திரங்களால் செய்து முடித்துக் கொள்ளக் கூடுமென்று எண்ணுகின்றனர்.

விபத்து:—பாம்பேயைச் சேர்ந்த பெல்காம் ஜில்லாவில் மாஞ்சேரிக்கடுத்த கிருஷ்ணா நதியில் ஓர் படகு விபத்து ஏற்பட்டது. அவ்விபத்தில் படகிலிருந்த 200 ஜனங்கள் ஆற்றில் மூழ்கி கோர மரணமடைந்தனர்.

தொழிலாளர் தலைவன் மோசம்:—சென்னை தங்கசாலைத் தெருவில் தொழிலாளர்களுக்குத் தான் தலைவனென்று பாசாங்கு செய்து ஏழைகளை ஏமாற்றி பணம் பரித்து டி. எம். பார்த்தசாரதி யென்பவன் தொழிலாளர் பாங்கி என்ற ஒன்றை ஸ்தாபித்து அதன் மூலமாக ரூபா 4000—மோசஞ் செய்து எடுத்துக்கொண்டு ஓடிவிட்டான்.

கடை கொள்ளைபோயிற்று:—சேலம். 4-10-34 காலை 9 மணிக்கு குகை-திருச்சி ரோட்டிலுள்ள ஒரு கடையில் சிலர் அரிசி விலைக்கு வாங்க வந்தனர். அரிசி விலை உயர்ந்து விட்டதால் மண்டிக்காரர் ஏற்கனவே உள்ள விலையைவிட மூட்டை 1-க்கு 3-8-0 அதிகம் சொன்னார். திடீரென்று இவ்வளவு விலை அதிகம் சொன்னதால் வாங்க வந்தவர்களுக்கும் மண்டிக்காரருக்கும் தர்க்கம் நடந்தது. இதைப் பார்க்க ஏராளமான ஜனங்கள் அங்கு கூடினர். அப்போது மண்டிக்காரர்களுக்கும், ஜனங்களுக்கும் வார்த்தை மிஞ்சிப்போனதால் ஜனங்கள் திடீரென்று கோபமடைந்து கடையைக் கொள்ளையிட்டனர். உடனே போலீசார் அங்கு வந்து தடுத்து காவல் செய்தனர்.

மற்றொரு கொள்ளை:—வடக்கே பவல்பூர் என்னுமிடத்தில் கால்பந்து போட்டி பந்தயம் நடந்தது. அதைப் பார்க்க ஏராளமான ஜனங்கள் கூடினர். கூட்டத்தை அதிகம் கண்டதும் டிக்கட்டு விலையை இரட்டிப்பாக்கினர். இதனால் ஆத்திரமடைந்த ஜனங்கள் கோபமடைந்து அங்கு போட்டிருந்த பந்தல், அடைப்பு முதலியவைகளை எல்லாம் பிரித்தெறிந்து உட்புகுந்து பெஞ்சி, நாற்காலி முதலியவைகளை எல்லாம் உடைத்துவிட்டு, டிக்கட்டு விற்று வைத்திருந்த பணத்தையும் கொள்ளையிட்டு கொண்டுபோய் விட்டனர்.

எரிமலை பயம்:—பரோடா சமஸ்தான எல்லைக்குட்பட்ட தேவ் என்ற நதிக்கரையில் ஸெமால்டா என்ற ஒரு கிராமம் இருக்கிறது. அக்கிராமத்தில் எரிமலை உண்டாவதற்கான அறிகுறிகளுடன் பூமியதிர்ச்சியும் உண்டாவதால் அங்கு எரிமலை உண்டாகக்கூடுமோ வென்று ஜனங்கள் நடுக்கமடைந்திருக்கின்றனர்.

ஜப்பான் சூராவளி:—சென்ற செப்டம்பர் 25-தேதி வாக்கில் சுமார் 4-கோடி பவுன் நஷ்டம் ஜப்பானில் ஏற்பட்ட பெரும் சூராவளியால் பல ரயில் வண்டிகள் கவிழ்ந்தன. சுமார் 5000 கட்டடங்கள் அழிந்தன. கடலில் 2500 மீன் பிடிக்கும் படகுகள் நாசமாயின. ஆயிரக்கணக்கான ஜனங்கள் மாண்டனர். பள்ளிக்கூடங்கள் இடிந்து விழுந்ததில் அநேக குழந்தைகள் மாண்டன. இம்மாதிரி சூராவளி சுமார் 30 வருஷ காலத்திற்குள் அங்கு ஏற்பட்டதில்லை யென்று சொல்லப்படுகிறது. 1923—ல் ஏற்பட்ட பூகம்பத்தால் உண்டான நடுக்கம் நீங்காதிருக்கையில் சூராவளி ஏற்பட்டது ஜப்பானின் துரதிர்ஷ்டந்தான்.

பெண்களின் உயர்வு அந்தந்தப் பெண் தன் பாக்கியத்துக்குத் தகுந்ததாகப் பெறுகிற உத்தம கணவனைப் பொறுத்திருக்கிறது. படுபாவியான ஒரு சண்டாள நாயகனின் கையில் சிக்கின் உயர்த்தப்படுவது எங்ஙனே?

"உங்களைப்பற்றி எனக்கு ரொம்ப நாளாகத் தெரியும்" என்று என்னைக் குறித்து நீங்கள் புகழ்வதனாலேயே எனக்குப் பெருமை வந்து விடாது. நான் பெருமையைக் கவனியாமல், என் மட்டில் நான் சரியாக நடந்து கொள்கிறேனா என்பதையும், என்னைப்பற்றி எவரேனும் தூஷிக்கின்றனரா என்பதையும், அவ்விதம் பிறர் நிந்தை பேசும்படியாக என்னிடத்தில் என்ன தவறு இருக்கிறதென்பதையுமே நான் முக்கியமாகக் கவனிப்பவனாயிருக்கிறேன்."

மாயமாய்ப்போன மங்கை.

பால விவாகம்

சாரதாச் சட்டம்.

(479-வது பக்கத் தொடர்ச்சி.)

(*Mrs. Neelakanta Sastri Rajammal.*)

பத்மநாபன்:—என்ன அமிர்தவல்லி அப்படிச் சொல்லிவிட்டாய் நீ. யாராயிருந்தாலென்ன? பணக்காரியானு லென்ன? ஏழையானு லென்ன? உன் அழகுக்கும், படிப்புக்கும், உன் சாமர்த்தியத் துக்கும் போட்டி போட்டல்லவோ உன்னைக் கொள்ள வரு வார்கள்.

அமிர்தவல்லி:—என்மேல் உங்களுக்கு உள்ள வாஞ்சையால் அப்ப டித் தோன்றுகிறதாக்கும். என்னமோ என் எண்ணத்தை ஈசன் தான் அறிவார்.

பத்மநாபன்:—என்ன! உன் எண்ணத்தில் யாரையேனும் வரித்திருக் கிருயா? அதையாவது சொல். எப்படியானுலென்ன? உன் இஷ்டத்துக்கு மாருக நாங்கள் எதுவும் செய்யத் துணியோம்.

அமிர்தவல்லி:—ஏழையாகிய என்மீது இரக்கம் வைத்து இவ்வளவு தூரம் கேட்டதே எனக்கு எல்லாம் கைகூடிய மாதிரிதான். இனி நான் சொல்ல என்ன இருக்கிறது?

பத்மநாபன்:—சரி அப்படியானுல் விவாகத்துக் கேற்பாடு செய்ய லாமா?

அமிர்தவல்லி:—யாருக்கு?

பத்மநாபன்:—உனக்குத்தான்.

அமிர்தவல்லி:—எனக்கா?

பத்மநாபன்:—ஆம் உனக்குத்தான். பின் யார் கலியாணத்துக்கு இப்பொழுது இருப்பது?

அமிர்தவல்லி:—நான் இஷ்டப்பட்டா லல்லவோ கலியாணம்?

பத்மநாபன்:—நீ இப்பொழுதுதானே இஷ்டப்பட்டுச் சொன்னுய்?

அமிர்தவல்லி:—நன்றாயிருக்கிறது. நானாக இஷ்டப்பட்டா சொன்னேன். அதுவும் உமது நண்பரை மணந்துகொள்ள........

பத்மநாபன்:—நீ பின் யாரைச் சொன்னாய்?

அமிர்தவல்லி:—இதற்கு பதில் என்னால் சொல்ல முடியவில்லையே. உம்மால் தெரிந்துகொள்ள முடியாதோ? என்று மிகவும் கூர்மையாகப் பத்மநாபனைக் கவனித்தாள்.

பத்மநாபன்:—என்னால் எப்படித் தெரிந்துகொள்ள முடியும். நீயாகச் சொன்னாலல்லவோ தெரிந்து கொள்ளலாம்.

அமிர்தவல்லி:—நிச்சயமாகத் தெரிந்து செய்வீரா?

பத்மநாபன்:—ஆம், நிச்சயமாகச் செய்வேன்.

அமிர்தவல்லி:—பத்மநாபனது கைகளைப் பிடித்துக் குலுக்கிக் கொண்டு உம்மைத் தவிர நான் வேறொருவரையுமே எண்ணவில்லை. ஆகையால் என்னை நீங்கள் ஏற்க முடியுமா?

பத்மநாபன் இவ்வார்த்தைகளைக் கேட்டவுடன் திகைத்தான்.

அமிர்தவல்லி:—பார்த்தீர்களா உம்மால் நான் ஏற்கப்படமாட்டேனென்று எண்ணித்தான் நான் சொல்ல மறுத்தது.

பத்மநாபன்:—ஆமாம்! ஏன் நீலா என்ன எண்ணுவாள்? அவள் வெறுப்பையன்றோ நாடும்படி செய்யச் சொல்கின்றாய்.

அமிர்தவல்லி:—இவ்விஷயங்களை யோசித்துத்தான் நான் என் வாழ்நாளைத் தனியாகவே கழிக்கத் தீர்மானித்தேன். என்னைக் கலங்கவைத்து விட்டீர்கள். இனி பூமிக்குச் சுமைதான் நான். கடவுளே என்று நாற்காலியிலிருந்து பொத்தெனச் சாய்ந்து விட்டாள். அவளது நிலைமையைக் கண்ட பத்மநாபன் மிகவும் கலங்கிப் போய்விட்டான். உடனே அவளை எடுத்துச் சாத்திக்கொண்டு விசிறியால் விசிறி அவளது நினைவு திரும்பும்படி செய்தான். அவன் மனதில் பலவித எண்ணங்கள் எல்லாம் தோன்றிவிட்டன; உடனே அமிர்தவல்லி, கவலை கொள்ளாதே உன்னைக் கண்டிப்பாகக்கொள்வேன் என்றவுடன் அவள் முகத்தில் புன்னகை தவழ்ந்து பத்மநாபனை நோக்கினாள். இருவரும் விழிகளாலேயே கணவனும் மனைவியு மாயினர். இனி அவர்களுக் கென்ன? கலியாணப்பந்தல் போடவுமில்லை, தாலி செய்யவுமில்லை; இவ்விதமான ஒரு சடங்கும் நடத்தக்

கூடாது. ஆனல் கொண்ட மனைவிபோல் ஸ்வதந்திரமாகத்தானிருக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டாள் அமிர்தவல்லி. எப்பொழுதுமே அவள்பேரில் வைத்த பிரியம் அவளால் தூண்டப்பட்ட விளக்குப்போல் பிரகாசித்ததால், பத்மநாபன் மிகுந்த மகிழ்ச்சியுடன் உலகத்தையே அதிலும் தன் சொந்த மனையாளைக்கூட மறந்தவனுகி, அவள்பேரில் நூதன வாஞ்சை கொண்டுவிட்டான். அவ்வளவே தாமதம். இனி அரைக் கணமும் தனித்திருக்க வேண்டியதில்லையென்று அவளுடைய சாமான்களுடன் தன் மோட்டாரில் அவளையும் ஏற்றி உட்கார வைத்துக்கொண்டு வீடு நோக்கி வந்துகொண்டிருந்தான். அவர்கள் வீட்டில் தன் கணவன் சென்று வெகு நேரமாகியும் இன்னும் வராமைக்குக் காரணம் தெரியாளாய் நீலா பலவித எண்ணங்களால் கவலை கொண்டிருந்தாள். அச்சமயம் மோட்டார் வரும் சப்தங் கேட்க ஆவலாக வாயிற்படியண்டை சென்று தன் கணவர் வருகையைக் கவனித்தாள். இது என்ன ஆச்சர்யம்! தன் கணவனும், அமிர்தவல்லியும் கை கோத்துக்கொண்டும் சிரித்துக்கொண்டும் வெகு உல்லாசமாக அன்ன நடை நடந்துவருவது நிச்சயந்தானு, அல்லது என் கண் பேதலித்துவிட்டதா என்று கண்ணைக் கசக்கிப் பார்த்தனள். இல்லை, நிச்சயமாக ஊர்கோலம் சென்ற தம்பதிகள் காரிலிருந்து இறங்கிவருவதுபோலத்தானிருக்கிறது. ஆலத்தி இங்கே கரைத்துவைக்கக் காணேம். மேளசத்தங் கேட்டாலல்லவோ ஆலத்தியெடுக்க வேணும். நீலாவின் மனது கலக்கங் கொண்டுவிட்டது. நின்றவிடத்திலிருந்து விழுந்து விடுவாள்போலச் சுற்றியது. அவள் எண்ணத்தில் உலகமே பிரளயத்தில் முழுகுவதாகத் தோன்றியது. அவள் மனம் பதைத்துத் துடித்தது. நான் அமிர்தவல்லியைப்பற்றி எண்ணிய எண்ணம் ஸரியாகவே முடிந்தது. சீ! இது என்ன வெட்கங்கெட்ட தனம்? என் புருஷருங்கூட என்ன இப்பேர்ப் பட்டவரா. நான் நம்பவில்லையே என்று மிகுந்த பரபரப்பாக உள்ளே சென்று விட்டாள்.

உள்ளே வந்த அமிர்தவல்லியும் பத்மநாபனும் வெகு தாராளமாக அங்குள்ள ஹாலில் உட்கார்ந்தார்கள். கொஞ்ச நேரங் கழித்தவுடன் நீலா தன் புருஷனைப் போஜனத்திற் கழைக்க

அவ்விடம் வந்தபொழுது பத்மநாபன் நீலாவைப் பார்த்து, நீலா! உனக்குத் துணையாகவும் உனக்குச் சகோதரியாகவும் அமிர்தவல்லியை ஏற்றுக்கொள்வாயா? என்றான்.

நீலா:—அதற்கென்ன தடை; இத்தனைநாள்பட்டும் நான் அவளை வேறாக மதித்தேனா என்ன? எப்பொழுதுமே நான் ஓரே அபிப்பிராயமுடையவள் என்பது உங்களுக்குத் தெரியாதா?

பத்மநாபன்:—ஆம் உன் சாந்தகுணம் நானறியாததல்ல.

அமிர்தவல்லி:—உடனே எழுந்து, அக்காள் நீலா! இனி நம்மிருவரையும் அவர் சமமாகவே எண்ணுவார். நான் ஏதாவது தெரிந்தும் தெரியாமலும் குற்றம் ஏதேனும் செய்திடினும், அதை நீ பொறுத்துக்கொள்ள வேண்டும் என்று நான் உன்னை மிகவும் வேண்டிக்கொள்கிறேன்.

நீலா:—அமிர்தம்! என்ன இப்படிப் பேசுகிறாய்? நமக்குள் குற்றமென்ன? மன்னிப்பென்ன? என் கணவரல்லவோ அதற்கதிகாரி.

அமிர்தவல்லி:—அக்கா உன் கணவர் மட்டுமல்ல. அவர் எனக்கும் கணவர்தான். ஆகையால் நாமிருவரும் சமமாயிருப்போம்.

நீலா:—எனக்கு எல்லாம் ஸமம்தான்; நீ அவரைக் கூசாமல் கொண்ட கணவன் என்று கூறுவது பொருந்துமா? அக்கினி சாக்ஷியாக மணந்துகொண்ட நானும் நீயும் அவருக்குச் சமமாகுமா? இவ்வார்த்தை தெய்வத்திற் கேற்காது. ஏதோ என்னைவிட அவருக்கு நீ பிரியமுள்ளவளாக வேணுமானால் இருக்கலாம். எனக்காக நீ பயப்படவேண்டியதில்லை. எப்பொழுது என் கணவர் ஒன்று சொல்லி ஏற்படுத்துகிறாரோ அதுதான் எனக்குச் சரியானது. என்னைவிட மேலாகவே நீ இந்த வீட்டிலிருக்கலாமே யொழிய நானும் நீயும் ஒன்றென்ற வார்த்தையை மட்டும் இனி ஒருமுறை சொல்லாதே. என்று தன் கணவனைப் பார்த்து என்ன நான் சொல்வது சரிதானா? என்றாள்.

பத்மநாபன்:—ஆரம்பத்திலேயே இவ்விதமாக நீங்கள் மனஸ்தாபம் பட்டால் காலம் முழுவதும் எப்படித் தள்ளுவது?

(தொடரும்.)

"அமிர்த குணபோதினி"

பவஹுலத்திய ஐப்பசி மாத பஞ்சாங்கம்.

யோகம்	இங்	தமிழ்	வார	திதி, நக்ஷத்திரம், விரதாதிகள், முதலியவை.
சி-பி	17	1	புத	நவ 9-32, ஶ்ரூவ 30-35, மஹாநவமி. விஜயதசமி, [சரஸ்வதி பூஜா தசமிதுதி.
சி-ம	18	2	வியா	தச-3-50, உப-54 7, அவி-26-39, துளசி விரதம்.
சி	19	3	வெ	துவா-52-0, சத-22-31, வைஷ்ணவைகாதசி.
ம-சி	20	4	சனி	திர-46-12, பூட்-18-24, சனிப்பிரதோஷம்.
அ	21	5	ஞா	சசி-40-50, உட்-14-36, மயூரம் ரதம்.
சி	22	6	திங்	○ 36-12, ரே-11-27, மஹா பூர்ணிமை.
சி	23	7	செவ்	பிர-32-4, அசு 9-13, ஸ்வாதி கிருத்திகை.
சி-அ	24	8	புத	துவி-30-35, பர-8-17, விருச்சிகாயனம் 5-5 கிருத் [திகை.
ம-உ	25	9	வியா	திரி-30-15, கிரு-8-51, சந்திரோதய கௌரீவிரதம்.
ம-சி	26	10	வெ	சது-31-45, ரோ-11-14,
சி	27	11	சனி	பஞ்-35-8, மிரு-15-21,
சி	28	12	ஞா	ஷஷ்-40-4, ஆரு-21-3
அ-சி	29	13	திங்	ஸப்-46-10, புந-28-3,
சி	30	14	செவ்	அஷ்-52-46, பூச-35-44 சத்தி.
சி	31	15	புத	நவ 59-12, ஆயி-43 56.
அ-சி	1	16	வியா	தச-60-0, மக-50-30.
சி	2	17	வெ	தச-4-53, பூர-56-21.
உ	3	18	சனி	ஏகா-9-10, உத்-60 0, ஸர்வைகாதசி.
அ	4	19	ஞா	துவா-11-54, உத்-0-45, பிரதோஷம்.
சி-பி	5	20	திங்	திர-12-54, ஹஸ்-3-26, சிவராத்திரி ராத்திரி நரக சதுர்த்தசி ஸ்நானம்.
சி	6	21	செவ்	சசி-12-13, சித்-4-35, தீபாவளி, கோதரகௌரீவிர [தம்.
சி	7	22	புத	● 10-7, ஸ்வா-4-16, ரிஷப பூஜா.
சி	8	23	வியா	பிர-6-51, விசா-2-44, விக்ரமசகம்.
சி-ம அ	9	24	வெ	துவி-2-43, உப-55-17, அநு-0-22, உப-57-3, திரிலோசன கௌரீ பூஜா.
சி	10	25	சனி	சது-52-56, மூல-54-8, தூர்வாகணபதீ விரதம்.
சி-அ	11	26	ஞா	பஞ்-47-46, பூரா-50-41, திருச்சானூர் தீர்த்தம்.
ம-அ	12	27	திங்	ஷஷ்-42-36, உரா-47-16, சூரசம்ஹாரம் ஷஷ்டி.
சி	13	28	செவ்	ஸப்-37-35, ஶ்ரூவ-43-56, திருக்கச்சூர்பார் வேட்டை
பி-சி	14	29	புத	அஷ்-32-30, அவி-40-45. பூதத்தாழ்வார் புதாஷ்டமி
ம-சி	15	30	வியா	நவ-27-45, சத-37-47, விருச்சிகரவி 47-39, துலா ஸ்னன முடிவு.

	15உ-உதயத்திற்கு ராசி		கேது
சனி ராகு			குஜ
		ர-சுக் பு-கு	

Printed & Published by the Proprietor E. M. Gopalakrishna Kone,
at the Amirtha Gunabodhini Press, 158-A, Broadway, Madras.